விலை : 20.00
பக்கங்கள்:-பதினாறு+பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 15 ஞாயிற்றுக்கிழமை (29.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100

# ஐ.நா கூட்டத் தொடருக்கு முன் நாட்டில் பொதுத் தேர்தல்!

## ஜனாதிபதி தலைமையில் கூடி ஆராய்வு

(கொழும்பு)

செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடருக்கு முன்னர் கட்டாயம் பொதுத் தேர்தலை நடத்துவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தொகுதிவாரி முறையில் இந்த பொதுத் தேர்தல் நடத்தப்பட உள்ளதுடன் தொகுதிகளை நிர்ணயம் செய்யும் பணிகளை துரிதமாக முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## விசாரணைக் குழுவிற்கு மேலதிக நிதியில்லை

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஐ.நா விசாரணை குழுவிற்கு மேலதிக நிதி ஒதுக்கப்படமாட்டாது என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை இதனை தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்த குற்றச்சாட்டுக்கள்

15ஆம் பக்கம் பார்க்க

## பிரதமர் இன்று முல்லை. பயணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கிற்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிற்பகல் 2.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் மற்றும் உத்தியோகஸ்தர்களுடனான சந்திப்பொன்றை நிகழ்த்தவுள்ளதோடு. மாலை 3.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்திற்கான ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தை திறந்துவைக்கவுள்ளதாக அக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் இந்திரன் சுஜிந்திரன் தெரிவித்துள்ளார்.(எ-281)

## புலிகள் மீதான தடையை நீடித்தது ஐரோ.ஒன்றியம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பையும் கவனத்திற் கொள்ளாது ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளின் தடையை நீடித்துள்ளது என வெளியுறவுத்துறை பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையிலான அரசாங்கத்தினால் விடுதலைப் புலிகளின் தடையை நீடிக்க முடிந்துள்ளது என்றும் பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## 2 ஆயிரம் விடுதலைப் புலிகள் மறைந்து வாழ்கின்றனர்

(கொழும்பு)

இறுதிப் போரின்போது சரணடைந்த 12 ஆயிரத்து 346 விடுதலைப் புலிகளில் 6 முதல் 7 வீதமானவர்கள் கரும்புலிகள் என்ற தற்கொலை பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## எனக்கா..., உனக்கா...!




உலகக் கிண்ண கிரிக்கெட் 2015 இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா -நியூசிலாந்து இன்று பலப்பரீட்சை.

## பாதுகாப்புக்கு குந்தகமின்றி மீள்குடியேற்றம் இடம்பெறும்

### பிரதமர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்களின் கோரிக்கை நியாயமானதே என தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படாத வகையில் மக்கள் அவர்களது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றப்படுவர் என தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினமும் நேற்றைய தினமும் யாழ். மாவட்டத்தில் பல சந்திப்புக்களில் ஈடுபட்டிருந்தார் இதில் நேற்றைய தினம் கே.கே.எஸ்ஸில் உள்ள கடற்படை தலைமையகத்தில் கடற்படையினருடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மக்களின் பிரச்சினைகளிற்கு தீர்வு காணப்படுவதுடன் வடக்கில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை

15ஆம் பக்கம் பார்க்க

## உள்ளே...




## விகிதாசார தேர்தல் முறை இரத்து எம்.பிக்கள் எண்ணிக்கை 255!

### அரசின் திட்டம் இது

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள பொதுத் தேர்தலில் விகிதாசார முறை இரத்துச் செய்யப்பட்டு தொகுதி வாரியாக தேர்தல் நடத்தப்பட உள்ளது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 255 ஆக அதிகரிக்கப்பட உள்ளது. தொகுதி வாரியாக 160 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 22 மாவட்டங்களின் விகிதாசாரத்தின் அடிப்படையில் 70 உறுப்பினர்களும் தேசிய பட்டியல் மூலமாக 20 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

20 தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 5 பெண்களை நியமிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இந்த தேர்தல் முறை மாற்றத்தை 20-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் முறை மாற்றம் பேச்சு 31ஆம் திகதி

(கொழும்பு)

உத்தேச தேர்தல் முறையை மாற்றியமைப்பது தொடர்பான அடுத்த கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 31-ம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே பௌத்த மத விவகாரங்களுக்கான அமைச்சர் கரு ஜயசூரிய இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள

15ஆம் பக்கம் பார்க்க

புத்தாண்டில் அனுகூலம் பெருகட்டும் SONY
10 year warranty
SISIL saves energy up to 50%
SISIL WORLD
வட்டி இல்லை
விலை கழிவு 3000/=
ரூ.41,999/=
இல.106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212219291
இல.125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் தொ.பே.0212242335
இல.17/3, கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே.0212283755
இல.106, கண்டி வீதி, வவுனியா. தொ.பே.0778561406
40" SONY வட்டி இல்லை விலை கழிவு 33300/= ரூ.133,299/=
32" வட்டி இல்லை விலை கழிவு 6000/= ரூ.59,999/=
24" வட்டி இல்லை விலை கழிவு 10700/= ரூ.37,699/=
(த-476)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆறுதல் நிறுவனத்தில் இன்று கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

நிலத்தடி நீர் மாசடைதல் என்ற விடயப் பொருளிலான கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு இல. 51, வைமன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந் துள்ள ஆறுதல் நிறுவனத்தில் நடைபெறும்.

நிறுவனத்தின் அமைப்பாளரும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், உள மருத்து நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் ஆகியோர் வழிப்படுத்துவர். (ந)

# ஆண்டுவிழாவும் சான்றிதழ் வழங்குதலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செப்புத்தகட்டு புடைப்புச் சித்திரக் கழகத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கே.கே.எஸ் வீதியில் உள்ள கழக மண்டபத்தில் நடைபெறும்.

சு.இரத்தினகோபால் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண தேசிய அருங்கலைகள் பேரவையின் உதவிப் பணிப்பாளர் க.நவதர்ஷன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி மஞ்சுளா ஸ்ரீரங்கதாஸ் கலந்து கொள்கிறார். (எ-11)



படம் : உ.சாளின்

காங்கேசன்துறைக்குச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு படையினருடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# மத்தியஸ்தத்தைப் பேண ஜனாதிபதி வலியுறுத்தல்



(கொழும்பு)

வெளிநாட்டுக் கொள்கையின் போது தமது அரசாங்கம் மத்தியஸ்த போக்கை கடைபிடிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சீனாவின் ஹேனான் மாகாணத்தில் நேற்று ஆரம்பமான வருடாந்த போஆ மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்களிடையே வருமான இடைவெளியை குறைத்து வறுமையை ஒழிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

உலகத் தலைவர்கள் மற்றும் சர்வதேச வர்த்தக சமூகத்தினர் ஒரே மேடையில் கூடி கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் மாநாடாக போஆ மாநாடு கருதப்படுகின்றது.

நேற்று முற்பகல் ஆரம்பமான இந்த மாநாட்டில் 15 அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர்

வறுமையை ஒழித்து மக்களுக்கு நிலையான அபிவிருத்தியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது தொடர்பாக இம்முறை மாநாட்டின்போது விரிவாக ஆராயப்படுகின்றது.

மாநாட்டைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுவீடன பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (எ-11)

# வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்ய அமைச்சரவை பத்திரம் தாக்கல் !

## பிரதமர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களினை அபிவிருத்தி செய்வதற்கு மீள்குடியேற்ற அமைச்சும் கல்வியமைச்சும் இணைந்த அமைச்சரவைப் பத்திரமொன்றினை தாக்கல் செய்யவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை தேசிய பாடசாலை அதிபர்களுடனான சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளில் காணப்படுகின்ற குறைப்பாடுகளினை கூறியிருந்தனர்.

இதனால் தான் கல்வியில் உயர் நிலையை எட்ட முடியாது நிலை காணப்படுவதாகவும் சில அதிபர்கள் ரணிலிடம் கூறியிருந்தனர்.

இதனைக் கேட்ட அவர் நான் உங்கள் குறைகளை கேட்பதற்கு வரவில்லை. பாடசாலையை எவ்வாறு அபிவிருத்தி செய்யவேண்டும் எனக் கூறுங்கள் என கூறினார்.

பின்னர் வடக்கில் உள்ள தேசிய பாடசாலைகளில் உள்ள குறைகள் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சரும், கல்விமைச்சரும் விசேட கவனம் செலுத்தினர்.

ஆறுமாத காலத்திற்குள் உரிய முன்னேற்றத்தினை எட்டாத பாடசாலைகளின் அதிபர்கள் இடமாற்றம் செய்யப்படுவர் எனவும் அவர் எச்சரித்துச் சென்றுள்ளார். (எ-4)

# புலிகளின் மீதான தடை நீடிப்பு நன்றி தெரிவித்தார் ரணில் !



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீடித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து நன்றி தெரிவித்துள்ளார்.

பலாலியில் நேற்றைய தினம் முப்படையினர், பொலிஸார் மத்தியிலும் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையினை ஐரோப்பிய நீதிமன்றம் முன்னர் நீக்கியிருந்தமை தவறான விடயமாகும்.

இதுதொடர்பில் எமது அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெரியப்படுத்தியதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீடித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்தமைக்கு நாம் நன்றி தெரிவிப்பதோடு நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு உதவிய முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் நன்றிதெரிவிக்கின்றோம் என்றார். (எ-4)

# 19ஆவது திருத்தச் சட்டத்தின் 2 ஆவது வாசிப்பு ஏப்ரல் 9,10 இல்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுக்கும் 19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான இரண்டாம் முறை வாசிப்புமதான விவாதம் ஏப்ரல் 9 மற்றும்10 ஆம் திகதி களில நடைபெறவுள்ளது.

இந்த விவாதத்திற்காக நாடாளுமன்றத் தில் பத்தரை மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளு மன்றத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல் நாள் விவாதம் ஏப் ரல்9 ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல பிற்பகல் 7.30 வரை நடை பெறவுள்ள துடன் இரண்டு நாள் விவாதம் பிற் பகல் 1.30 முதல் பிற்பகல் 6.30 வரை நடைபெறவுள்ளது. கட்சி தலைவர்கள் இதற்கு இணக்கத்தை வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் 19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது எனக் கூறி, உயர் நீதிமன்றத்தில் 3 மனுக் கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் ஏப்ரல் முதலாம் மற்றும் 2 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதுடன் உயர் நீதிமன்றம் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் தீர்ப்பை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பி வைக்க உள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# லசந்த கொலை வழக்கு குறித்து கருத்துக் கூற கோத்தபாய மறுப்பு



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளரான லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதினால் எவ்வித கருத்துக்களையும் வெளியிட முடியாது என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றிற்கு நேற்றுக் காலை வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு தொடர்பு உள்ளது என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா குற்றப்புலனாய்வு பிரிவிடம் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் குறித்த ஊடகம் வினவிய கேள்விக்கே முன்னாள் பாதுகாப்பு செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சிலர் நாடாளுமன்ற வரப்பிரசாதங்களுக்கு அடிமையாகி ஊடகங்களின் முன்பாக தன்னிலை மறந்து உண்மைக்கு புறம்பான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனவும்,

லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினால் அது குறித்த விமர்சனங்களை முன்வைப்பது தவறு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)


## வேலையாள் தேவை

VCARF MOTORS கடைக்கு விற்பனையாளராக பெண் வேலையாள் தேவை. (9926)

T.P : 077 854 9267 / 077 614 1928

## பழுது பார்த்தல்

அனைத்து விதமான தையல் மிசின்களும் கடைகளிலும் வீடுகளிலும் வந்து திருத்திக் கொடுக்கப்படும். (9925)

சூரி-0770258694

## வீடு விற்பனைக்கு

பழம்றோட், ஆறுகால்மடம் என்னும் முகவரியில் 2 1/2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உள்ளது. (9923)

தொடர்புகளுக்கு :- 077 203 7799

## அக்ஷயா

- இந்திய புதிய முறை பிளவுஸ்கட்டிங்(6), பஞ்சாபி (4) பயிற்சிகள் ஆரம்பம்.
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாள்பட்ட பருக்கள், கடும்கறை அகற்றும் கிறீம்.
- கண்கருவளையம் அகற்றும் கிறீம், உதட்டு கருமை நீக்கும் கிறீம்.
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா, டொனிக், குளிசை.
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னமாக்கும் குளிசை.
- மார்பு அழகு சிகிச்சை கிறீம், குளிசை.
- தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் என்பன விற்பனைக்கு உள்ளன.
- கறுப்பு நீக்கும் வைற்றிங் பேசியல், கோல்ட் பேசியல் செய்து கொள்ளலாம்.

(9922)

அக்ஷயா 221, நாவலர்றோட், யாழ்ப்பாணம். 077 210 6155
(பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிக்கேஷன் அருகில்)

## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண்/பெண் வேலை ஆட்கள் தேவை.
(யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதி விரும்பத்தக்கது) (9927)

T.P :- 077 202 6295

## வாழ்க்கையில் வெறுப்பா ?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது (C-342)

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

## Free Home Delivery

Jaffna Peninsula

19.5 Lits - Pure Drinking WATER
Rs 220.00 (9916)

G.S.B - MARKETING
174, Navalar Road, Jaffna.
021 - 7201660, 077 - 1042244

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-474)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆய்வு கூடம் நேற்று முன்தினம் பாடசாலை மாணவர் ஒருவரினால் நாடாவெட்டி திறந்து வைக்கப்படுவதையும் இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# பாடசாலைகளில் நிதிசேகரிப்பதை தடுத்து நிறுத்த அரசு தீர்மானம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பாடசாலைகளில் பெற்றோரிடமிருந்து நிதி திரட்டப்படுவதை நிறுத்தி பாடசாலைகளுக்கு தேவையான நிதிகளை அமைச்சின் ஊடாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் இந்த நடைமுறை அடுத்த வாரம் முதல் அமுல்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

இதன் முதற் கட்டமாக நாடளாவிய ரீதியிலுள்ள 351 தேசிய பாடசாலைகளுக்கு 45 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர் மத்தியில் தற்போது விளையாட்டு குறித்த ஆர்வம் குறைந்து வருகின்றது.

இதனால் மாணவர்கள் மத்தியில் விளையாட்டு துறையை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டில் தேர்ச்சி பெற்ற கல்வியாளர்கள் சிறப்பு செயன்முறைப்படி பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# மாவட்ட ரீதியான தாச்சிப் போட்டி

(மானிப்பாய்)

நல்லூர் கந்தர்மடம் ஜனசக்தி சனசமூகநிலையம் யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் மாவட்ட ரீதியான தாச்சிப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையத்தால் இலவசமாக நடத்தப்பட்டு வரும் முன்பள்ளி வளர்ச்சி நிதிக்காகவே இப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

போட்டிகள் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் இன்று இடம்பெறவுள்ள அரையிறுதிப் போட்டியொன்றில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியும், மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாக கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (இ-3-23)


## தொழில்வாய்ப்பு

077 683 8231 இன்றே அழையுங்கள். நல்லதோர் தொழிலைப் பெற கொழும்பை அண்மித்த அதிநவீன தொழிற்சாலைகளான ஜாம், ரொபி, பிஸ்கட், கோடியல், பிளாஸ்டிக், கிளவுஸ் PVC போன்றவற்றிற்கு உற்பத்தி லேபல் களஞ்சியப் பிரிவுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/=- 32000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் வருகை அன்றே வேலை. (சி-502)

தொடர்புகளுக்கு:- 077 6838231,0771116770


# நிர்மலராஜா முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல்பீட முதலாம் வருட மாணவன் எஸ்.நிர்மலராஜா யாழ்.இந்துக் கல்லூரியில் இம்மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை நடைபெற்ற மேஜர் சதுரங்க சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இப்போட்டியில் இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இப்போட்டியில் இவர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதன் மூலம் தேசிய மட்ட B தர சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மைதானத்துக்கான காணி அதிபரிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மைதான விஸ்தரிப்புக்காக பாடசாலையின் பழைய மாணவர் சங்க லண்டன் சுவிஸ் கிளையினர் கடந்த 26ஆம் திகதி அருகில் இருந்த 7 பரப்புக் காணியை 14 இலட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்து பாடசாலை அதிபர் கா.குணசிங்கத்திடம் கையளித்துள்ளனர். (இ)

# 3 நூல்களின் வெளியீட்டு விழா

இலங்கை குமரித்தமிழ்ப் பணி மன்றத்தின் நிறுவுநர் நா.வை. குமரிவேந்தன் எழுதிய, "உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ்", "தமிழர் இலக்கிய இலக்கணம்(ஓர் அறிமுகம்)", "தமிழர் மெய்யியல் கோட்பாடு" ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3-23)


## வேலையாள் தேவை

தட்டாதெருவில் இயங்கும் கட்டடப் பொருள் விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் மற்றும் AD லைசன்ஸ் உடைய றைவர் ஒருவரும் தேவை. (9920)

தொடர்புகளுக்கு:-077 795 9924

## தேவை

கல்வி, சிங்களம் அவசியம் இல்லை. சம்பளம் 18000/ - 32000/ ஜாம், ரொபி, பிஸ்கட், காகில்ஸ்,PVC இன்னும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல் பொதியிடல் களஞ்சியப்படுத்தல் , Delivery பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண் பெண் உடனடியாக தேவை. சாப்பாடு, தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்.. (மட்டக்குளி, நாரம்பிட்டிய, சபுகஸ்கந்த, பியகம, நிட்டம்புவ, பஸ்யால, மகரகம, களனி, ஊர்கடவத்த, பெகலியகொட, பாணந்துறை, கோமாகம) (சி-501)

தொடர்புகளுக்கு:- 077 843 0179


# இராசி பலன்

29.03.2015
(பங்குனி 15, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
நவமி முற்பகல் 7.20 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 09.50 மணிவரை
இராகுகாலம் 4.43-6.13 மணிவரை
சுபநேரம் 9.13-10.43 மணிவரை
குருத்தோலை ஞாயிறு

வளவன்

**மேடம்:** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறைகாட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், உடன்பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், மனதிற்கினிய செய்திகள் வந்து சேரும் நாள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கடகம்:** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** திடீர் பயணங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** இளைய சகோதரர் வழியில் இனிய சம்பவமொன்று இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுற்றத்தாரின் வருகையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு

**தனுசு:** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு உட்பட நேரிடலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** சுப காரிய பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** கடன் பிரச்சினைகளை சுமுகமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**மீனம்:** பிள்ளைகளின் கல்வி நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியம் கைகூடும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்தநாள் நினைவும்



திதி :- தசமி 29.03.2015 (ஞாயிற்றுக்கிழமை)

திரு. பெரியதம்பி சண்முகம்

(ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர்)

அன்னை மடியில்
29.03.1930
ஆண்டவன் அடியில்
09.04.2014

நெஞ்சம் கனக்கிறது நேசவிழிகள் காயமறுக்கிறது. மும்மொழியும் செம்மையுற பேசிய வாய் மூடிக்கிடக்கிறது. மண்ணில் எந்த மனிதனையும் நோகாத மாண்பு உங்களுக்கே உரியது. ஆண்டவனாய் நின்று அனைத்தும் தந்தீர்கள். உங்கள் அன்பு முகம் காண ஏங்கி நிற்கின்றோம் என்றும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(C-498)







# ரணிலின் கனவு பற்றிக் கூறும் நிதி இராஜாங்க அமைச்சர் சரத்

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்த கனவு காண்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.**

இதனை புரிந்து கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சகல உறுப்பினர்களும் ஐக்கியத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாக பிளவுபட்டால் எமக்கே பாதிப்பு. பிரதேச சபைகளில் நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சினை ஏற்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டு அணிகள் ஏற்பட வேண்டும் என்பதே ரணில் விக்கிரமசிங்கவின் கனவு.

இதனால், பெரிய பிரச்சினைகள் பற்றி நாங்கள் பேச வேண்டியதில்லை. காலம் செல்லும் போது அந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும். நாம் கிராம மட்டத்தில் ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சுற்றியே நாம் முன்னோக்கி செல்ல வேண்டும். அதனை மகிந்த ராஜபக்ஷவும் விரும்புகிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவுபடுவதை மகிந்த ராஜபக்ஷ ஒருபோதும் விரும்பமாட்டார் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

அனைத்து உறுப்பினர்களும் ஐக்கியமாக செயற்பட்டால் அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கட்டாயம் வெற்றி பெறும் எனவும் சரத் அமுனுகம தெரிவித்தார். (இ)

# அகதிகள் தடுப்பு அவுஸ். வரவேற்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியா நோக்கி அகதிகள் பயணிக்காதிருக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவுஸ்திரேலியா திருப்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ரொபின் மூடி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா நோக்கி செல்லும் அகதிகளின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளது எனவும் இலங்கையின் இந்த நடவடிக்கைகளுக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# கொழும்பு துறைமுகநகர் குறித்த ஆவணங்களை வழங்க தாமதம்!

கொழும்பு துறைமுக நகரின் நிர்மாணப் பணிகள் மீளாய்வு செய்யப்படுகின்ற நிலையில், அது தொடர்பான ஆவணங்களை வழங்கப்பட்ட இரண்டு வாரகால அவகாசத்துக்குள் குறித்த நிறுவனம் வழங்க தவறிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் சீனாவின் முன்னெடுப்பு வேலைத்திட்டங்கள் ஊழல் அற்ற வகையில் வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்று விரும்புதாகவும் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள், சீனாவின் முதலீட்டாளர்களை பாதிக்கும் வகையில் இல்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், இலங்கையில் இந்தியாவையும்இணைத்து கொண்டு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் யோசனையை சீனா முன் வைத்துள்ளதாக அவர் தெரி வித்துள்ளார்.

சீன ஜனாதிபதி சீ ஜின்பின், இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த வேளையில், இந்த விடயத்தை கூறியதாக அவர் தெரிவித்துள்ளார். (இ)


# கண்ணீர் அஞ்சலி



திரு. ஐயாத்துரை ஜெகநாதன்

சாந்திகம் உளவளத்துணை நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு. ஜெகநாதன் தற்பரன் அவர்களின் அன்புத் தந்தையார் திரு. ஐயாத்துரை ஜெகநாதன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைந்துள்ளோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு சாந்திக அங்கத்தவர்கள், முகாமைத்துவ குழுவினர், பணியாளர்கள் அனைவரும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்திகம்,
இல.8,8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-500)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக முதலில் நடவடிக்கை எடுக்கவும்

## மகிந்தானந்த கோரிக்கை

(கொழும்பு)

முன்னைய அரசாங்க பிரதிநிதிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு முதல், 2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியினர் மேற்கொண்ட இலஞ்ச ஊழலிற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் நாங்கள் முறைப்பாடு செய்துள்ளோம்.

ஆனால் சம்பந்தப்பட்ட முறைப்பாடு தொடர்பில் இந்த அரசாங்கம், எவ்வித நடவடிக் கையும் இதுவரையும் மேற்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்பொழுது வரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் பலர் மீது தன்னிச்சையான முறையில் முறைப்பாடு முன்வைக் கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ)

## சின்மயாமிஷனின் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் இளைஞர் பிரிவாகிய சின்மய யுவகேந்திராவினரின் ஏற்பாட்டில் இவ்வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்கான (FB- Future Builder) எதிர்கால நிர்மாணி பயிற்சிப் பட்டறையின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது. (3)

## டுபாயிலிருந்து தங்கம் கடத்தியவர் கட்டுநாயக்கவில் வைத்து கைது

(கொழும்பு)


டுபாயில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு தங்கம் கடத்த முயன்ற ஒருவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் டுபாயில் இருந்து ஒரு கோடியே 33 இலட்சம் பெறுமதியான தங்க ஆபரணங்களை எடுத்து வந்த வேளையிலேயே விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

கல்முனையைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரே கட்டுநாயக்க சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

அதே வேளை கடத்தல் சம்பவத்திற்கு உதவியதாக கூறப்படும் இன்னொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



சொத்தழிவு சம்பந்தமான நடமாடும் சேவை யாழ். சாவகச்சேரி சிவன்கோவில் கலாசார மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். பத்மநாதன் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் பெற்றவர்களிடம் விசாரணை

இராஜதந்திர கடவுச் சீட்டுகளை கொண்டுள்ள வர்கள் எந்த காரணத்திற்காக அவற்றைப் பெற்றுக் கொண்டனர் என்பதை தெளிவுபடுத்துமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தின் போது பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வந்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், பல சிறப்புரிமைகளை வழங்கும் இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை பலருக்கு வழங்கியிருந்தது.

இது தொடர்பாக திணைக்களத்தின் அதிகாரிகள் மீளாய்வு பணிகளை மேற்கொண்டனர். இதனையடுத்தே ராஜதந்திர கடவுச்சீட்டுக்களை கொண்டுள்ளவர்கள் எப்படி, எந்த காரணங்களின் அடிப்படையில் அவற்றை பெற்றுக் கொண்டனர் என்பது குறித்து தமக்கு தெளிவுபடுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் உதவி கட்டுப்பாட்டாளர் டி. சௌசா தெரிவித்தார்.

முன்னாள் ஆட்சியாளர்களின் கீழ் இயங்கிய ஜனாதிபதி செயலகம் பல பேருக்கு இராஜதந்திர கடவுச் சீட்டுக்களை வழங்குமாறு பரிந்துரைத்திருந்தது.

ஜனாதிபதி செயலகம் பரிந்துரைத்திருந்த காரணத்தினால், அதிகாரிகள் இராஜதந்திர கடவுச்சீட்டை விநியோகிக்கும் போது அந்த நபர்களின் தகுதி குறித்து கேள்வி எழுப்பவில்லை. எனினும் இராஜதந்திர கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் முன்னர் அரசாங்கம் கடைப்பிடிக்கும் நடைமுறைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கடந்த அரசாங்கத்தின் போது ஜனாதிபதி செயலகத்தின் பரிந்துரைகளுக்கு அமைய விநியோகிக்கப்பட்ட 39 இராஜதந்திர கடவுச் சீட்டுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் சிரேஷ்ட அரச அதிகாரிகள், உயர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதியரசர்கள், இராஜதந்திரிகள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வழங்கி வருகிறது. ஆனால், வெளிநாடுகளில் உள்ள தூதரங்களில் பணிபுரிவோரின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் இந்த இராஜதந்திர கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 809 பேருக்கு இராஜதந்திர கடவுச் சீட்டுக்களை திணைக்களம் வழங்கியுள்ளதுடன் அவர்களில் 50 பேரிடம் இது தொடர்பாக விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் உதவி கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார்.

முக்கிய பிரமுகர்களை தவிர வெளிநாட்டு சேவையில் பணியாற்றும் அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சின் சகல நிறைவேற்று அதிகாரிகள், பௌத்த பீடங்களில் தலைமை பிக்குகள், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மத தலைவர்கள் மற்றும் தேயிலை விரிவாக்கல் பிரிவுக்கு பொறுப்பான ஆணையாளர் ஆகியோருக்கும் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# காத்தான்குடியில் நேற்றுப் பேரணி!

அஞ்சல் சேவை தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு பேரணி நேற்று சனிக்கிழமை காத்தான்குடியில் நடைபெற்றது. காத்தான்குடி அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு பேரணி, புதிய காத்தான்குடி மற்றும் காத்தான்குடி ஊர் வீதி வழியாக சென்று மீண்டும் காத்தான்குடி அஞ்சல் அலுவலகத்தை சென்றடைந்தது. இந்த விழிப்புணர்வு பேரணியில் பிரதி அஞ்சல்மா அதிபர் எஸ்.விவேகானந்தலிங்கம், மட்டக்களப்பு தபால் அத்தியட்சகர் ஏ.ஜெகன், காத்தான்குடி அஞ்சல் அலுவலக பொறுப்பதிகாரி மசாகீம் மரைக்கார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதன்போது, அஞ்சல் அலுவலகங்களின் சேவை தொடர்பான விளக்கங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 38 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: AAT/ லண்டன் PR
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/4314

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 49 சூரிசெவ் 7இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: BSC லண்டன் NOT PR
தொ.இ: B/4315

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 81சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L உதவி தபாலதிபர்
தொ.இ: B/4319

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 103 செவ் 1 ல்
உயரம்: 161cm
தகைமை/தொழில்:O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4320

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 38 செவ் 7இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/4321

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 41 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/4326

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 38 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர் எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4328

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 21
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/4329

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி (Cert.in Social Science), இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development), சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டக்கற்கை நெறி (BA in Social Science), அபிவிருத்தி மற்றும் பொதுக்கொள்கையில் முதுமாணி (MA in Development Studies & Public Policy) ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை 10.04.2015 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும் 155 ஆம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் மற்றும் ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி 4 ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேல் அறிவித்துள்ளார். (இ-3)




# மிருகபலி தடைச்சட்டம் கொண்டுவர வேண்டும்

## நல்லை ஆதீன குருமுதல்வர் வலியுறுத்து

**(யாழ்ப்பாணம்)**

**ஆலயங்களில் நடைபெறும் மிருகபலிகளை தடைசெய்யும் முகமாக மிருக பலி தடைச்சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என நல்லை ஆதீன குரு முதல்வர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை ஆதீனத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே ஆதீன குரு முதல்வரால் மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இந்து ஆலயங்கள் விடுவிக்கப்பட்டு, அவை புனரமைப்பு செய்யப்பட வேண்டும். மற்றும் அறநெறி வகுப்புக்களை நடத்த ஏதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்தக் கூடாது என சட்ட மூலம் கொண்டு வரப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

அதற்கு பதில் அளித்த பிரதமர், முதல் கட்டமாக ஆயிரம் ஏக்கர் காணியினை விடுவிக்க உளளோம். விடுவிக்கப்படவுள்ள பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்கள், தேவாலயங்கள் என்பவற்றை புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

மிருக பலி தடைச்சட்ட மூலமும், ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் நடத்தக் கூடாது என்ற சட்ட மூலமும் கொண்டுவருவதற்கு முதல், அவை பற்றி சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்ளவுள்ளதாக ரணில் மேலும் தெரிவித்தார். (இ)




# விபத்துடன் தொடர்புடைய சாரதிக்கு விளக்கமறியல்!

விபத்து சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பேருந்து சாரதியை, எதிர்வரும் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் கறுப்பையா ஜீவராணி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

பருத்தித்துறை, வல்லை வீதியில் வைத்து பேருந்து ஒன்றுடன் ஆட்டோ மோதி கடந்த வியாழக்கிழமை மாலை விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் ஆட்டோவில் பயணித்த இருவர் உயிரிழந்ததுடன், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேற்படி விபத்துடன் தொடர்புடைய பருத்தித்துறை அல்வாய் பகுதியினை சேர்ந்த சாரதியினை அச்சுவேலி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதியை கடந்தவெள்ளிக்கிழமை மல்லாகம் நீதி மன்றில் ஆஜர்படுத்திய போது, வழக்கினை விசாரித்த நீதவான் 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ)


# தோற்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் தொழில்முயற்சியாளர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் கைத்தொழில் அபிவிருத்தி சபை, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் DSI றேடிங் கம்பனி ஆகியன இணைந்து பாதணி, தோற்பை, ஸ்ரீற் கவர் போன்ற தோற்பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழில் நிறுவனங்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் விருத்தி விழிப்புணர்வு கருத்தரங்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்து பயன் பெறவிரும்பும் தொழில் முயற்சியாளர்கள் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ்.கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (இ-3)

# யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி இராஜாங்க அமைச்சர்





யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் ஆர்.இராதாகிருஷ்ணன் யாழ்.இந்துக் கல்லூரிக்கு பயணம் மேற்கொண்டு எதிர்கால அபிவிருத்தி குறித்து கேட்டறிந்து கொண்டார்.

யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அமைச்சரை வரவேற்றனர்.

அத்துடன் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி பணிகள் குறித்தும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் குறித்தும் அதிபர் அமைச்சருக்கு விளக்கியிருந்தார. (இ-22)

# யோகர் சுவாமிகளின் 51 ஆவது குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் 51ஆவது குருபூசை நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.


தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் தமிழ் ஆய்வாளர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். (இ)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. (இ)

# ‘விபத்துக்களற்ற நாடொன்று’





‘விபத்துக்களற்ற நாடொன்று’ என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெல்லியடிப் பகுதியில் நேற்று துவிச்சக்கரவண்டிகளுக்கு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

எதிரொளி விளக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் இந்த வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தாக்குதலுக்கு இலக்கான மைத்திரி சகோதரர் மரணம்

**(கொழும்பு)**

**கோடரியினால் தாக்கப்பட்டு கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் பிரியந்த சிறிசேன நேற்று அதிகாலை உயிரிழந்தார்.**

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

40 வயதான அவர், நேற்று அதிகாலை 3.50 அளவில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஜனாதிபதியின் சகோதரரான பிரியந்த சிறிசேனவை கோடரியினால் தாக்கிய இஷான் லக்மால் என்பவர் பொலிஸில் சரணடைந்ததை அடுத்து, அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் பொலநறுவை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரியந்த சிறிசேன மீது தாக்குதல் நடத்த பயன்படுத்தப்பட்ட கோடரி, நேற்றுமுன்தினம் அதிகாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பொலநறுவை புதிய நகரின் ஹத்தஹெல பிரதேசத்தில் இருந்து கோடரி மீட்கப்பட்டுள்ளது. (இ)

# உமாஓய திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு கிடைக்காவிடின் ஜே.வி.பி.தலையிடும்

## விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

உமாஓய வேலைத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.



உமாஓய வேலைத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நேற்று பார்வையிட சென்ற மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதால் பல வீடுகளில் வெடிப்பு ஏற்பட்டு பல பகுதிகளில் மண்சரிவு இடம்பெற்றுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கி அவர்களின் வாழ்வு இயல்பு நிலைக்கு திரும்பாவிட்டால் மக்கள் விடுதலை முன்னணி இவ்விடயத்தில் தலையிடும் என விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பாராளுமன்றத்தை கலையுங்கள் மகிந்த ஆதரவாளர்கள் கோஷம்

பாராளுமன்றத்தை கலைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி பாராளுமன்றத்தை கலைக்கவேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தங்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்த்து பாராளுமன்றத்தை கலைக்காத பட்சத்தில் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதாக மகிந்த ஆதரவாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் அமைப்பு என புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.

இவ் அமைப்பை பொது மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியு ள்ளன.

இதேவேளை பாராளுமன்றத்தை எதிர்வரும் 23ஆம் திகதி கலைக்காவிட்டால் வீதியில் இறங்கி நடத்தப்படும் போராட்டங்களில் பாரியளவிலான மக்களும் பங்கு கொள்வார்கள் என மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 40 | 40 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 90-100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 60 | 80 | 40 | 50 |
| தக்காளி | 60 | 60 | 60 | 80 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 80 | 30 | 40 | 60 | 30 | 40 |
| கரட் | 180 | 120 | 110 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 60 | 40 | 50 | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 70 | 80 | 50-70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 40 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 90 | 80 | 70 | 60 | 60 | 80 |
| லீக்ஸ் | 200 | 140 | 140 | 200 | 130-150 | 150 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 140 | 130 | 80 | 100-120 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 | 400 | 200-350 | 300 |
| போஞ்சி | 200 | 100 | 150 | 120 | 100 | 130 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 30 | 40 | — | — |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 | 25-30 | 20 |
| தேசிக்காய் | 60 | 120 | 70 | 60 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 120 | — | 160 | — | 80 |
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 80 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# பொலிஸ் சார்ஜன்டின் மோ.சைக்கிள் தீக்கிரை

நாத்தாண்டி பிரதேசத்தில வசிக்கும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை இனந்தெரியாத நபர் ஒருவரால் நேற்று அதிகாலை தீ வைத்து தேசப்படுத்தப்பட்டுள்ளதென மாரவில பொலிஸ் தெரிவித்தனர்.

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் தீர்க்கப்படாத குற்றங்களின் விசாரணைப் பிரிவில் பணியாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருடைய மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரி கடந்த காலங்களில் தீர்க்கப்படாதிருந்த பல குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உரியவர் களைக் கைது செய்யும் நடவழக்கையில் பங்களிப்புச் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மையினால் அவரை எச்சரிக்கும் நோக்கில் மோட்டார் சைக்கிளுக்குத் தீவைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# வசந்த கரன்னாகொட, ரொசான் குணதிலக்க ஆகியோருக்கு உயர் பதவி பொருத்தமானது

## ஜோன் அமரதுங்க பரிந்துரை

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் முன்னாள் விமானப்படைத் தளபதி ரொசான் குணதிலக்க ஆகியோருக்கு உயர் பதவிகளை வழங்குவது பொருத்தமானது என உள்நாட்டு மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு போரை முடிவுறுத்திய போது கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படை மற்றும் விமான ப்படை தளபதிகளுக்கு இராணுவத் தளபதிகளுக்கு வழங்கப்பட்டதனைப் போன்றே உயர் பதவி வழங்கப்படுவது சரியானதே.

முன்னாள் கடற்படைத் தளபதியும், விமானப்படைத் தளபதியும் போரை முடிவுக்கு கொண்டு வர பங்களிப்புச் செய்துள்ளார்கள் என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

இதன்படி முன்னாள் விமானப் படைத் தளபதி ரொசான் குணதிலக்கவிற்கு மார்ஸல் ஒப் த எயார் போஸ் மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு அட்மிரல் ஒப் த பீல்ட் பதவிகள் வழங்குவது பொருத்தமானது என ஜோன் அமரதுங்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ)

# பிரிவுத்துயர் பகிர்வு

### சுப்பிரமணியம் சாயீஸ்வரன்



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சாயீஸ்வரன் கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் மு.ப11.30மணி தொடக்கம் பி.ப1.30மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி குமாரசாமி ஞானேஸ்வரி



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து Langley ஐ வதிவிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரி குமாரசாமி கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப1 1மணி வரை Slough Cemetery & Crematorium,Stoke Road,Slough SL2 5AX,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி துரைரட்ணம் சாவித்திரிதேவி



மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை வீமன்காமத்தை வசிப்பிடமாகவும் கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட துரைரட்ணம் சாவித்திரிதேவி கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை மு.ப11.30 மணி தொடக்கம் பி.ப1மணி வரை Highland Funeral Home-Scarborough Chapel,3280 Sheppard Avenue East,Scarborough,ON M1T 3K3,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி ஆசிரியர்கள் 284பேருக்கு நியமனம்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான ஆசிரியர் நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் 248 பேர் ஆசிரியர் நியமனம் பெறவுள்ளனர். வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடத்தைக்கருத்தில்கொண்டு கணிதம், விஞ்ஞானம், தகவல்தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் ஆங்கில பாட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவால் 15.03.2015 இல் நடத்தப்பட்ட பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலும் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான நியமனக்கடிதங்கள் கையளிக்கும் வைபவம் நாளை 30 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல்8மணிக்குயாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் கலந்து கொண்டு தங்களிற்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் கலந்து கொள்ளும் பெண்கள் இளவர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட்டும் அணிந்து வருதல் வேண்டும் எனமேலும் அறிவுறுத்தியுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர் விபரம் வருமாறு,

**கணிதம்**

வடிவேல் றமேஷ்-871123160V, கந்தசாமி கலைச்செல்வன்- 861011950V,ரவீந்திரன் இராகவமேனன்-883651790V, செல்வி.விதுஜா சண்முகராசா-908281659V, செல்வரட்ணம் ரேனுராஜ்-883142195V, முத்துலிங்கம் கலையழகன்-872183140V ,யோகேஸ்வரன் வதனசீலன்-903380411V, அம்பலவாணபிள்ளை பிரசன்னா-881383055V, சபாரத்தினம் பகீரதன்-823370636V,தம்பிராசா அகிலேந்திரன்-821883563V, சந்தியோகு தர்மேந்திரன்-901302960V, செல்வி.பவுஜியா உதயகுமாரன்-906633507V,திருமதி.சந்திரகாந்யசிந்தா-835401480V, செல்வி. கிருஷ்ணபிரியா கோபாலகிருஸ்னன்-847402733V, பொன்னுத்துரை யசிந்தன்-892792844V, முருகையா மோகன்ராஜ்-881573040V, திருமதி.சசிதரன் யுகிதா-847752211V, சண்முகநாதன் அருட்செல்வன்- 861012530V, அரிராசா ஜெயந்தன்- 853223301V, செல்வரெத்தினம் ஜெயகாந்த்-882492729V, செல்வி லோஜினி கந்தசாமி-895992 640V, தேவராசா சஞ்ஜீவன்-892331200V, சோமசுந்தரம் யுகதீசன்-811691674V, தர்மகுலசிங்கம் சுகந்தன்-892761590V, சௌந்தரராசா மாதவன்-883361 326V, சுந்தரராஜா கபிரியேல்-852143746V, தனபாலசிங்கம் பிரதீப்-822152260V, செல்வி. மதுரா சட்டநாதன்-887693501V, திருமதி. லக்சுமிவாசன் யசோதினி- 816642825V, சிதம்பரநாதன் ஜெயானந்தன்-820773454V, செல்வராசா றாச்குமார்-841732 219V, திருமதி. அன்பழகன் கவிதா-826902019V, செல்வி. ஷதீபா சிதம்பரநாதன்-8754 80 863V, செல்வி. தனுஷிகா பாலசுந் தரம்- 906850958V, செல்வி. கஸ்தூரி விஜயசுந்தரம்-89852 0900V, கணேசன் செந்தில்நாதன்-86266 1150V, செல்வி.கனிஸ்டா ரவீந்திரன்-886313500V, செல்வி. ரஜிதா தபேந்திரன்-896662082V, கணேசமூர்த்தி கவிதன்-901041008V ,முருகதாஸ் மகிழன்-881991772V, சிவகுமார் அஜந் தீபன்-870094213V, கயிலாய பிள்ளை பிரசன்னா- 892362955V, குணசிங்கம் வதனகுமார்-893070222V, திருமதி.மதி வண் ணன் கர்சினி-867593004V, கந்தசாமி அருள்ஞானவேல்-89253328 8V, செல்வி.சுகீர்ணா தவராசா-888081160V, முகம்மது நவவி முகம்மது உஸைர்-890 501974V, செல்வி.தீபா பரமேஸ் வரன்-857932528V, செல்வி. நிரோஜா யேசுதாசன்- 886400 926V, செல்வி.கல்யாணி தியா கராசா-887521611V, செல்வி. ஜெஸ்லின் லோகநாதன்-877950 662V, செல்வி.சுபிகா சூரியகுமா ரன்-857013611V, சிவகுமாரன் வித்தியதாசன்-882202470V, பன்னீர்சசெல்வம் நிராஜ்-883 451520V, செல்வி பேரின்பராஜா பிரண வஜினி-887842957V, செல்வி. மேரி யூலியற் பெரேரா சூசைப்பு பெரேரா-915122728V.

**விஞ்ஞானம்**

காசிவிசுவநாதன் யுகவேந்திரா-871362181V, நவரத்தினம் நவிகரன் -871633347V, செல்வி. செந்தில்நேசன் அன்பரசி-887770980V, கமலக்கண்ணன் இராகவன்-873553049V, செல்வி. சுந்தரலிங்கம் தர்சனா-897813009V,நடராசா காந்தகுமாரன்-820575580V,செல்வி ஜெயராஜசிங்கம் அபிராமி-865310625V, புஸ்பலிங்கம் சுரேந்தர்-873361018V,திருமதி தர்மினி பகீரதன்-875061240V, செல்வி இராசரத்தினம் பவித்திரா-897001489V, செல்விசிவபாலகிருஸ்ணன்கோகிலா-877772497V, திரு மதி.தயானந்வைஸ்ணவி-897 982900V,இராமநாதன் ரஜீவன்- 853312070V, செல்வி மகாலிங்கம் விஸ்ணுமீரா-866092 001V, திருமதி இராகவன் தார் மீகா- 878203135V, திருமதி ஜெகஜீவன் துசாந்தி- 887251983V, செபஸதியாம்பிள்ளை ஜெபர்சன்-831514264V, செல்வி.மதீன் மபாஸா பானு-895490253V, நாகேந்திரசீலன் அபராஜிதன்-892691495V, செல்வி அமிர்தலிங்கம கஜேந்தினி-886133804V, அன்ரனி சகாயராஜ்யோசப் டினேஸ-883033353V, செல்வி அருளானந்தம் வஜீரனா- 867962760V, செல்வி கிருஸ்ணர் அபிலாசினி-876341980V,செல்வி தங்கராசா மைதிலி 806891665V, செல்வி விஜயநாதன் தாட்சாயினி-886273037V, செல்வி நவரட்ணம் யயந்தி -875250213V, சிவநேசன் ரமேஸ்-862991109V, செல்வி. தர்மசேகரம் தர்மதா- 867621024V, தர்மலிங்கம் மதியழகன் -842821274V, உதயசூரியன் கிரிசாந்தன் -892411565V, கருணாநிதி றொபின்சன்-870630441V, இராஜேந்திரன் ருக்ஷாந்தன்-901562601V, செல்வி. முத்துக்குமாரசாமி அமிர்தவர்சினி-896002562V, கமலக்கண்ணன் கடம்பன்-903071028V, கேதாரநாதன் ஜனார்த்தன்-871363536V, சிவராஜசேகரம் துஷ்யந்-881243261V, செல்வி. றொபேட் றமியா-878272013V, செல்வி.கனகராசா சிந்துஜா-875762761V, திருமதி. சஜீவன் சுபா-846332600V, செல்வி. இராமகிருஷ்ணன் நித்யா-886692170V, செல்வி. இராஜேஸ்வரன் லதீகா-8969 72235V, தனராஜா தனரஜிதன்-860592061V, செல்வி புவீந்திரன் பிருந்தா 886812701V, ஜெயராஜா ஜெயமரினோ-853131130V, சிவ புத்திரன் தசபுத்திரன்-880581112V, செல்வி.தருமலிங்கம் நிசாலினி-885913520V,செல்வி.பத்மஜா சிவானந்தம்-876112744V, இராசேந்திரம் இமயகரன்-882162060V, செல்வி.துர்க்கா இராதாகிருஸ்ணன்-876562243V, செல்வி.பிரமிளா பூலொகநாதன்-895813273V,அமிர்தலிங்கம் பவித்திரன்-850250308V,செல்வி.கோமகள் விஸ்வலிங்கம்-875412647V, செல்வி.கஸ்தூரி இராஜலிங்கம்-895663786V, சிவராசா மயூரதன்- 862951239V, செல்வி.இராசரத்தினம் வற்சலா-866862869V,கருப்பையா புஸ்பராஜா-811902179V, செல்வி.அபிராமி அமிர்தலிங்கம்-895743887V, திருமதி. பத்மகுமாரி சங்கீர்த்தனன்-887852570V, சிறிஸ்கந்தராசா ரகுவரன்-883120205V, செல்வி. சிந்தியா கணேசலிங்கம்-895112496V, செல்வி.மேகலா உதயசூரியன்-886173610V, செல்வி. கஸ்தூரி சிவராசசுந்தரம்-885572901V, இரத்தினமூர்த்தி சுகானன்-882992039V, சவுந்தரராசா உமாகாந்த்-881101653V, பிரான்சிஸ் காசியா ஜோசெப் மயூரன்-882282376V, செல்வி.பிரதீபா கருணாகரன்-895532525V, சிவம் குலராம்-891324146V, செல்வி.கோபிகா சச்திதானந்த பிள்ளை-867882715V, செல்வராஜா பிரதீபன்-881102080V,

**தகவல் தொழில்நுட்பம்**

மகேஸ்வரன் நிதர்ஷன்-893300430V, கதிரமலை செந்தூரன்- 883540360V, செல்வி. சிவநேசன் எழில்மாதா-887472173V, செல்வி.சொர்ணலிங்கம் கார்த்திகா-888300040V, செல்வி. அன்ரனிதாஸ் தனோ அன்ரனிசா-876332612V, ரவிகரன் கோகுல்ராஜ்-902831770V, செல்வி. துவாரகா அருந்தவவிநாயக மூர்த்தி-878581571V, செல்வி.ஆறுமுகதாசன் பிரிந்திகா-887562342V, பரமநாதன் இளங்கீரன்-810311657V, திருமதி.வாசுதேவன் அபிராமி-896703137V, கணேசலிங்கம் விஜயகாந்தன்-870942737V, செல்வி.நித்தியா செல்வராஜா-877910628V, இராசரத்தினம் சேந்தன்-872520830V, செல்வி. நர்மதா முருகையா-886113285V, செல்வி.புவநேந்திரன் சஜி-902792147V, சாந்தசிவம் ராதாரவி-871521425V, செல்வி.ஆர்த்திகா பரமநாதன்-895092509V, செல்வி.தர்சனா புலேந்திரன்-836264037V, செல்வி.பிரியங்கா சிவராஜா-856442241V, செல்வி. யோண்சன் யோதிகா-907752160V, செல்வி.வேலாயுதபிள்ளை மீரா -878191412V, திரு.திலகேந்திரலிங்கம் ஐங்கரன்-870562705V, செல்வி.சுகன்யா நடராசா-875403095V, கந்தசாமி குகதாசன்-871061629V

**விவசாயம்**

உமாகாந்தன் திருக்குமரன்-842832586V, திருமதி.பாலமுரளி வைதேகி-807713590V, செல்வி.அர்ஜனா செல்லத்துரை-877022242V, செல்வி.சங்கீதா யோசப்குமார்-866881944V, செல்வி.கஸ்தனி கிருஸ்ணசாமி-887931836V, திருமதி.சசிகரன் குகசாந்தினி-895940216V, செல்வி.மரிதர்மதாஸ் இவோன் நர்மதா-877301753V, சொர்ணலிங்கம் குணவர்ஷன்- 823285205V, திருமதி.செந்தூரன் கீர்த்திகா-876513765V, பாஸ்கரலிங்கம் சுரேஸ்குமார்-820864123V, திருமதி.அனுஜன் சுமித்திரா-838382835V, செல்வி. கார்த்திகா கார்த்திகேசு-868143177V, திருமதி.சந்திரமோகன் தர்மினி-865400721V; செல்வி.அபிஷாதனா சிவகுமாரன்-897910705V, செல்வி.துரைசிங்கம் மகிஜா-896901842V, திருமதி.ஜனார்த்தனன் தர்மிகா-886273576V, செல்வி.சோபனா அமிர்தலிங்கம்-888032193V, செல்வி.சிந்திகா கமலச்சந்திரன்-876514630V, யேசுதாசன் ஜெனோவின்ஸ்ரன்-813570440V, திருமதி.ரவீந்திரன் பிரசாந்தி-835882608V, செல்வி. காயத்திரி சின்னராசா- 885311580V, திருமதி.தேவகுமார் அஞ்சனா- 838531237V, திருமதி. பிரேம்நாத் சுதர்ஷினி-885352294V, செல்வி.கலைச்செல்வி நவரத்தினராசா-867663185V, செல்வி. துஷ்யந்தி செல்லத்துரை-855291541V, சிவகுருநாதன் விஜயதீபன்-890062016V, செல்வி.சுந்தரமூர்த்தி யாழினி-828430432V, செல்வி.கார்த்திகா சின்னராசா-866773319V, திருமதி.காண்டீபன் சங்கீதா-868461470V, ஞானச்செல்வன் கிரிதரன்-900113200V, செல்வி.கோபிதா சிவசெல்வரட்ணம்பிள்ளை-898533476V, செல்வி.கிறிஸ்ரா சாளினி பேனாட்-887110255V, பத்மநாதன் அருண் குமார்-871603529V, கதிர்காமு இராசகாந்தன்-851151621V, திருமதி.பிரியங்கன் விஜிதா-876740982V, (தொடரும்)

---

03.2015 29

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1632 - கியூபெக் ஆங்கிலேயரிடம் இருந்து பிரெஞ்சுக்களிடம் கைமாறியது.
- 1792 - 13 நாட்களின் முன்னால் சுடப்பட்ட சுவீடனின் மூன்றாம் குஸ்தாவ் மன்னன் இறந்தான்.
- 1807 - 4 வெஸ்டா என்ற இதுவரை அறிந்தவற்றில் மிக வெளிச்சமான சிறுகோளை ஜேர்மனிய வானியலாளர் ஹைன்ரிக் ஓல்பர்ஸ் கண்டுபிடித்தார்.
- 1849 - பஞ்சாபை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.
- 1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார். இதுவே பின்னர் இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது.
- 1867 - கனடாக் கூட்டமைப்பை ஜூலை 1 இல் உருவாக்குவதற்கான பிரித்தானிய வட அமெரிக்க சட்டத்தை பிரித்தானியாவின் விக்டோரியா மகாராணி அரச ஒப்புதலை அளித்தார்.
- 1886 - ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் ஜோன் பெம்பேர்ட்டன் என்பவர் முதல் தொகுதி கொகக் கோலா மென்பானத்தைத் தயாரித்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: வி-1 பறக்கும் குண்டு கடைசித் தடவையாக இங்கிலாந்தைத் தாக்கியது.
- 1971 - மைலாய் படுகொலைகள்: அமெரிக்காவின் லெப்டினண்ட் வில்லியம் கலி என்பவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றான்.
- 1973 - வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறினர்.
- 1974 - நாசாவின் மரைனர் 10 விண்கலம் புதன் கோளை அண்மித்த முதலாவது விண்கலம் என்ற பெயரைப் பெற்றது.
- 2004 - பல்கேரியா, எஸ்தோனியா, லாத்வியா, லித்துவேனியா, ருமேனியா, சிலோவாக்கியா, சிலொவேனியா ஆகியன நேட்டோ அமைப்பில் முழுமையான அங்கத்துவம் பெற்றன.
- 2004 - அயர்லாந்து புகைத்தலை உணவகங்கள் உட்பட எல்லா வேலையிடங்களிலும் தடை செய்த முதல்நாடானது.
- 2005 - யாஹூ 360 சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 2007 - கணிதத்தில் நோபல் பரிசு எனப்படும் நோர்வே நாட்டின் ஏபல் பரிசு தமிழரான சீனிவாச வரதனுக்கு அறிவிக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1790 - ஜான் டைலர், 10ஆவது அமெரிக்க ஜனாதிபதி (இ. 1862)
- 1927 - ஜோன் வேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 2004)
- 1941 - ஜோசப் டெய்லர், இளையவர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

**இறப்புக்கள்**

- 1985 - ஜார்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர் (பி. 1897)
- 2000 - சி. கே. சரஸ்வதி, தமிழ்த் திரைப்பட நடிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் உறவுக்காக சீனாவை இழக்க முடியாது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் மேற்குலக சக்திகள் மற்றும் இந்தியாவுடனான உறவுகளில் திடீர் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்காக சீனாவை இலங்கை இழக்காது என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.**



புதிய அரசாங்கம் பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, செக்குடியரசு போன்ற நாடுகளுடன் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் உறுதியாக இருக்கிறது.

இலங்கைக்கு எதிராக ஐ.நா விசாரணையை வலியுறுத்தி, ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில், அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்த போது, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கைக்கு துணையாக இருந்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போதும், இந்த நாடுகள் நிபந்தனையற்ற ஆதரவளித்தன.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு அமெரிககாவினது முக்கியமான ஆதரவும் கிடைத்திருந்தது.

சீனா ஒரு உண்மையான நண்பன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பீஜிங் பயணம், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவும்.

ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் மூலம், ஒரே நேரத்தில் சீனாவுடனும், மேற்குலகத்துடனும், நெருக்கமான உறவைப் பேண முடியாது என்று சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால் புதிய அரசாங்கம் அணிசேரா கொள்கையையே கடைப்பிடிக்கிறது.

நாம் எந்த நாட்டுடனும் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கவில்லை. எல்லோருடனும் நெருங்கிய உறவையே வைத்திருக்கிறோம் எனறு கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# மத்தள விமான நிலையத்தினை மூட வேண்டிய அவசியமில்லை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையத்தை மூட வேண்டிய அவசியமில்லை என சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் மத்தள விமான நிலையம் ஊடாக இலாபத்தை எவ்வாறு பெற முடியும் என்பது தனக்கு தெரியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மத்தள விமான நிலையத்தை மூடுவதற்கு பதிலாக அரசாங்க முதலீடு இன்றி நடத்திச் செல்வதற்கான நிலையை உருவாக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது சேவை அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனத்தை இலாபகரமாக செயற்படுத்துவதற்கான முறைகளை தற்பொழுது கூறமாட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஐ.தே.கட்சியுடன் இணையமாட்டேன்

மைத்திரி அரசாங்கத்தின் 100 நாள் வேலைதிட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக ஊடகம் மாத்திரமே தெரிவிக்கின்றதே தவிர மக்களுக்கு அந்நிவாரணம் கிடைப்பதில்லை என முன்னாள் தொழில மற்றும் உற்பத்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். சிங்கள வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை தெரிவித்தார்.

தான் மீண்டும் ஒருபொழுதும் ஐக்கிய தேசிய கட்சியில் இணையமாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதையும் இதன போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# மேதினக் கூட்டத்தை நடத்த மகிந்த திட்டம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனியான மே தினக் கூட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் விசேட மே தினக் கூட்டமொன்றை நடத்துவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கூட்டணி கட்சிகள் இவ்வாறு திட்டமிட்டுள்ளன.

உழைக்கும் மக்களின் பொது தொழிலாளர் தினம் என்ற தொனிப் பொருளில் இந்த மே தினக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இம்முறை மேதின பேரணிகளை நடத்தாது மேதினக் கூட்டத்தை மட்டும் நடத்தத் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த தலைமையில் விசேட கூட்டமொன்றை நடத்த சில கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, இந்த மேதினக் கூட்டம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இரத்தினபுரிக் கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக தற்போதைக்கு நடவடிக்கை இல்லையாம்

## அனுர பிரியதர்சன யாப்பா கூறுகிறார்

(கொழும்பு)

இரத்தினபுரி கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக தற்போதைக்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குமாறு கோரி இரத்தினபுரியில் அண்மையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் உத்தரவினை மீறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

கூட்டத்தில் பங்கேற்கக் கூடாது என சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் ஒன்றை எடுத்தால் அதன் அடிப்படையில் செயற்பட வேண்டியது அனைத்து உறுப்பினர்களினதும் கடமையாகும்.

மத்திய செயற்குழுவின் தீர்மானத்திற்கு விரோதமான முறையில் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என அனுர பரிய தர்சன யாப்பா, கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ)

# ஜனாதிபதிக்கு அவதூறு ஏற்படுத்திய நபர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார்

இணையத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக சேறு பூசிய நபரை புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித்தேர்தல் காலத்தில் போலியான தகவல்கள், போலியான புகைப் படங்களை பேஸ்புக் மூலம் பிரசாரம் செய்திருந்தார் என குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இம்முறை எனது வாக்கு மகிந்த ராஜபக்ஷவிற்கே எனக் குறிப்பிட்டு முகப்புத்தகத்தில் பிரசாரம் செய்துள்ளார்.

பதுளையைச் சேர்ந்த சுஜித் நிலந்த என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை கடுமையாக மீறிச் செயற்பட்டுள்ளதுடன் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்படக்கூடிய குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேக நபர் நேபாளத்திலிருந்து கடந்த 25 ஆம் திகதி நாடு திரும்பிய போது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் கொரியாவிற்கான இலங்கை தூதரகத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு சேறு பூசும் நோக்கில் பேஸ்புக்கில் புகைப்படப் பிரசாரங்களில் ஈடுபட்டதாக சந்தேக நபர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி வரையில் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## எண்ணம் இருப்பது எங்கே?

"அப்பா, உங்களை ஒரு சிந்தனையாளர் என்று ஊரில் எல்லோரும் சொல்கிறார்கள்"

"ஆமாம் அதில் என்ன சந்தேகம் உனக்கு?"

"அதில் எனக்கு சந்தேகமில்லை என்னுடைய சந்தேகம் வேறு"

"என்ன சந்தேகம் ? கேள்"

"மனசு என்று சொல்கிறோமே அது எங்கே இருக்கிறது?"

"என்னுடைய மகன் நீ. அதனால்தான் இவ்வளவு புத்திசாலித் தனமாக கேட்கிறாய்.

எண்ணத்தை தவிர மனம் என்ற ஒன்று தனியே கிடை யாது. எண்ணங்கள் தோன்றுகின்ற இடம் என்று ஒன்று இருப்பதாக கற்பனை செய்து கொண்டு அந்த இடத்தையே மனம் என்கிறோம். உள்ளே நுழைந்து விபரித்தால் உண்மையான மனம் என்று ஒன்றைப் பார்க்க முடியாது. இப்படி மனம் இல்லை என்று இயல்பான நிலையை உணர்ந்து அடங்கினால் சாந்தி உண் டாகும்."

"அடேயப்பா"

"அவசரப்படாதே! இன்னும் கேள். மனம் என்பது பொய். அதன் உருவம் மாயம். ஆகையினால் மெய்யொடு பொருந் திய யோகி அந்த மனத்தின் வசப்படாமல் தனிமரமாய் நிற்பான்"

"அற்புதமான விளக்கம் அப்பா. இது உங்களுடைய சொந்த சிந்தனையா?"

"இது என்னுடைய சிந்தனை இல்லையப்பா. ரமணரு டைய நிந்தனை. இதைப் பற்றியெல்லாம் நாமும் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் சிந்தனை என்பது மனிதனுக்கு இருக்கும் மகத் தான ஒரு சக்தி. ஒவ்வொரு மனிதனும் சுயமாக சிந்திக்க வேண் டும்."


"அது சரி சுயமாக சிந்திப்பது என்றால் என்னப்பா?"

"கொஞ்சம் இரு, உன் அம்மாவிடம் கேட்டுச் சொல்கி றேன்."

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் அறிவுரையும் யாழ்.மக்களின் யதார்த்தமும்



இலங்கை அரசாங்கமானது ஒருபோதும் அழுத்தமின்றித் தனக்கான பணிகளை ஆற்றவில்லை என்பதைத் தனது 67 ஆண்டு கால அனுபவத்தின் மூலம் உணர்ந்துள்ளதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிடுகிறார். இவர் கூறிய இந்த அழுத்தம் என்பது இந்திய அரசாங்கத்திடமிருந்து வரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார்.

**இவ்வாறு இந்தியாவின் 'என்.டி ரிவி தொலைக்காட்சி'யின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான மூத்த ஆசிரியர் 'மாயா மிர்ச்சந்தனி', 'என்.டி ரிவி' இணையத்தில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

பாக்கு நீரிணையின் அலைகளால் சூழப்பட்ட, பாரம்பரிய மீன்பிடிப் படகுகள் மற்றும் அவற்றின் வெறுமையான வலைகள் கடற்கரை மணலில் உலரவிடப்பட்ட, இன்னமும் இலங்கை இராணுவத்தால் கண்காணிப்பிற்கு உட்பட்ட யாழ்ப்பாணத்தின் கரையோரக் கிராமமாக உள்ள இளவாலை, வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் பாதிப்பைத் தாங்கி நிற்கிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுற்று ஆறு ஆண்டுகள் கடந்த் நிலையில் கிராமிய விவசாயம் மற்றும் மீன்பிடியை அடிப்படையாகக் கொண்ட யாழ்ப்பாணப் பொருளாதாரமானது பல்வேறு சவால்களைச் சந்திக்கின்றது.

பாக்குநீரிணையில் இந்திய மீனவர்கள் தமது இழுவைப் படகுகளுடன் உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மிக முக்கிய அரசியல் விவகாரமாக மாறியுள்ளமை இங்கு ஆச்சரியப்படத்தக்கதல்ல.

'எமது கடற்படுக்கையிலுள்ள கடல் வளங்கள் முற்று முழுதாக அபகரிக்கப்படுகின்றன. எனது தலையைப் போன்றதே இந்தியாவின் கடல்வளங்களும்' என வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது தலையைச் சுட்டிக்காட்டியவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீனவர்கள் அன்றாடம் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு பெரும் பிரயத்தனப்படும் இந்தவேளையில், தமிழ்நாட்டு அரசியற் கட்சிகள் இலங்கையில் வாழும் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உண்மையில் உதவ விரும்பினால் தமிழ்நாட்டு மீனவர் சங்கத்திடம் இழுவைப் படகுகள் பயன்படுத்துவதைத் தடைசெய்யுமாறு கோரி, யாழ்ப்பாணத்திலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவவேண்டும் என அதிகாரத்திலுள்ள வடக்கு முதலமைச்சரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் கூறுகிறார்கள்.

அத்துமீறி உள்நுழையும் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க அறிவித்திருந்தார். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளமை ஒரு 'கெட்ட வாய்ப்பாகும்'.

ஆழமற்ற கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தமது இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவதை முற்றிலும் தடுக்க வேண்டும் என்கின்ற இலங்கை அரசாங்கத்தின் கருத்திற்குத் தாம் உடன்படுவதாகவும் திரு.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

தமிழ்நாட்டிலிருந்து தமக்குக் கிடைக்கும் உணர்வுபூர்வமான ஆதரவைத் தாம் வரவேற்பதாகவும் 'ஆனால் அதேவேளையில்' எமது நிலைப்பாடு தொடர்பாகவும் பரிசீலனை செய்யுமாறும் தமிழ்நாட்டிடம் கோரிக்கை விடுவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

'பிளவுபடாத ஒரு நாட்டிற்குள் அரசியற் தீர்வொன்றை முன்வைக்குமாறு நாம் தெளிவாக வரையறுத்துள்ளோம். எமக்கு ஆதரவு தர அவர்கள் விரும்பினால் எமது கோரிக்கைக்கும் அவர்கள் ஆதரவளிக்க வேண்டும்' என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வருவாய் போன்றன இயல்புநிலைக்குத் திரும்ப வேண்டும் என்பதே கூட்டமைப்பு விரும்புகின்ற மிக முக்கிய விடயமாகும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்ட போது இந்திய நிதியுதவியுடன் கட்டப்பட்ட 27,000 வீடுகளைக் கையளித்திருந்தார். இந்தியப் பிரதமரால் வீடுகள் கையளிக்கப்பட்ட கிராமங்களுள் இளவாலையும் ஒன்றாகும்.

28 ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்கான தனது அரசுமுறைப் பயணத்தை மேற்கொண்ட முதலாவது பிரதமராகவும், யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்த முதலாவது இந்தியப் பிரதமராகவும் நரேந்திர மோடி விளங்குகிறார்.

இத்திட்டம் புதியதல்ல. 2010 இல, அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் இலங்கை இராணுவத்தினரால் வெற்றி கொள்ளப்பட்டு ஒரு ஆண்டின் பின்னர், யாழ்ப்பாணத்தில் போரால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என இந்தியா தீர்மானித்தது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 50,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் அதேவேளையில், இலங்கையின் வடக்கை நாட்டின் ஏனைய பாகங்களுடன் இணைக்கும் தொடருந்துப் பாதைகளைப் புனரமைக்கும் பணியையும் இந்தியா மேற்கொண்டது.

2011இல், இளவாலையிலிருந்து 8 கிலோமீற்றர் தொலைவிலுள்ள, இலங்கைக்கு இந்தியப் பொருட்களைக் கடல்வழியாக இறக்குமதி செய்யக்கூடிய மிகக் கிட்டிய தூரத்திலுள்ள காங்கேசன் துறையில் துறைமுகம் ஒன்றை மீளக்கட்டியெழுப்புவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இந்தியாவும் இலங்கையும் கைச்சாத்திட்டன.

யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் சுற்றுலாப் பயணி ஒருவர் இந்நகரத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு வித்தியாசங்களையும் காண முடியும். யாழ்ப்பாணத்தின் பழைய சுவர்களில் துப்பாக்கிச் சன்னங்களைக் காணலாம். எரிக்கப்பட்ட நிலங்களையும் இவற்றில் சில தற்போது துப்பரவாக்கப்படுவதையும் யாழ்ப்பாண நகரம் தற்போது புதுப்பொலிவுறுவதையும் காணலாம்.

இங்கு புதிய கடைத் தொகுதிகள், வைத்தியசாலைகள், செப்பனிடப்பட்ட வீதிகள், வங்கிகள் போன்றவற்றைக் காணலாம். போருக்குப் பின்னர் ராஜபக்ச அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தனித்த பங்களிப்புடனான மீள்கட்டுமானத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே யாழ்ப்பாணத்தின் செப்பனிடப்பட்ட வீதிகளை இங்கு வாழும் பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஏனெனில் இத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உள்ளூர் ஆளணிகள் பயன்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண வாழ் மக்கள் தமக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவில்லை.

அகிலன் கதிர்காமர் ஒரு ஆராய்ச்சியாளர். இவரது குடும்பத்தினர் யுத்தம் ஆரம்பித்த போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளி யேறியிருந்தனர். தற்போது அகிலன் கதிர்காமர் போருக்குப் பின்னான மீள்கட்டுமானத்தை ஆரா யந்து தனது மேற்படிப்பை நிறைவு செய்வதற்காக யாழ்ப்பாணத்திற்குத் திரும்பியுள்ளார்.

இவ்வாறான அபிவிருத்திகள் வெறுமையாக உள்ளதாகவும், யாழ்ப்பாணத்தில் நீண்டகால முதலீடு மற்றும் தொழிற்துறை போன்றன ஊக்குவிக்கப்படாதுவிட்டால் இங்கு மிகப் பாரிய சமூக-பொருளாதார நெருக்கடி ஏற்படும் என ஆய்வாளர் அகிலன் கருதுகிறார்.

'மக்கள் மயப்படுத்தப்பட்ட அபிவிருத்தியில் ராஜபக்ச அரசாங்கம் உண்மையில் நலன் காண்பிக்கவில்லை' என இவர் கூறுகிறார். இங்கு பாரிய தொழிறசாலை மற்றும் கட்டுமானம் போன்றன மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், இந்த மக்களின் உள்ளூர் பொருளாதாரமான விவசாயம் மற்றும் மீன்பிடி போன்ற துறைகள் பெரிதளவில் மேம்படுத்தப்படவிலலை என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

(தொடரும்)

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவியுங்கள்

## சந்திரகுமார் எம்.பி.பிரதமரிடம் கோரிக்கை

**இது வரைக்கும் எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய அரசு நட டிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப் பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்து ள்ளார்.**

யாழ்ப்பாணம் மாவ ட்டச் செயலகத்தில் பிரதமர் ரணில விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் போதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினரால் மக்களின் பல பிரச்சினைகள் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சுமார் 196 பேர் இதுவரைக்கும் எவ்வித குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்படாமல் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே இவர்கள் எவ்வித தாமதமின்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

இந்திய மற்றும் தென்னிலங்கை றோலர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. எனவே இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வடக்கு கடற் றொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை மனிதாபிமான முறையில் தொழிலாளிகள் என்ற வகையில் விடுதலை செய்தாலும் அவர்களின் றோலர்கள் விடுவிக்கப்படக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் தெரிவித்த போது பதிலளித்த பிரதமர் தற்போது கைப்பற்றப்படும் றோலர்கள் விடுவிக்கப்படுவதில்லை என்றார்.

சுண்டிக்குளம் பிரதேசத்தில் 85 வரையான கடற்றொழில் செய்யும் குடும்பங்கள் இதுவரைக்கும் மீள் குடியேற்றப்படவில்லை. காரணம் கண்ணிவெடி என இராணுவம் கூறுகிறது. ஆனால் அந்தப் பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுப ட்டு வருகின்றனர். எனவே இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வலி. வடக்கில் இராணுவத்தினரால் சுற்றுலா விடுதிகள், கோல்ப் மைதானம் என அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கும் தேசிய பாதுகாப்புக்கும் தொடர்பில்லை. எனவே அந்த பிரதேசங்களிலும் விரை வான மீள்குடியேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டும்.

அத்தோடு பிரதமரினால் கிளிநொச்சியில் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள காணிகள் அரச காணிகள் எனக் கூறப்பட்டது. ஆனால் அங்கு அப்படியல்ல. பரவிபாஞ்சான், இயக்கச்சி, கிருஷ்ணபுரம் போன்ற பிரதேசங்களில் இராணுவத்தினர் தனியார் காணிகளிலே உள்ளனர் எனவும் பாராளுமன்ற உறுப்பினரால் சுட்டிக் காட்டப்பட்டது. (2)

## நிர்வாக தெரிவுக்கூட்டம்

(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்கான இளைஞர் கழக பிரதேச சம்மேளன நிர்வாகத் தெரிவுக்கூட்டம் இன்று மாலை 2.30 மணிக்கு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக பிரதேச சம்மேளன தலைவர் மு. வருண்ஜீவ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள 25 இளைஞர் கழகங்களினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளார், உபதலைவர், உபசெயலாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி க.சிந்துஜன் அறிவித்துள்ளார். (2-281)




## 10 பிரதேச சபைகளின் ஆட்சிக்காலம் நாளைமறுதினம் நிறைவு பெறுகின்றது

வடமாகாணத்தில் உள்ள வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள 10 பிரதேச சபைகளின் ஆட்சிக்காலம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையுடன் நிறைவு பெறுகின்றது. இதனால் இப்பிரதேச சபைகளின் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்படவுள்ளதாக அந்தந்த பிரதேசசபைகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, வவுனியா மாவட்டத்தில் உள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச சபை, செட்டி குளம் பிரதேச சபை, வவுனியா சிங்கள பிரதேச சபை ஆகிய நான்கில் வவுனியா சிங்களப் பிரதேச சபை தவிர்ந்த ஏனைய பிரதேச சபைகள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்டவையாகும்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச சபை, நானாட்டான்பிரதேச சபை, மன்னார் நகரசபை, மன்னார் பிரதேச சபை ஆகிய நான்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்டவையாகும்.

குறித்த மாவட்டத்தின் ஐந்தாவது பிரதேச சபையான முசலி பிரதேச சபை முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையுடன் மொத்தம் 10பிரதேச சபைகளுக்கான ஆட்சிக்கால முடிவே நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையுடன் முடிபு பெறுகின்றது. இச் சபைகளுக்கான தேர்தல் நட த்துவதோ அல்லது சபைகளினு டைய ஆட்சி காலத்தை நீடிப்பதோ என்பதை ஜனாதிபதி முடிவெடுக்கவுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றது. (2-15)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கைக்கான சிறுவர் நிதியம் இணைந்து அவுஸ்திரேலியா சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் 13இலட்சம் ரூபாய் நிதியில் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட இளைஞர் மத்திய நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டபோது.... (படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

## வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு பணம் அறவீடு

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களுக்கு நகரசபையின் உதவியுடன் தனியார் பணம் அறவீடு செய்யும் செயற்பாட்டினால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கினறனா்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் பொருட்களை கொள்வனவு செய்ய வருவோர் மற்றும் பாடசாலைகளில் மாணவர்களை ஏற்றிச் செல்ல வருகை தரும் வாகனங்கள் உட்பட வீதியோரம் சில நிமிடங்கள் தரித்து நிற்கும் வாகனங்களுக்கு 30 ரூபா வீதம் அறவிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அறவிடப்படும் பணத்திற்கு வாகன தரிப்பிட குத்தகையாளர் என்ற தனிப்பட்ட பெயர் பொறிக்கப்பட்டு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு வரும் நிலையில் வாகன உரிமையாளர்கள் பலரும் பல்வேறு இடையூறுகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி வரும்போது 80 ரூபா வாடகையாக பெறவேண்டிய நிலையில் 30 ரூபாவை இக் குத்தகையாளருக்கும் வழங்க வேண்டியுள்ளதாகவும் முச்சக்கரவண்டி உரிமையாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, அரசாங்கத்திற்கு வருடாந்தம் வரி செலுத்துகின்ற போதிலும் வாகனத்தரிப்பிடம் அமைக்காது தினமும் இவ்வாறு வாகன தரிப்பிட குத்தகையாளர் என்ற போர்வையில் வவுனியா நகரசபை மக்களிடம் பணத்தை பெற்று வருவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். (2-250)

## 15 இலட்சம் பேரை கட்சியில் இணைக்கும் திட்டத்தை ஆரம்பித்தது ஐக்கிய தேசியக் கட்சி


(குருமன்காடு)

தேசிய ரீதியில் 15 இலட்சம் பேரை ஐக்கிய தேசிய கட்சியில் இணை க்கும் வேலைத் திட்டத்தின் கீழ் வன்னி மாவட்டங்களுக்கான ஆரம்ப நிகழ்வு வவுனியா சந் தைத் தொகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, சதோசா மற்றும் பொதுச்சந்தை பகுதியில் உள்ள வர்த்தகர்கள் பலரை கட்சியில் இணைப்பதற்கான அங்கத்துவ சிட்டையை வழங்கி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரும் ஐ.தே.கட்சியின் வன்னி அமைப்பாளருமான நுனைஸ்பாறுக் எம்.பி நேற்று இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த அவர்,

நாட்டில் தற்போது நல்லாட்சி மலர்ந்துள்ளது. இந்த நல்லாட்சியை ஏற்படுத்தியதில் பிரதான பங்கு வகித்தது ஐக்கிய தேசியக் கட்சியே ஆகும். கடந்த கால ஆட்சி



காரணமாக சிலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி இருந்தார்கள். அவர்களை மீள உள்வாங்க வேண்டிய தேவையுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமாகிய ரணில் விக்கிரமசிங்கவால் 15 இலட்சம் பேரை கட்சியில் இணைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வன்னி மாவட்டங்களுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. எதிர் வரும் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வன்னித் தேர்தல் தொகுதியில் 3 ஆசனங்களைப் பெறும் எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணாதாச, முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் இந் திரன்ஸ் சஜீந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீ க்குவானுக்கு இறுதி அஞ்சலி



சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ உடலுக்கு 3 இலட்சத்திற்கும் அதிகமான சிங்கப்பூர் மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தியுள்ள நிலையில், தொடர்ந்து மக்கள் கூட்டம் அந்நாட்டு பாராளுமன்ற வளாகத்தை நோக்கி படையெடுத்தப்படியே உள்ளனர்.

சிங்கப்பூரின் தந்தை மற்றும் 'நவீன சிங்கப்பூரின் சிற்பி' என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ உடல்நலக்குறைவு காரணமாக கடந்த திங்கட்கிழமை காலமானார். அவரது இறுதிச்சடங்கு இன்று நடைபெறுகின்றது.

அந்த நாட்டின் மொத்த மக்கள் தொகை 5.5 மில்லியன் (55 இலட்சம்) ஆகும். இதில் 3.34 இலட்சம் மக்களே சிங்கப்பூர் குடிமக்கள். மற்றவர்கள் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள். இதுவரை 3,30,000 சிங்கப்பூர் மக்கள் தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள் உடன் வந்து தங்களின் அன்பிற்கு இனிய தலைவருக்கு அஞ்சலி செலுத்தியபடி உள்ளனர். இது அந்த நாட்டு மக்கள் தொகையில் 10 சதவீதம் ஆகும்.

# பீஹாரில் யாசகர்களுக்காக யாசகர்களே நடத்தும் வங்கி

(கயா)

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் உள்ள ஆலய நகரமான கயாவில் யாசகர்களுக்காக யாசகர்களே நடத்தும் மங்கலா என்ற யாசகர் வங்கி தொடங்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மாமங்கல கௌரி கோயில் அருகே பிறரிடம் உதவி கோரி பிழைத்து வரும் 40 யாசகர்கள் ஒன்றிணைந்து இந்த மங்கலா என்ற பெயரில் 6 மாதத்துக்கு முன்னர் புதிய வங்கி ஒன்றை தொடங்கியுள்ளனர்.

வாரம் தோறும் இந்த 40 பேரும் தலா 20 ரூபாயை இந்த வங்கியில் வைப்புச் செய்து வருகின்றனர். இதன்மூலம் சேரும்வாராந்திர வசூல் தொகையான 800 ரூபாயை மூலதனமாக வைத்து இந்த வங்கி இயங்கி வருகின்றது.

இந்த குழுவை சேர்ந்த ராஜ்குமார் மஞ்சி என்பவர் இதன் மேலாளராக உள்ளார். மஞ்சியின் மனைவி நகினா தேவி பொருளாளராக இருக்கிறார்.

செயலாளராக மாலதி தேவியும், யாசகர்களிடம் இருந்து வார சந்தா தொகையை வசூல் செய்யும் ஏஜெண்டாக வனரிக் பஸ்வான் என்பவரும் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த வங்கியில் மேலும் பல யாசகர்களை இணைத்து, அவர்களின் எதிர்கால சேமிப்புக்கு உதவி செய்வதே எங்கள் நோக்கம் என மங்கலா வங்கியின் மேலாளர் மஞ்சி கூறுகிறார்.

இந்த வங்கியினால் அடைந்த பலனைப்பற்றி குறிப்பிட்ட மஞ்சி, சமீபத்தில் என் மகளும், சகோதரியும் சமையல் செய்து கொண்டிருந்த போது தீக்காயம் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தார்கள்.

அப்போது, சிகிச்சை செலவுக்கு எங்கள் வங்கி 8 ஆயிரம் ரூபாய் வட்டியில்லா கடன் தந்து உதவியது.

என்னைப் போன்ற யாசகர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கியோ, தனியார் வங்கியோ கடன் கொடுக்க முன்வருவதில்லை. இதைப்போன்ற சூழலில் எங்கள் மங்கலா வங்கி யாசகர்கள் அனைவருக்கும் கிடைத்த வரப்பிரசாதம் என்று கூறுகிறார். மாநில அரசின் சமூக நலத்துறை கடந்த ஆண்டு வலியுறுத்தியதன் விளைவாக இந்த வங்கியை தொடங்கும் முயற்சியில் இறங்கியதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் தூதுவர் உட்பட 10 பேர் பலி!

(மொகாடிசு)

**நட்சத்திர ஹோட்டலுக்குள் புகுந்த தீவிரவாதிகள் திடீரென மேற்கொண்ட சரமாரித் தாக்குதலில் சோமாலியாவுக்கான சுவிட்சர்லாந்தின் தூதுவர் உட்பட 10பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.**

சோமாலியாவின் தலைநகர் மொகாடிசுவில் மகா அல் முகாரமா என்ற நட்சத்திர ஹோட்டல் உள்ளது. இங்கு அரச அதிகாரிகள், வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தங்கியுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் திடீரென உள்ளே புகுந்தனர்.

முன்னதாக, ஹோட்டலுக்கு வெளியே முன்புறம் வெடிகுண்டு நிரப்பிய காரை வெடிக்க செய் தனர். இதற்கிடையே ஹோட்டலுக்குள் புகுந்த தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர்.

உடனே, ஹோட்டலில் இருந்த வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மாடிகளில் உள்ள ஜன்னல்கள் வழியாக குதித்து தப்பி ஓடினர். இருந்தும் தீவிர வாதிகளின் தாக்குதலில் 10 பேலி பலியாகினர்.

அவர்களில் சோமாலியாவுக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் யூசுப் முகமது இஸ்மாயில் என்பவரும் அடங்குவார். அவரது உடலில் தீவிரவாதிகளின் துப்பாக்கி குண்டுகள் பெருமளவில் பாய்ந்த தால் இரத்த வெள்ளத்தில் பலியானார்.

ஹோட்டலுக்குள் பலரை பணயக் கைதிகளாக தீவிரவாதிகள் பிடித்து வைத்துள்ளனர். அவர்களை மீட்க அமெரிக்கா பயிற்சி அளித்து வரும் சோமாலியா சிறப்பு அதிரடிப்படை இராணுவ வீரர்கள் புகுந்துள்ளனர்.

அவர்கள் தீவிரவாதிகளுடன் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டுள்ளனர். தற்போது ஹோட்டலின் பெரும்பகுதி சோமாலியா சிறப்பு படையின்கட்டுப்பாட்டில்வந்து விட்டது. அதே நேரத்தில் தீவிரவாதிகள் ஹோட்டலின் மேல் மாடிகளை ஆக்கிரமித்து தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையினர் மீது துப்பாக்கி சூடும், கையெறி குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இருந்தும் இராணுவ வீரர்கள் முன்னேறி வருகின்றனர். விரைவில் ஹோட்டலை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து பணயக்கைதிகளை மீட்பர் என தேசிய பாதுகாப்பு அமைச்சக செய்தி தொடர்பாளர் முகமது யூசுப் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த தாக்குதலுக்கு சோமாலியாவின் அல்ஷபாப் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# லண்டன் சென்ற இந்திய விமானத்தினை நடுவானில் கடத்த நடந்த சதிமுறியடிப்ப

லண்டன் செல்லும் ஏர் இந்திய விமானத்திற்கு சொந்தமான விமானத்தை கடத்த நடந்த முயற்சி முறியடிக்கப்பட்டு உள்ளது என ஜெட் ஏர்வே விமானி இமெயில் மூலம் இந்துஸ்தான் பத்திரிகை அலுவலகத்திற்கு கொடுத்த தகவலின் மூலம் தெரியவந்துள்ளது. இதை தொடர்ந்து பல விமான நிறுவனங்களுக்கும் விமானங்கள் குறித்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகைக்கு ஏர்ஜெட் விமானிஒருவர் அனுப்பி உள்ள மெயிலில் கூறயிருப்பதாவது.

ஏர் இந்திய விமானத்தில் ஒரு பயணி திடீர் என உடல் நிலை பாதிக்கப்பட்டது போல் நடித்தார். இதை தொடர்ந்து விமானத்தில் இருந்த 5 பேர் டாக்டர்கள் என கூறி தாமாகவே முன்வந்தனர். பயணியை சோதனை செய்த பிறகு அவர்கள் உடனடியாக விமானியை சந்திக்க வேண்டும் என கூறினர். ஆனால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

விமானி டாக்டர்கள் குழுவின் நடவடிக்கையில் சந்தேகத்தை உணர்ந்து அவர்களை சந்திக்க மறுத்து விட்டார். உடல் நிலைசரியில்லாதவரை தொடர்ந்து சோதனை நடத்தினர்.

டாக்டர்கள் என கூறி முன்வந்த 5 பேரும் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள். மேலும் அவர்களது ஆவணங்களை ஆய்வு செய்கையில் அவை அனைத்தும்போலியானவை என தெரிய வந்தது. விமான கட்டுப்பாட்டு குழுவினர் இது போன்ற விபரங்களை ஏனைய விமான நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பர் என கூறியுள்ளார்.

இது விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனங்களுக்கு பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது. அனைத்து விமான பணியாளர்களுக்கும் மிகவும் கவனமாக இருக்க எச்சரிக்கை செய்யபட்டுள்ளனர். கண்டிப்பாக விமானம் பறக்க அனுமதி இல்லாத பகுதிகளில் பறக்காமல் இருக்கவும் விமானதள கொள்கைகளை கடுமையாக கடைப்பிடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என அந்த விமானி கூறியுள்ளார். இதை தொடர்ந்து அனுமதி இல்லாத நபர்கள் விமானியின் அறைக்குள் செல்லக் கூடாது என கடுமையான வழிமுறைகள் பின்பற்றப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இதை உளவுத்துறை அதிகாரிகள் இது அபத்தமான தகவலாகும் என கூறி மறுத்து உள்ளனர். (இ)

# வாஜ்பாய்க்கு 'பாரத ரத்னா' விருதை பிரணாப் நேரில் சென்று வழங்கினார்

இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை முன்னாள் பிரதமரும் பாஜக மூத்த தலைவருமான அடல் பிகாரி வாஜபாய்க்கு டில்லியில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, நேற்று முன்தினம் நேரில் வழங்கினார்.

குடியரசு துணைத் தலைவர் ஹமீது அன்சாரி, பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் வாஜ்பாயின் குடும்ப உறுப்பினர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், பாஜக மூத்த தலைவர் அத்வானி, ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத், பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல், ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே, மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌகான், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஐக்கிய ஜனதா தளத் தலைவர் சரத் யாதவ் உள்ளிட்டோரும் அப்போது உடனிருந்தனர்.



1998 முதல் 2004ஆம் ஆண்டு வரை பிரதமர் பதவியை வகித்த வாஜ்பாய், முதுமை காரணமாக பொது வாழ்வில் இருந்து விலகியுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உடன் லாகூர் ஒப்பந்தத்தில் வாஜ்பாய் கையெழுத்திட்டார்.

இதைத் தொடர்ந்து, டில்லி-லாகூர் இடையே பேருந்து சேவையைத் தொடக்கி வைத்தார்.

1992ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு, பாஜக மீதிருந்த அதிருப்தியைப் போக்கி, கட்சியை மைய அரசியலுக்குக் கொண்டு வந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சி செய்த காங்கிரஸ் அல்லாத முதல் பிரதமரும், முதுபெரும் அரசியல் தலைவருமான இவருக்கு, பாரத ரத்னா விருதை கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி மத்திய அரசு அறிவித்தது.

பாரத ரத்னா விருது பெற்ற வாஜ்பாய்க்கு பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், நிதியமைச்சர் அருண் ஜெட்லி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஒமர் அப்துல்லா உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்டனையும் தங்கத்தையும் பேரிகை யையும் முரட்டுக் குதிரையையும் நற்குண விருத்தி கருதி அடிக்க வேண்டும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## தக்கனின் யாகம் அழித்த வீரபத்திரரைச் சந்தித்தேன்

உமையம்மைக்கு தாட்சாயிணி என்றொரு பெயர். தக்கனின் மகள் என்பதால் தாட்சாயிணி என்று அழைக்கப்படலாயிற்று. தக்கன், சிவப்பரம்பொருள் மீது கடும் கோபம் கொண்டிருந்தான்.

ஒரு முறை அவன் மிகப்பெரியதொரு யாகம் செய்தான். யாகத்திற்கு வருகை தருமாறு பிரம்மா, விஷ்ணு, இந்திரன், சந்திரன் உள்ளிட்ட தேவர்களுக்கு அழைப்பு விடுத்தான்.

ஆனால், சிவனுக்கு அழைப்பு அனுப்பவில்லை. தக்கன் யாகம் செய்வதாக இருந்தால், முழுமுற் கடவுளாகிய சிவனுக்கு அழைப்பு அனுப்பி அவரை வரவேற்க வேண்டும். அதுவே நடைமுறையும் ஒழுங்கு முறையுமாகும்.

சிவனுக்கு அழைப்பு அனுப்பப்படாதவிடத்து தேவர்கள் யாகத்திற்கு செல்வது முறையன்று.

மாறாக, சிவனுக்கு அழைப்பு அனுப்பாத நீ! நடத்துகின்ற யாகத்திற்கு நாம் எங்ஙனம் வர முடியும் என்று தேவர்கள் தக்கனிடம் கேட்டிருக்க வேண்டும்.

ஆனால் அப்படி எதுவும் கேட்காமல் யாகம்; அவிபாகம் என்றவுடன் தேவர்கள் சிலர் தக்கனிடம் ஓடிச் சென்றுவிட்டனர்.

தன்னை அவமதித்து தக்கன் நடத்தும் யாகத்திற்குச் சென்ற தேவர்கள் மீது சிவனுக்குக் கடும் கோபம்.

தக்கனுக்கும் தேவர்களுக்கும் பாடம் புகட்ட நினைத்த சிவன், வீரபத்திரர் என்ற தனது விசேட படைத்தளபதியை தோற்றுவித்து உரிய இடத்திற்கு அனுப்பினார்.

தக்கன் யாகம் செய்யும் இடத்திற்குச் சென்ற வீரபத்திரர், யாகத்தை அழித்தார். தேவர்களுக்கு நல்ல சாத்துச் சாத்தினார். யாக மண்டபத்தில் ஒரே சுக்குரலாய் இருந்திருக்கும்.

தேவர்களே! உங்கள் எல்லோருக்கும் முழுமுதலாக – முதலமைச்சராக இருக்கும் சிவனுக்கு அழைப்பு அனுப்பாத தக்கனின் யாகத்திற்கு எப்படி நீங்கள் செல்ல முடியும்? நீங்கள் யாகத்திற்குச் சென்றால் அந்தத் தக்கன் சிவனை மதிப்பானா என்ன? உங்களுக்கு அறிவே இல்லையா? என்றெல்லாம் வீரபத்திரர் ஆவேசமாக பேசியிருப்பார் என்பது நம் கற்பனை.

சிவனுக்கு அழைப்பு அனுப்பவில்லை என்பதற்காக தக்கனின் யாகத்தை அழித்தொழித்ததுடன் யாகத்திற்குச் சென்றவர்களுக்குப் பாடம் புகட்டிய வீரபத்திரர் என் முன் தோன்றி, பக்தனே! உன் பக்தியை மெச்சினேன் உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றால்,

சுவாமி! தங்கள் திருவடிக்கு வணக்கம். முன்பு ஒருமுறை சிவனுக்கு அழைப்பிதழ் அனுப்பாமல் தக்கன் செய்த யாகத்தை அழித்தொழித்து அறம் காத்த பெருமானே!

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது, வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அழைப்பு அனுப்பவுமில்லை; சந்திப்பு நடத்தவுமில்லை.

இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலர் ரணிலை வரவேற்றுள்ளனர். சுவாமி ! தக்கனின் யாகம் அழித்தது போன்ற நடவடிக்கை ஏதேனும் தற்போது உங்களிடம் உண்டா? என்று கேட்டேன். அதற்கு வீரபத்திரர் பக்தனே! உன் ஆதங்கம் புரிகிறது. போடுகின்ற புள்ளடியை தமிழர்கள் சரியாகப் போட்டால் எல்லாம் சரியாகும்.

தக்கனின் காலம் வேறு; இப்போது நிலைமை வேறு. யாகத்தை அழித்தது போல – தேவர்களுக்கு அடி கொடுத்தது போல இப்போதும் நடவடிக்கை எடுத்தால் ஐ.நா சபை விசாரணைக்கும் ஆட்பட வேண்டிவரும்.

ஆகையால் தேர்தல் வரும்போது நீங்களே தண்டனை கொடுங்கள். நீங்கள் தண்டனை கொடுத்தால் அது எல்லோருக்கும் நல்ல பாடமாக அமையும். எனவே வாக்களிக்கும் போது ரணிலின் யாழ்ப்பாண வருகையை மறக்காமல் செயற்படுங்கள். இவ்வாறு கூறியபடி வீரபத்திரர் விடை பெற்றார். என்ன செய்வது? ஏதும் அறியாது திகைத்தேன்.

## கசிப்புடன் இரண்டு பெண்கள் கைது

மட்டக்களப்பு கிரான் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர்களான இரண்டு பெண்களை கல்குடா பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தர்மிக்க நவரெட்ன தெரிவித்தார்.

அரசின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தின் கீழ் நாட்டில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விஷேட வேலைத்திட்டத்தின் பிரகாரம் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய பொருட்களும் கசிப்புடன் கூடிய கொள்கலன்கள் மற்றும் கோடா போன்றவற்றை கைப்பற்றியதாகவும் தெரிவித்தார்.

சந்தேக நபர்களையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## ஆண்டுவிழாவும் கால்கோள் விழாவும்

பொற்பதி அறிவாலயத்தின் 3ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் சரஸ்வதி முகாம் பள்ளியின் 30 ஆவது கால்கோள் விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் கிழக்கு பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறும்.

பொற்பதி அறிவாலயத் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் வடக்கு மாகாண விவசாய, கால்நடை மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (எ)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கட்டுநாயக்கவில் வைத்து கைது!

போலியான விசா மற்றும் கடவுச் சீட்டுகளை பயன்படுத்தி நியூசிலாந்து செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியினரை கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து இடையிலான உலகக் கிண்ண இறுதி கிரிக்கெட் போட்டியை பார்க்கப் போகும் போர்வையில் நியூசிலாந்து செல்ல முயற்சித்த தம்பதியினரே இவ்வாறு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி பருத்தித்துறையை சேர்ந்த இவர்கள் போலி விசா மற்றும் போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நியூசிலாந்து செல்ல முயற்சித்த போது விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதி காரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நியூசிலாந்தில் வசிக்கும் இவர்களின் உறவினர் ஒருவர் இலங்கையில் உள்ள முகவர் ஊடாக வெளிநாடு செல்வதற்கான ஆவணங்களை போலியாக தயாரித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நியூசிலாந்தில் இறங்கிய பின்னர், 30 இலட்சம் ரூபாய் வழங்கும் உடன்பாட்டின்அடிப்படையில் முகவர் இந்த போலி ஆவணங்களை தயார் செய்து கொடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது. (இ)

## 'ஓசன்னா பாடி எங்களை விடுவித்தருளும் இறைவா' என வேண்டுவோம்

இன்று குருத்து ஞாயிறு அல்லது குருத்தோலைத் திருவிழா ஆகும். இது இயேசு எருசலேம் நகருக்குள் வெற்றி ஆர்ப்பரிப்போடு நுழைந்த நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் கொண்டாடுகின்ற ஒரு விழாவா கும். பைபிளின்படி மக்கள் அன்று குருத் தோலைகளைப் பிடித்துக்கொண்டு இயேசுவுக்கு எதிர்கொண்டு போனார் கள். இவ்வாறு, குருத்தோலைகளை அசைத்து, வழியில் துணிகளை விரித்து, இலைதழைகளைப் பரப்புவது ஓர் ஆழ்ந்த பொருள் படைத்த செயலாக மாறியது. இயேசுவை இன்று தம் மெசியா வாக ஏற்பவர்களும் அவரை மாட்சியுடைய மன்னராக மட்டுமே பார்க்காமல், துன் பங்கள் மற்றும் சாவு வழியாக உலிற்குப் புத்துயிர் வழங்கியவராகக் காண வேண் டும் என்பது இந்நிகழ்ச்சியின் பொருள்.

கத்தோலிக்க சபை வழக்கப்படி, குருத்தோலை கோவிலுக்கு வெளியே மந்திரிக்கப்படும் குருத்து ஞாயிறு ஏன் கொண்டாடப்படுகிறது என்பதைக் குரு விளக்குவார். இறைவேண்டலுக்குப் பின் பவனி தொடங்கும். பவனியின் போது பாடல்கள் பாடப்படும். குறிப்பாக,

### பரமபிதா காட்டிய பாதை

ஓசன்னா என்னும் குரல் கேட்கும். அச்சொல்லுக்கு எபிரேய மொழியில் 'இறைவா, விடுவித்தருளும்" என்பது பொருள். அத்துடன் 'வாழ்க!' என்பதும் அதன் பொருளாகும். கிழக்குத் திருச்சபையில் குருத்து ஞாயிறு 'ஆண்டவர் எருச லேமில் நுழைந்த திருநாள்' என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது. இது வழி பாட்டு ஆண்டின் முக்கிய பன்னிரு திரு நாட்களுள் ஒன்றாகும். புனித வாரத்தின் முதல் நாளாக இது கருதப்படுகிறது.

விண்ணரசை மண்ணகத்தில் விதைத்திடவந்த இயேசு கிறிஸ்து அரசருக்கெல்லாம் அரசராக, சமாதானப் பிர புவாக தாழ்மையின் கோலமாக எருச லேம் நோக்கி மேற்கொண்ட பயண த்தின் வெற்றிப் பவனி நினைவு தினமே இன்றாகும். இரகசியமாக எருசலேமில் நுழைய இயேசு விரும்பவில்லை. திட்டமிட்டு சமாதானம் சுமந்து செல்லும் அரசனாக சாந்த குணமுள்ளவராக நகர் வலம் வருகின்றார். இவரைக் கொலை செய்யப் பலர் வழிபார்த்திருந்தனர். ஆனாலும் யாவரும் பார்க்கும் வண் ணம் பார்த்தவர்களும் பங்குகொண்டு பவனியை சிறப்பிக்கும்படி செயற்படுகின்றனர். இப்பவனியில் கடவுளின் அன்பை மனுக்குலம் கண்டு கொள்ள முடிந்தது. ஆடம்பரமாக அடிமைப்படுத்துபவராக அதிகார வேட்கை கொண்டவராக வரவில்லை. அன்பு நிறைந்தவராக சமாதானத்தின் சின்னமாகிய கழுதையில் பவனி வருகின்றார்.

கழுதையை ஏன் சமாதானத்தின் சின்னம் எனக் காண்கிறோம் என்றால் இது கோ – ஏறும் கழுதை. போருக்குச் செல்லும் அரசன் குதிரையில் செல்வான். சமாதானக் காலத்தில் அரசரின் சுற்றுப் பயணம் கோவேறு கழுதையில் நடைபெற்ற தாம். சமாதானம் சொல்ல வரும் அரசன் கோவேறு கழுதையில் தான் பயணம் செய்வான். இயேசு பவனி வந்த போது எருசலேம் நகரைப் பார்த்து அழுதார். ஆலயத்தை சுத்தப்படுத்தினார். இதற்கெல்லாம் காரணம் முரண்பாடு நிறைந்த உலகும் முரண்பாடு நிறைந்த வாழ்வுமா கும். இயேசு பவனி செல்லும் போது எருசலேம் நகருக்குள் வரவேற்ற மக்கள் ஓசன்னா எங்களை விடுவித்தருளும் என்று கெஞ்சிக் கேட்டவர்கள் ஒரு வாரத்தில் ஒழிக ஒழிக எனக் கூக்குரலிட்டார்கள். மக்கள் அதிகாரிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் அநீதிகளுக்கும் அடிமைப்பட்டு போய் விட்டார்கள்.

ஒரு கட்டத்தில் வீதியெங்கும் ஆடைகளை விரித்து அரசனை வரவேற்பதைப் போல் வரவேற்ற மக்கள் தாவீதின் குமாரன் எனக் கூறியவர்கள். ஒரு வாரம் கழித்து கொலை வெறி கொண்டு பரபாசை விடுதலை செய்யும்படியும் இயேசுவைக் கொலை செய்யும்படியும் கூக்குரலிடுகின் றனர். மக்கள் கொலை வெறியர்களாக மாறி குற்றமில்லா இவரின் இரத்தத்தையே குடிக்க விரும்பினார்கள். இயேசு பவனி வந்தபோது மக்களின் மனங்களில் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரு வாரத்துக்குள் முகங்களைச் சுருக்கியவர்களாக மனங்களை இறுக, இறுக்கியவர்களாக மகிழ்ச்சியை இழந்து கல்மனதுடன் காட்சி தருகின்றார்கள். இன்றும் மகிழ்ச்சியை தேடும் மக்கள் மகிழ்ச்சி இன்றி முகங் களை விகாரமாக்கி வாழ்கின்றார்கள். இது எல்லாவற்றையும் பார்க்கும் போது, அல்லது சிந்திக்கும் போது அழுகை வராமல் சிரிப்பா வரும்? துப்புரவு செய்ய வேண்டியதை துப்புரவு செய்யாமல் அசுத்தத்தில் வாழ முடியுமா?

இதனால் தான் வெற்றிப்பவனியாக இருந்தாலும் சரி செய்ய வேண் டியதை சரி செய் தார் இயேசு. இத னால் இயேசுவுக்குத் துன்பம் நேர்ந்ததுடன் இத்துன்பம் இயேசுவைக் கொலைகளத் திற் குக் கொண்டு செல் கி ன் ற து . கொலை வெறியர்களைக் தூண்டுவது மக்களின் முரண்பாடு கள் நிறைந்த மாறுபாடான வாழ்க்கை.



இன்றைய சமூ கம் மாறுபாடான சமூக மாக இருக்காமல் 'ஓசன்னா' என்று கூறும் அதாவது எங்களை விடுவித்தருளும் என்று கூறும் சமூகப் பொறுப்புள்ள சமூகமாக மாற வேண்டும். யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்த போதிலும் அதனால் பாதிக்கப்பட்ட உளவியல் தாக்கங்கள் நிறைந்ததுடன் சகலவற்றையும் இழந்து பலவீனம் அடைந்து போயுள்ள சமூகம் இறைவனிடம் 'இறைவா, விடுவித்தருளும்' என வேண்ட வேண்டும். சமூக சீர்கேடுகள் கலாசார சீரழிவுகள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் மது, மாது மற்றும் போதைப் பொரு ளுக்கு அடிமையாகிப் போயுள்ள வர்கள் சிறு வயதுகளில் செய்யப்படு கின்ற கருச் சிதைவுகள் என பட்டியல் நீண்டு செல்லும். ஆன்மீக களமாக இருக்க வேண்டிய திருச்சபை மாறி விட்டது.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

திருச்சபை மக்களின் குரலாக இருக்க வேண்டிய நேரத்தில் மக்களின் குரலை அடக்கும் ஓர் ஊடகமாக மாறக் கூடாது. திருச்சபைகளுக்குள்ளே நடக்கும் அநீதிகளிலுமிருந்து 'எங்களை விடுவித்தருளும்' என இறைவனிடம் கேட்கவேண்டும்.

திருச்சபை தன் இலக்கை விட்டு விலகிச் செல்கின்றது என நாம் எண்ணினால். இயேசு தன் வெற்றிப் பவனியின் போது எருசலேமில் செய்த அனைத்துச் செயல்களையும் குறிப்பாக ஆலயத்தை கள்ளர் குகையாக மாற்றியிருந்தவர்களை துரத்தியடித்தது போன்று எம் நடுவிலும் செய்யும்படி இறைவனிடம் கேட்கவேண்டும். எங்களை விடுத்தருளும் எல்லா அக்கிரமக் கட்டுக்களிலிருந்தும் எம்மையும் எம் நாட்டையும் விடுவிப்பதுடன் எமது புதிய ஜனாதிபதியையும் இறையருளால் நிரப்பி அவரும் நாடெங்கும் வெற்றிப்பயணம் மேற்கொள்ள வழி நடத்த வேண்டுவோம். ஆகவே, இப்பவனியில் எமக்கும் அமைதி கிடைக்க நாமும் செபிப்போம் செயற்படு வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 உலகக்கிண்ணம் யாருக்கு?
# அவுஸ்திரேலியா-நியூசிலாந்து




## இன்று பனிப்போர்

11ஆவது உலக கோப்பை கிரிக்கெட் திருவிழா இன்று நிறைவடைகிறது. போட்டியை நடத்தும் நாடுகளான அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் இறுதிப்போட்டிக்குள் அடியெடுத்து வைத்துள்ளன. கோப்பை யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இவ்விரு அணிகள் இடையிலான 'இறுதியுத்தம்' அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இன்று இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 8 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ள பிரன்டன் மக்கலம் தலைமையிலான நியூசிலாந்து முதல் முறையாக மகுடத்தை சுவைக்கும் உத்வேகத்துடன் ஆயத்தமாகி வருகிறது. வெற்றி பெற்றால் அது நியூசிலாந்து அணியின் 300ஆவது ஒரு நாள் போட்டி வெற்றியாகவும் அமையும். அதே சமயம் 5ஈவது பட்டத்திற்கு குறி வைத்துள்ள மைக் கேல் கிளார்க் தலைமையிலான அவுஸ்திரேலியாவும் எதிரணியை மடக்குவதற்கான வியூகங்களை தீட்டி வருகிறது.

இந்த உலக கோப்பையை பொறுத்தமட்டில் நியூசிலாந்து அணி லீக் முதல் அரைஇறுதி வரையிலான தனது அனைத்து ஆட்டங்களையும் சொந்த நாட்டிலேயே விளையாடி இருக்கிறது. இப்போது தான் முதல் முறையாக அவுஸ்திரேலிய மண்ணில் விளையாடப் போகிறது. இது தங்களுக்கு சாதகமாக இருக்கும் என்று அவுஸ்திரேலியா கருதுகிறது.

உலக கோப்பை போட்டிகளில் இவ்விரு அணிகளும் இதுவரை 9 ஆட்டங்களில் நேருக்கு நேர் மோதி 6இல் அவுஸ்திரேலியாவும், 3இல் நியூசிலாந்தும் வெற்றி பெற்றிருக்கின்றன.

1987: முதல் மூன்று உலக கோப்பை போட்டிகளில் சந்திக்க வாய்ப்பு பெறாத அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் 4ஆவது உலக கோப்பையில் லீக் சுற்றில் இரண்டு முறை மோதின. இரண்டிலும் அவுஸ்திரேலியாவே வெற்றி பெற்றது. அதாவது ஒரு ஆட்டத்தில் 3 ரன் வித்தியாசத்திலும், மற்றொரு ஆட்டத்தில் 17 ரன் வித்தியாசத்திலும் நியூசிலாந்தை தோற்கடித்தது.

1992: இந்த உலக கோப்பையின் தொடக்க லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி அளித்தது. முதலில் பட் செய்த நியூசிலாந்து 6 விக்கெட்டுக்கு 248 ரன்கள் சேர்த்தது. கப்டன் மார்ட்டின் குரோவ் சதம் (100) அடித்தார். பின்னர் ஆடிய அவுஸ்திரேலிய அணியில் டேவிட் பூன் (100) சதம் எடுத்த போதிலும் அந்த அணி 48.1 ஓவர்களில் 211 ரன்களில் ஓல் அவுட் ஆனது. கடைசி 17 பந்துகளில் மட்டும் அவுஸ்திரேலியா 5 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

1996: இது சென்னையில் நடந்த கால்இறுதி ஆட்டம். முதலில் பட் செய்த நியூசிலாந்து 6 விக்கெட்டுக்கு 286 ரன்கள் குவித்தது. கிறிஸ் ஹரிஸ் 130 ரன்கள் விளாசினார். அடுத்து ஆடிய அவுஸ்திரேலியா மார்க் வாக் (110 ரன்) சதத்தின் உதவியுடன் 47.5 ஓவர்களில் இலக்கை எட்டியது.

1999: லீக் சுற்றில் ஆவுஸ்திரேலியா நிர்ணயித்த 214 ரன்கள் இலக்கை நியூசிலாந்து அணி 45.2 ஓவர்களில் அடைந்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2003: இது சுப்பர் சிக்ஸ் சுற்று ஆட்டம். ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி 96 ரன்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை பந்தாடியது. இலக்கு 209 ரன்கள் என்ற போதிலும் நியூசிலாந்து 30.1 ஓவர்களில் 112 ரன்களில் அடங்கியது. வேகப்புயல்கள் பிரெட்லீ 5 விக்கெட்டுகளும், மெக்ராத் 3 விக்கெட்டுகளும் அள்ளினர்.

2007: சுப்பர்-8 சுற்று ஆட்டமான இதில் முதலில் பட் செய்த அவுஸ்திரேலியா 6 விக்கெட்டுக்கு 348 ரன்கள் குவித்தது. மேத்யூ ஹைடன் 103 ரன்கள் எடுத்தார். உலக கோப்பை போட்டி வரலாற்றில் பதிவான 100ஆவது சதம் இதுவாகும். நியூசிலாந்து அணி 25.5 ஓவர்களில் 133 ரன்களில் சுருண்டது.

2011: லீக் சுற்று ஆட்டத்தில் நியூசிலாந்து 206 ரன்கள் எடுக்க, அதை அவுஸ்திரேலியா 34 ஓவர்களிலேயே எட்டிப்பிடித்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.

2015: நடப்பு உலக கோப்பை தொடரில் இவ்விரு அணிகளும் ஒரே பிரிவில் (ஏ பிரிவு) இடம் பெற்றிருந்ததால் லீக்கில் சந்திக்க நேர்ந்தது. ஆக்லாந்து ஈடன் பார்க்கில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் பட் செய்த அவுஸ்திரேலியா 32.2 ஓவர்களில் 151 ரன்களில் வாலை சுருட்டிக் கொண்டது. டிரென்ட் பவுல்ட் 5 விக்கெட்டுகளை சாய்த்தார்.


ஆனால், குறைந்த ரன்கள் எடுத்தாலும் அவுஸ்திரேலிய வீரர்கள் மனம் தளராமல் முழுமூச்சுடன் வரிந்து கட்டினர். தோல்வியின் விளிம்புக்கு சென்ற நியூசிலாந்து ஒரு வழியாக 23.1 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 152 ரன்கள் எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

லீக்கில் நியூசிலாந்துடன் அடைந்த தோல்வி தான் தங்களை விழித்தெழ வைத்ததாக அவுஸ்திரேலிய கப்டன் மைக்கேல் கிளார்க் கூறியிருக்கிறார். இது இறுதிப்போட்டியில் எந்த அணிக்கு எதிரொலிக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். (க)





## அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்துவதில் போல்ட் ஸ்டார்க் இடையே போட்டி



அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை மெல்பேர்ன் மைதானத்தில் போட்டிகளை நடத்தும் அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்த உலகக்கோப்பை தொடரில் நியூசிலாந்தின் இடது கை வேகப்பந்து வீச்சாளர் போல்ட், அவுஸ்திரேலியாவின் ஸ்டார்க் ஆகியோர் சிறப்பாக பந்து வீசி வருகிறார்கள். போல்ட் 8 போட்டிகளில் விளையாடி 21 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார். ஆனால், ஸ்டார்க் 7 போட்டிகளில் விளையாடி 20 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார். இறுதிப் போட்டியில் போல்ட் எடுக்கும் விக் கெட்டை விட ஸ்டார்க் அதிகமாக இரண்டு விக்கெட் டுக்கள் வீழ்த்தினால் ஸ்டார்க் முத லிடம் பிடிப்பார். இல்லையெனில் போல்ட் முதல் இடம்பிடிப்பார்.

அதேபோல் பட்டிங்கில் நியூசிலாந்து வீரர் குபதில் சங்கக்காரவை விட 9 ரன்கள் பின்தங் கிய நிலையில் உள்ளார். இறுதிப்போட்டியில் 10 ரன்கள் எடுத்தால்இந்த தொடரில்அதிக ரன் எடுத்தவர் என்ற பெருமையை குப்தில் பெறுவார். இந்திய அணி கப்டனும் விக்கெட் கீப்பருமான டோனி 15 பேரை அவுட்டாக்கி முதல் இடத்தில் உள்ளார். நியூ சிலாந்து கீப்பர் ரோஞ்சி 13 பேரை அவுட்டாக்கி உள்ளார்.

## உலகக்கிண்ண இறுதிப்போட்டியுடன் ஆஸி கப்டன் கிளார்க் ஓய்வு



அவுஸ்திரேலியா அணியின் கப்டன் மைக்கேல் கிளார்க் உலக கோப்பையின் இறுதி ஆட்டத்துடன் ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக தெரிவித்துள்ளார்.

மைக்கல் கிளார்க் தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். முதுகு வலியுடன் நீண்ட நாள் விளையாடி வரும் அவர், இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது காலில் காயம் ஏற்பட்டது. இதனால் டெஸ்ட் தொடரில் இருந்து விலகிய அவர் அதன் பிறகு முத்தரப்பு ஒரு நாள் தொடரிலும் பங்கேற்கவில்லை. ஆகவே, உலகக் கோப்பை அணியில் இடம்பெறுவாரா? என்ற சந்தேகமும் எழுந்தது. ஆனால், அவர் உடல்தகுதியை நிரூபித்ததால் அணியில் சேர்க்கப்பட்டார்.

நீண்ட நாட்களாக அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடி வரும் கிளார்க் இன்று நடைபெறும் இறுதி ஆட்டம் பற்றி செய்தியாளர்களிடம் பேசிய போது ஓய்வு அறிவிப்பை தெரிவித்தார். இதனால் இன்றைய போட்டி அவருக்கு உணர்ச்சிகரமான போட்டியாக இருக்கப்போகிறது.

அவுஸ்திரேலியாவிற்கு உலகக்கோப்பையை பெற்று தந்த சந்தோசத்துடன் ஓய்வு பெறுவாரா? என்பது இன்று தெரியும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்போர்னில் இரு அணிகளுக்கும் சமமான வாய்ப்பு - மக்கலம்



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இலங்கை நேரப்படி இன்று காலை 9 மணிக்கு மெல்போர்ன் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இதில் போட்டியை நடத்தும் அவுஸ்திரேலிய - நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்து கின்றன. இப்போட்டி குறித்து நியூசிலாந்து அணித் தலைவர் மக்கலம் கூறியதாவது,

எங்களது வாழ்வில் இது ஒரு சி[illegible]பான நேரம். இது ஒரு அற்புதமான பயணம். போட்டி தொடங்கியதில் இருந்தே எங்களது கனவு சரியாக பலித்து வருகிறது. இறுதிப் போட்டியில் அற்புதமான சாதனை செய்ய 50-50 வாய்ப்புகள் என்று எங்களுக்கு நாங்களே மதிப்பெண் கொடுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். மேலும், நியூசிலாந்து மைதானங்கள் மிகச் சிறியதாக இருந்தன. மெல்போர்ன் மிகப்பெரிய மைதானம். இது குறித்து மக்கலமிடம் கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், உண்மையிலேயே எங்களுக்கு இது ஒரு வித்தியாசமானதுதான். பல்வேறு நாடுகளில் உள்ள இதேபோன்ற மைதானங்களில் விளையாடியுள்ளோம். நீங்கள் அபுதாபியில் உள்ள எமிரேட்ஸ் மைதானத்தை பார்த்தால் தெரியும். அதுவும் மிகப்பெரிய மைதானம்தான். ஆனால், மெல்போர்ன் மைதானத்திற்கு சமம் என்று சொல்ல முடியாது. மெல்போர்ன் பவுண்டரி லைன் உண்மையிலேயே அதிக தூரம்தான். ஆனால், இந்த நாளில் இந்த வயதில் பந்தை விரைவாக விரட்டி பவுண்டரி மற்றும் சிக்ஸர் விளாச முடியும். நாங்கள் நாளை (இன்று) சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்து வோம். ஆனால், எங்களின் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது. அவுஸ்திரேலியாவால் எங்களை வெல்ல முடியாது என்றும் அர்த்தம் கொள்ளக் கூடாது.

இந்தத் தொடர் முழுவதும் சிறப்பாக விளையாடிய திறமையைக கொண்டு எங்களுக்கு சாதகமான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என்பதில் நான் மிக உறுதியாக இருக்கிறேன் என்றார். (க)

## திறமையாக விளையாடினால் உலகக் கிண்ணத்தை வெல்லலாம்

### கிளார்க் நம்பிக்கை



அவுஸ்திரேலிய அணியின் தலைவர் கிளார்க், இன்று நடைபெறும் உலகக்கிணண இறுதிப் போட்டிக்குப் பிறகு ஓய்வுபெறப் போவதாக தெரிவித்துள்ளார்.

போட்டி குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

நாளைய (இன்றைய) போட்டி சிறப்பான போட்டியாக இருக்கும். இதில் எந்தசந்தேகமும்இல்லை. ஆனால், அது எனது அணி சார்ந் ததாக இருக்க வேண்டும். அதைத் தான் நானும் விரும்புகிறேன்.

இந்த போட்டி குறித்து அணி வீரர் களிடம் பேசினேன். அப்போது உணர்ச்சிவசப்பட வேண்டாம். திறமையுடன் விளையாட வேண்டும்.

இது இரண்டும் முக்கியமான போட்டி மற்றும் தொடரை வெல்ல முக்கிய காரணிகளாக இருக்கும் என்று வலியுறுத்தினேன். ஆகவே, நாளைய போட்டியில் எந்த வித்தியாசமும் இருக்காது.

மெல்போர்ன் மைதானத்தில் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடுவது ஒவ்வொரு வீரர்களுக்கும் அற்புதமான தருணம். இது ஒரு மிகச்சிறப்பான ஆட்டம். எனக்கு இது கடைசி போட்டி என்பதால் இன்னும் சிறப்பானதாகும் என்றார். (க)

## ஜனசக்தி ச.ச. நிலையம் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டி

யாழ் மாவட்ட தாச்சிச் சங்க அனுசரணையுடன் நடைபெறும் ஜனசக்தி சன சமூக நிலையம் நடத்தும் மின்னொளியிலான தாச்சிச் சுற்[illegible]போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் முதலாவது அரையிறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இதில் கண்ணகி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழகமும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் காளியம்மாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வள்ளுவன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

வெற்றி பெறும் அணிகளுக்கான இறுதிப்போட்டி எதிர்வரும் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 3-ம் இடத்திற்கான போட்டி 4-ம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது. (க)

## விசாரணைக்...

தொடர்பில், ஐ.நா மனித உரிமைகள் பேரவை மேற்கொண்டு வரும் அறிக்கை இம்மாதம் சமர்ப்பிக்க தீர்மானித்திருந்தது.

எனினும் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் காரணமாக பக்கசார்பற்ற உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படும் என தற்போதைய அரசாங்கம் கேட்டு கொண்டதற்கிணங்க இவ் அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் சமர்ப்பிப்பதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அனுமதி வழங்கியிருந்தார்.

இந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காலம் தாமதப்படுத்தப்பட்டமையினால் மேலதிக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இல்லை என மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்கெனவே போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இதனால் மேலதிக நிதி ஒதுக்கீடு மேற கொள்ள தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## பாதுகாப்புக்கு குந்தக...

கள் தொடர்பிலும் அனைத்து தரப்புடனும் கலந்துரையாட வேண்டியுள்ளது.

கடற்படை உட்பட முப்படையினரும் நாட்டிற்கு செய்து வருகின்ற அர்ப்பணிப்பு மிக்க சேவையினை நானும் இந்நாட்டு ஜனாதிபதியும் நன்கு அறிவோம். அர்ப்பணிப்பு மிக்க சேவையினை நாம் வரவேற்பதோடு பாராட்டுகின்றோம. இச்சேவையினை எதிர்வரும் காலங்களிலும் சிறப்பாக தொடர வேண்டும்.

நேற்றைய தினம் யாழ்.மாவட்டச்செயலகத்தில் மீனவர்களின் பிரதிநிதிகளினை சந்தித்திருந்தேன்.

இதன் போது வடக்கு மீனவர்கள் எமது கடற்படை மீது அதீத நம்பிகையினை வைத்துள்ளமையை அறிய முடிகின்றது. கடற்படை தம்மை பாதுகாக்கும் என நம்பிக்கை வைத்துள்ளனர் அந்த நம்பிக்கைக்கு ஏற்ப கடற்படையும் மீனவர்களினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் [illegible] பகுதி கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் எமது நாட்டு கடல் வளங்கள் அழிவை எதிர்நோக்கி செல்கின்றன.

இது தொடர்பில் எமது கடற்படையும் நடவடிக்கைகளினை மேற்கொள்ள வேண்டும். மேலும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

எமது கடற் பிராந்தியத்தில் மீன் வளம் மட்டுமல்ல, எண்ணெய் வளமும் காணப்படுகின்றது. தற்போது நாட்டில் யுத்தம் முடிவடைந்த நிலையில் அக்கடற் பொருளாதார வலயத்தினையும் பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதே போல் உள்நாட்டிலும் தேசிய பாதுகாப்பில் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந் நிலையில் தான் பாதுகாப்பு தேவை தவிர்ந்த ஏனைய மக்களின் காணிகளினை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்றார். (எ-4)

## புலிகள்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு இந்த தடையை உறுதி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே கடந்த நவம்பரில் அவர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி பெரட்ரிக்கா மொக்ஹெரன்னியுடன் தொடர்புகொண்டு இந்த தடையை நீடிக்குமாறு கோரியிருந்தார் என்றும் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## தேர்தல்...

இக்கூட்டம் அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், நாடாளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற்கட்சிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை கட்சிகள் உத்தேச தேர்தல் முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற நிலையில், இந்த பேச்சுவார்த்தையின் போது இறுதி தீர்மானம் எட்டப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தல் முறைமையில் மேற்கொள்ளப்படும் மாற்றத்தை 20வது சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தி வருகினறமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 2 ஆயிரம் விடுதலைப்புலி...

இலங்கையின் புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேயதிலக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

சரணடைந்தவர்களில் எவ்வித குற்றங்களையும் மேற்கொள்ளாத தற்கொலை போராளிகள் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் 12 ஆயிரத்து 077 பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர். இன்று அவர்கள் அமைதியான வாழ்க்கையில் ஈடுபட்டு வருவதாக விஜேயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதில் ஆண்களை சமூகம் இலகுவில் ஏற்றுக்கொண்ட போதிலும் 2269 பெண்களை சமூகம் புறக்கணித்த அல்லது மதிக்காத நிலை இருந்ததாக விஜயதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளால் பயிற்சியளிக்கப்பட்ட தற்கொலை போராளிகளின் மனநிலையை மாற்றுவது என்பது கடினமான காரியமாகும். அவர்களின் மனங்களில் சிங்களவர்கள் மீது வெறுப்பு நிலை உருவாக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் வாழ்வாதாரம் தொடர்பில் உரிய நிர்வாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் வன்முறைகள் மீண்டும் ஏற்படக்கூடும்.

இதற்கிடையில் 2172 முன்னாள் போராளிகள் இன்னமும் மறைந்து வாழ்கின்றனர். இவர்களால் போராட்டம் மீண்டும் உருவாக்கப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக அவர்களை கைது செய்து புனர்வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று விஜேயதிலக்க குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஐ.நா. கூட்டத் தொடருக்கு...

பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் புதிதாக பதவியேற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களுக்கும் இடையில் அண்மையில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் நடத்தப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் தொகுதி வாரி அடிப்படையில் நடத்தப்பட உள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தொகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டு அது தொடர்பான அறிக்கை கடந்த அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட போதிலும் அது செயற் படுத்தப்படவில்லை.

எவ்வாறாயினும் பொதுத் தேர்தலுக்கான தொகுதிகளை நிர்ணயம் செய்வது தனியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கு சுமார் இரண்டு மாத காலம் தேவைப்படும் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், புதிதாக பதவியேற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் தமது தொகுதிகளின் மறுசீரமைப்பு பணிகளை துரிதப்படுத்த வேண்டிய தேவை குறித்தும் ஜனாதிபதியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் எதிர்வரும் ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடருக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்தி விட்டு அந்த மாநாட்டில் கலந்து கொள்வது அத்தியாவசியமானது எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில், எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைக்க வாய்ப்பில்லை என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம்முடித்து UK செல்பவர்களுக்கான KET english exam இற்கு தயார் படுத்தும் வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் City & Guilds English பரீட்சைகள் யாவும் UK Border Agency (London தூதரகம்) இனால் இடைநிறுத்தப்படுகின்ற காரணத்தினால் KET English Exam செய்வதன் மூலம் London செல்லமுடியும்.

(மிகவும் இலகுவான ஆங்கிலப்பரீட்சை என்பது குறிப்பிடத்தக்கது)

புதிய பிரிவுகள் அரம்பம் : 31-03-2015 10am, 01-04-2015 3pm

WEC- விசா ஆலோசனை மையம்
0779265447, 0217200989
சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே) (சி-472)

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

- Computing IT Lecturer
- English Language Lecturer - Teachers
- Business Management Lecturer
- Project Officers
- Receptionist

மேலதிக விபரங்களுக்கு: 077-5052643
LCBT Campus
320A, Main Street, Jaffna. (C-504)

## வேலைவாய்ப்பு

American International எமது நிறுவனத்தில் நடைமுறை முகாமைத்துவ பயிற்சியாளர்களின் பயிற்சி நிறைவடைந்துள்ள நிலையில் புதியவர்களுக்கான நேர்முகத்தேர்வு ஆரம்பமாகிவிட்டன. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உங்களுக்கான நேர்முகத்தேர்வுக்கான நேரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். (C-483)

தகைமை
O/L மற்றும் A/L
ஆண் பெண் இருபாலாரும்

இறுதித் திகதி: 15.04.2015

தொடர்புகளுக்கு:
0777981471, 0775566224, 0214545634

## நீங்கள் முடிஉதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப்பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய 'றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து, தலைச் சருமத்திற்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலை கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து, முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

இன்றே நாடுங்கள்!
சிவா நறுமணப் பூங்கா
இல. 288,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பே. 021 222 2567 (சி-477)

Quality Royal Akasthiya Hair Oil Guaranteed

அனைத்துப் பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured by:- Royal Industries Colombo-13

## FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

## FRENCH CLASSES



Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்...

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

இதுவரையில் எமது ஆசிரியரிடம் 906 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 221 7781 (சி-447)

| | | |
|---|---|---|
| ஆரம்பம்: 04.04 சனி 10am<br>No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்: 04.04 சனி 4pm.<br>No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. | சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை |

SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான
### தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926, 021 2217180
www.speedlanka.net (சி-475)

விற்பனையாளர் தேவை

கட்டிடப் பொருளில் அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.

தொடர்பு:
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C-503)

## விகிதாசார...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இது சம்பந்தமாக இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக தெரியவருகிறது.

இறுதியாக 1977 ஆம் ஆண்டு தொகுதிவாரி தேர்தல் நடத்தப்பட்டது. அந்த தேர்தலில் 154 தொகுதிகளில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி 140 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் 23 தொகுதிகளில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்றது.


147 தொகுதிகளில் போட்டியிட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 8 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் சங்கம் ஒரு தொகுதியில் வென்றது. 1977 ஆம் ஆண்டு தேர்தலில் ஒரு சுயேட்சை வேட்பாளரும் வெற்றி பெற்றிருந்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தமிழரசு கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி என்பன போட்டியிட்ட எந்த தொகுதியிலும் வெற்றி பெறவில்லை.(எ-11)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை ஜெகநாதன்

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆலோசகர் -யாழ்.கல்வி வலயம், முதியோர் சங்க செயலர்-கோப்பாய், அகில இலங்கை சமாதான நீதவான், தர்மகர்த்தா -மட்டுவில் கல்லுவம் விநாயகர் ஆலயம்)



புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை ஜெகநாதன் நேற்று (28.03.2015) சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- வேதநாயகி (முத்தம்மா) தம்பதிகளின் அன்பு மகனும், சோதிப்பிள்ளையின் (குஞ்சு) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மட்டுவிலைச் சேர்ந்த சந்திரசேகரம் பிள்ளை (நடுவில்) சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இறங்கநாதன் (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சிவேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வித்தியானந்தன் (கதிர்காமநாதன்), பஞ்சலிங்கம் (அச்சாம்பி), ஸ்கந்தபுஸ்பதேவியின் அன்பு மாமனாரும், சுகுமார் (ஜேர்மனி), சுதாகினி, தற்பரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெயஸ்ரீ (ஜேர்மனி), கோபாலகிருஷ்ணன், றமீலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்சனா, தர்சினி, நிருஷியன் (ஜேர்மனி), துவாரகன், தமிழினி, தரண்யா, தனுஷ்காண் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29.03.2015) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் இந்துசிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்
021 3218483, 0777733058

(சி-505)

## செல்லையா நமசிவாயம் (இளவாலை)

(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)



தெல்லிப்பழை புகையிரத நிலைய வீதி, மாரியம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் தாவடி தெற்கு, கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நமசிவாயம் 28.03. 2015 சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தெல்லிப்பழையை சேர்ந்த செல்லையா -மாரிமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனும், மலேசியாவைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை-திலகவதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஸ்ரீமதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தெல்லியூர் நடராசா, சிவக்கொழுந்து, சரஸ்வதி, நகுலாம்பிகை மற்றும் சிவபாக்கியம் (பிரான்ஸ்) ஆகியோரின் மூத்த சகோதரனும், நவரத்தினராசா (ஓய்வுபெற்ற உப தபால் அதிபர்-இளவாலை), காலஞ்சென்ற சண்முகராசா (தபால் ஊழியர்-இளவாலை), ஜெயரத்தினராசா (ஓய்வூதியர்), நவயோகராசா (நீரியல் வளத் திணைக்களம்-யாழ்ப்பாணம்), தவயோகராசா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), சிவயோகராசா (மல்லாகம் நீதிமன்றம்), நகுலேஸ்வரராசா (ஊழியர்-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தபேந்திராதேவி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), சிவக்கொழுந்து (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சாந்தநாயகி (கால்நடை வைத்திய திணைக்களம்), சிவரூபி (பிரதேச சபை-மானிப்பாய்), பகிரதி (ஆசிரியர்-இராமநாதன் கல்லூரி-மருதனார்மடம்), அருந்ததி ஆகியோரின் மாமனாரும், கோகிலவதனி, தர்சிகாயினி, வித்யாதரன், கஜபானுசன், கயானா, மதுசன், ஜனுஜன், சஞ்சீவன், சசிசாந் (கிராம உத்தியோகத்தர்- மண்டைதீவு) ஆகியோரின் பேரனும், கபினேஸின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான முத்தையாப்பிள்ளை, மயில்வாகனம், கிருஷ்ணர், சுப்பிரமணியம் மற்றும் கனகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாவும் அவரது இல்லத்தில் இன்று (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று காலை 9.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.15, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்:-குடும்பத்தினர்
தொ.பே:-021 4900611

(9919)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 29.03.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 08



# பிரபாகரனுடன் உடன்பாடு விக்கியுடன் முரண்பாடு



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஐயா! இது யார் போட்ட சதித்திட்டம்


குருஷேத்திரம்

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுங்கோபம் கொண்டுள்ளார். எதற்காக இந்தக் கோபம் என்பது தெரியவில்லை. நடிகர் தனுஸின் மொழியில் கூறுவதாயின் வை திஸ் கோபம் என்று மட்டுமே சொல்லமுடியும். நீண்டகாலம் அரசியல் புலத்தில் விக்னேஸ்வரன் இருந்த தன் காரணமாக ரணிலுக்கும் அவருக்குமிடையே தொடர் பகை என்று கூடச் சொல்ல முடியாது. நிலைமை இதுவாக இருக்கையில் ரணில் விக்கிரமசிங்க வடக்கின் முதல்வருடன் எதற்காகப் பகைக்க வேண்டும் என்ற கேள்வியெழும்.

இலங்கையில் நடந்தது இன அழிப்பேயென்று வடக்கு மாகாண சபையில் முதல்வர் விக்னேஸ்வரன் கொண்டு வந்த தீர்மானமே ரணிலின் கோபத்திற்குக் காரணம் என்றால் அதை எப்படி ஏற்கமுடியும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் 2002 ஆம் ஆண்டில் சமாதான ஒப்பந்தம் செய்தவர் ரணில் விக்கிரமசிங்க.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதான ஒப்பந்தம் செய்த ரணில் விக்கிரமசிங்க முதல்வர் விக்னேஸ்வரன் மீது தீராக் கோபம் கொள்வதென்பது அர்த்தமற்றது.

அதாவது புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் உடன்பட்டுப்போகக்கூடிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதல்வர் விக்னேஸ்வரனுடன் ஒத்துப்போவதில் என்ன தடை இருக்கிறது? என்ற கேள்வி நியாயமானதே.

முதல்வர் விக்னேஸ்வரனுடன் கதைக்கமாட்டேன், பேசமாட்டேன் அவர் பொய் சொல்கிறார் என்றெல்லாம் ஒரு நீதியரசரைப்பார்த்து ரணில் கூறுவதற்குள் ஏதோவொரு பின்னணி இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. தந்தித் தொலைக்காட்சிக்கு ரணில் விக்கிரமசிங்க அளித்தபேட்டியில் முதல்வர் விக்னேஸ்வரன் பற்றிக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

எனினும் ரணிலின் விமர்சனம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மௌனமாக இருந்தது. புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர். எனவே புதிய சூழ்நிலையைக் குழப்பாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, கூட்டமைப்பின் தலைமை பேசாதிருப்பதில் பிழை ஒன்றுமில்லை என்று முடிவெடுத்தது எனக்கூறினால் அதையும் ஏற்றுக் கொள்ளலாம்.

இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் என ஆட்சியில் இருப்பவர்கள்- படைத் தரப்பில் பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் என எவரும் தமிழர்களை எப்படியும் விமர்சிக்கலாம். ஆனால் தமிழர் தரப்பு மட்டுமே அனுசரித்துச் செல்ல வேண்டும் என்றொரு சூழ்நிலை உருவாகிவிட்டது. இதன் காரணமாக எடுத்ததற்கெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை விடக் கூடாது.

அண்மையில் இலங்கைக்கு வந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் பொறுமையாக இருங்கள் என்று அறிவுரை கூறியிருக்கிறாரல்லவா! ஆகவே உணர்ச்சி வசப்படாமல் இருப்பது நல்லது என்று கூட்டமைப்பு எடுத்த முடிவின் காரணமாகவே முதல்வர் விக்கி பற்றிய ரணிலின் விமர்சனம் அறியாப் பொருளாக விடப்பட்டது என்று நியாயம் கூறினாலும் நல்லது என்று சொல்லி விடலாம்.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட போது, முதல்வர் விக்னேஸ்வரனுக்கு அழைப்பு அனுப்பப் படாதது ஏன்? இத்தகையதொரு நடவடிக்கை முதல்வர் விக்கியை அவமதிக்கும் செயல். அவரை அவமதித்தால் அதன் பொருள் என்ன?

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிவுகள் வெளியான போது வடக்கில் தமிழர் அரசு மலர்ந்தது என்றெல்லவா கூறிப் புளகாங்கிதமடைந்தோம். வடக்கில் தமிழர் அரசு என்றால் அதன் முதலமைச்சர்தானே வடக்கின் மக்கள் தலைவர்.

அப்படியானால் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யும் பிரதமர் ரணில் வடக்கின் முதல்வருக்கல்லவா முதலில் தனது வருகை பற்றி அறிவிக்க வேண்டும். அதேவேளை பிரதமருக்கு மாலை அணிவித்து வடக்கின் முதல்வரல்லவா வரவேற்க வேண்டும். இதுதானே அரசியல் சம்பிரதாயம்.

அரசியல் சம்பிரதாயத்தை முறியடித்து வடக்கின் முதல்வரை அவமதித்து வடபகுதிக்குப் பிரதமர் ரணில் விஜயம் செய்தாரென்றால்,

உங்கள் வடக்கு மாகாண அரசை நாங்கள் மதிக்கமாட்டோம். எல்லாம் எங்களின் ஆட்சி. வடக்கின் முதல்வர் என்றால் எங்களுக்கு என்ன? என்பது போலல்லவா பிரதமர் ரணில் நடந்து கொண்டார். இவ்வாறு பிரதமர் நடந்து கொள்வதற்கு என்ன காரணம்.

வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனைச் சந்திக்க மறுத்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்னைச் சந்திக்காது என்று ரணில் நினைத்திருக்க வேண்டுமல்லவா? ஏன் அப்படியொரு நினைப்பு அவருக்கு ஏற்படவில்லையென்பதற்கு நாம் விடைதேடிச் செல்ல வேண்டிய தேவையில்லை.

யாழ்ப்பாணத்திற்கு பிரதமர் ரணில் வருகை தந்த போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை வரவேற்றனர்.



பரவாயில்லை பிரதமரை வரவேற்பது ஒரு சுமுகமான களநிலைமைக்கானது என்று அவர்கள் நியாயம் கற்பித்தால் அவர்களின் அடுத்த நடவடிக்கை ரணிலையும் விக்னேஸ்வரனையும் சந்திக்க வைப்பதாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை.

ஆக, முதல்வர் விக்னேஸ்வரனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முரண்படவேண்டுமென்பது திட்டமிட்ட செயல். அந்தத் திட்டத்தை அரங்கேற்றுவதற்காக முதல்வர் விக்னேஸ்வரன் பிரபாகரனை விட மோசமாக நிற்கிறார் என்ற செய்தி பிரதமர் ரணிலுக்குச் சொல்லப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியை அப்படியே உள்வாங்கிக் கொண்ட பிரதமர் ரணில், அன்று கருணா, இன்று இவர்கள் என்ற நினைப் போடு திட்டம் தீட்டினார்.

விக்னேஸ்வரன் ஒரு பொய்யர் என்று அப்பட்டமாக பொய் சொன்னார். அந்தச் செய்தியோடு அவசர அவசரமாக யாழ்ப்பாணத்திற்கு வந்தார். முதல்வர் விக்னேஸ்வரனைச் சந்திக்க மறுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை வரவேற்றனர். கருணாமூலம் விடுதலைப்புலிகளை தோற்கடித்த உபாயம் இப்போது யாழ்ப்பாணத்தில் வைத்து அரங்கேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கௌரவம் காத்துள்ளனர்.

எதுவாயினும் ஐயா! வினை விதைக்கப்பட்டு விட்டது. இனி எங்கள் தலைவிதி எப்படியோ! அந்தப் பரம்பொருள் காத்தால் மட்டுமே உண்டு.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடியில் விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

ஆட்டோவில் வந்திறங்கிய விதானையார் ஆட்டோ சாரதியுடன் வாக்குவாதப் படுவது தெரிகிறது.

மாநாட்டில் இருந்தவர்களுக்கு என்ன சமாச்சாரம் என்பது புரியவில்லை. முறுகல் நிலையைத் தவிர்க்கும் பொருட்டு கங்காணி கார்த்திகேயன் ஆட்டோ நிற்கும் இடத்திற்கு விரைந்து சென்று நிலைமையை சுமுகப்படுத்துகிறார்.

விதானையார் சேட் பொக்கட்டில் இருந்து ஒரு தொகைப் பணத்தை எடுத்துக் கொடுக்க, பணத்தைப்பெற்ற சாரதி ஆட்டோவை முறுக்க, கோபமும் வேகமும் சேர்ந்து ஆட்டோ பறந்து போயிற்று.

(கங்காணியும் விதானையாரும் மாநாட்டை நோக்கி வருகின்றனர்)

**மூப்பர்:** விதானையார் ஏதோ! வில்லங்கத்தில மாட்டுப்பட்டுப் போனார் போல.

**பண்டிதர்:** என்ன விதானையார் என்ன சங்கதி?

**விதானையார்:** அதையேன் கேட்கிறியள் பண்டிதர் எரிபொருள் விலை குறைந்து போயிற்று.

ஆனால் அந்தநேரம் எடுத்த காசைத்தான் இப்பவும் அந்த ஆட்டோ சாரதி கேட்கிறார்.

**பண்டிதர்:** நீங்கள் எவ்வளவு காசு கொடுத்தனீங்கள்?

**விதானையார்:** இனிமேல் ஆட்டோவில ஏறுவதில்லையெண்ட முடிவோட கேட்ட காசைக் கொடுத் திட்டன்.

**வாத்தியார்:** விதானையார் வயது போன நேரத்தில நாங்கள்தான் அமைதியாக இருக்க வேணும்.

**விதானையார்:** அதுக்காக நியாயத்தை மீறிச் செயற்பட முடியுமோ.

**வாத்தியார்:** விதானையார் இஞ்ச எங்க நீதி, நியாயம் இருக்குது.இது கலிகாலம். எல்லாம் நீதிக்குப் புறம்பாகத்தான் நடக்கும்.

**பண்டிதர்:** கொழும்பில ஓடுகிற ஆட்டோக்களில மீற்றர் பூட்டியிருக்கினம். நாங்கள் செல்ல வேண்டிய தூரத்திற்கு மீற்றர் காட்டுற கட்டணத்தைச் செலுத்தினால் சரி. முன்பெல்லாம் கொழும்பில ஆட்டோவில ஏறுகிறது எண்டால் கடும் பயம். ஆனால் இப்ப எவ்வளவோ பிரச்சினை இல்லை.

அங்க இருக்கிற ஆட்டோ சங்கங்கள் மிகவும் இறுக்கமாகச் செயற்படுகின்றன.

இங்கயும் மீற்றர் பூட்டுற சிஸ்ரத்தைக் கொண்டு வந்தா நல்லா இருக்கும்.

**மூப்பர்:** ஒரு முயற்சி நடந்தது. பெயிலியராப் போயிற்று.

வாயால பேசி, இறங்கிற இடத்தில தர்க்கம் போட்டு காசு வாங்குவதில ஒரு சுகம் இருக்கும்போல. அதனாலதான் மீற்றர் சிஸ்ரம் யாழ்ப்பாணத்தில பெயிலியராயிற்றாக்கும்.

**பண்டிதர்:** எதுவா இருந்தாலும் எரிபொருள் விலைக் குறைப்பால ஆட்டோக் கட்டணமும் குறைக்கப்பட வேணும்.

ஆட்டோ உரிமையாளர்கள் பலர் கட்டணத்தைக் குறைத்துள்ளனர்.

ஆனால் ஒரு சிலருக்கு இன்னமும் மனம் வரவில்லை. எதுவாக இருந்தாலும் ஆட்டோ உரிமையாளர்கள் அனைவரும் கட்டணக் குறைப்புச் செய்ய வேணும். இதை ஆட்டோ உரிமையாளர்கள் சங்கம் உறுதிசெய்ய வேண்டுமென்று ஆலடி மாநாடு தீர்மானம் நிறைவேற்று கிறது.

(பண்டிதரின் தீர்மானம் மாநாட்டில் பதிவாயிற்று)

**கங்காணி:** அதுசரி வாத்தியார் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனைச் சந்திக்க மறுத்தது ஏனாம்?

**விதானையார்:** யாழ்ப்பாணத்தில மட்டுமல்ல வளலாய் பகுதியில இராணுவத்தின்ர ஆக்கிரமிப்பில இருந்த காணிகளை பொதுமக்களிட்ட கையளிக்கிற நிகழ்வு கடந்த 23ஆம் திகதி நடந்ததல்லோ!

அந்த நிகழ்வில ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில், எங்கட முதலமைச்சர் விக்கி ஆகியோர் கலந்து கொண்டிருந்தவியள்.

ஆனால் பிரதமர் ரணிலும் முதல்வர் விக்கியும் ஒருவரை ஒருவர் முகம்கொடுத்துக் கதைக்கவில்லை. அந்தளவுக்குக் கடுங்கோபம்.

**தீர்மானம்**
**1.ஆட்டோ கட்டணத்தைக் குறைத்தல்**
**2.பெரியவர்களை பிள்ளைகள் மதித்தல்**

**பண்டிதர்:**
கற்பிளவோடு ஒப்பர் கயவர்
கடுஞ் சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும்
போல் வாரே-விற் பிடித்து
நீர்கிழிய எய்தவடுப்போல்
மாறுமே
சீர் ஒழுகு சான்றோர் சினம்

நீர் நிலையில் விற்பிடித்து எய்த வடுப்போல இந்தப் பகையெல்லாம் மாறி விடும்.

**மூப்பர்:-** பண்டிதர் இது இந்தக் காலத்திற்குப் பொருந்தாது. சீரொழுகு சான்றோரின்ர பிணம் பற்றித்தான் ஒளவையார் கூறினார்.

**கங்காணி:-** எதுவாய் இருந்தாலும் ஆளுங்கட்சியில சேர்ந்திருக்கிற தமிழர், சிங்களவரை விட ஒரு படி மேலாக நடந்து தங்கள் மீதான நம்பிக்கையை அவையளுக்கு உறுதி செய்து காட்டுகினம்.

**மூப்பர்:-** கங்காணி கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்கோ?

**கங்காணி:** எங்கட மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நல்ல மனிசனா இருந்தவர். இப்ப சிங்கள அமைச்சர்களை வென்று விட்டார்.

எல்லை தாண்டினால் இந்திய மீனவர்களை சுடுவோம் என்று ரணில் கூறினவரல்லோ அதற்குக் கடும் எதிர்ப்பு வந்தது தெரியும் தானே!

ரணில் கூறியதற்கு அமைச்சர் சுவாமிநாதன் பயன் சொல்லி ரணிலைக் காப்பாற்ற கடுமையாக முயற்சிக்கிறார்.

**பண்டிதர்:** அப்ப இனி டி.எம்.சுவாமிநாயக்க எண்டு தான் நாங்கள் அவரைச் சொல்ல வேணும் போல



(மாநாட்டில் சிரிப்பு)

**வாத்தியார்:** வளலாயில நடந்த நிகழ்வில சமயத் தலைவர்களும் கலந்து கொண்டவியள். ஜனாதிபதி, பிரதமர் என அனைவரும் மதத்தலைவர்களை வணங்கி மரியாதை செலுத்தி ஆசீர்வாதம் பெற டி.எம்.எஸ்.மட்டும் சமயத் தலைவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லையாம்.

**விதானையார்:** இந்து கலாசார அமைச்சருக்கு ஏன் இந்தத் தடிப்பு.

**பண்டிதர்:** அட! என்ன சொன்னாலும் எங்கட இனமல்லோ, வணங்குதல்; மரியாதை செலுத்துதல்; ஆசி பெறுதல் எங்கட பரம்பரைக்கு ஆகாது.

நான் ஆர்? என்ர குலம், கோத்திரம் தெரியுமோ? என்ற ஆணவம் தலைக்கேறியிருக்கும். அதால சமயத் தலைவர்களைத் திரும்பிப் பார்க்காமல் போயிருப்பார்.

**வாத்தியார்:** இந்த நாசமறுந்த கர்வத்தாலதானே எங்களுக்கு இந்தக்கதி. சிங்கள ஏரியாவில நான் நீண்டகாலம் படிப்பித்தனான். சிங்கள பிள்ளையள் மூத்தோருக்கு செய்கிற மரியாதையைக் கண்டு என் இதயம் நெகிழ்ந்த நாட்கள் அதிகம்.

பாடசாலைக்குச் செல்ல முன்னர் தங்கள் தாய், தந்தையை வீழ்ந்து வணங்குவினம். சமயகுரு, ஆசிரியர்கள் இவர்களுக்கு அந்தப் பிள்ளையள் கொடுக்கிற மரியாதை இருக்குதே மனித மொழியால அதைச்சொல்ல முடியாது.

இதுவல்லோ பண்பாடு. இந்தப் பழக்கத்தை எங்கட பிள்ளையளும் பின்பற்ற வேணும் என்று நான் ஆசைப் பட்டதுண்டு. என்ன செய்யிறது எங்கட் பிள்ளையள் இதுகளைச் செய்ய வெட்கப்படுகினம்- தயங்குகினம். பெரியவர்களின்ர ஆசி எங்களை வாழவைக்கும் என்ற செய்தியைச் சொல்லிக் கொடுக்க யார் இருக்கினம்?

**பண்டிதர்:-** மேடையில இருந்த சமயத்தலைவர்களை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் வணங்கி ஆசி பெற; எங்கட அமைச்சர் டி.எம். எஸ்.திரும்பிப் பார்க்காமல் போனால் எங்கட பிள்ளையளுக்கான முன்னுதாரணம் எப்படி இருக்கும். முதலில நாங்கள் முன்மாதிரியாக நடக்கவேணும்.

**விதானையார்:-** பண்டிதர் ஐயா, இதை நாங்கள் ஒரு தீர்மானமாக நிறைவேற்ற வேணும்.

**பண்டிதர்:-** ஓமோம். இன்றையிலிருந்து எங்கட பிள்ளையள்; தங்கட பெற்றோரை, ஆசிரியர்களை, குருவை போற்றி வணங்கி அவர்களின் ஆசிக்குப் பாத்திரமாக வேணும்.

இந்தப் பழக்கத்தை பாடசாலைகள் கற்றுக் கொடுப்பது அவசியம். எங்கட பிள்ளைகளை ஒழுக்கமான- பண்பாடான- திறமை மிக்கவர்களாக ஆக்குவ தற்கு இந்தப் பண்பாட்டு விழுமியம் கட்டாயம் தேவை.

ஆகையால் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு இதைக் கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்த வேணும். மற்றவர்களை மதிப்பது, முதியவர்களைக் கனம்பண்ணுவது எங்களை வாழ வைக்கும் என்பதால இதையொரு தீர்மானமாக ஆலடி மாநாட்டில நிறைவேற்றுவம்.

பண்டிதர் இப்படிக் கூறியதும் அனைவரும் அதற்கு ஏகமனதாக ஆதரவு கொடுக்க தீர்மானம் நிறைவேறியது. தீர்மானத்தை அங்கீகரிப்பது போல தந்தை, தாயைக் கண்கண்ட உலகமாக சுற்றி வலம் வந்த விக்னேஸ்வரப் பெருமானின் கண்டாமணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்



# ஆந்தையும் கோழியும்

முன்னொரு காலத்தில் கோழியும் ஆந்தையும் நட்பாக இருந்தன. வித்தியாசமான நண்பர்கள்தான். ஆனால், அது நட்புக்கு இடையூறாக இல்லை.

ஒருநாள் ஆந்தை, "நாம் இருவரும் ஒரு தொழில் செய்யலாம். மலைக்கு அந்தப் பக்கம் இருக்கும் கமுகார் தோப்பிலிருந்து நிறையக் கொட்டைகள், பழங்கள் வாங்கி வந்து இங்கே விற்கலாம்" என்றது.

"என்னால் பறந்துவர முடியாதே" என்றது கோழி.

"அது பிரச்சினையில்லை. நான், உன்னைச் சுமந்து செல்வேன். பழங்கள், கொட்டைகள் வாங்குவதற்கு நம்மிடம் முதலீடாக எதுவும் இல்லை. அதற்குத்தான் என்ன செய்வது என யோசிக்கிறேன்" என்றது ஆந்தை.

"என்னிடம் ரத்தினக் கல் இருக்கிறது. அதை எடுத்துவருகிறேன்" என்றது கோழி.

அடுத்த நாள், கோழியைத் தனது முதுகில் சுமந்து கொண்டு, மலைப்பாதையில் பறக்கத் தொடங்கியது ஆந்தை. நீண்ட தூரம் பறந்ததால் களைப்பு ஏற்பட்டது. ஒரு பாறையில் அமர்ந்து, கொண்டு வந்த உணவைச் சாப்பிடத் தொடங்கினர். அப்போது, பலமாகக் காற்று வீசியது.

மலை உச்சியில் இருந்து பாறை, மண் போன்றவை உருண்டு வந்தன. பயத்தில் ஆந்தை சட்டெனப் பறந்து விட்டது.

கோழியோ, பறக்க முடியாமல் இரத்தினக்கல்லை விட்டுவிட்டு ஒரு பெரிய பாறையின் பின்னால் பதுங்கியது.

சில நிமிடங்களில் கீழே வந்த ஆந்தை மன்னித்து விடு நண்பா, உயிர் பயத்தில் உன்னை மறந்துவிட்டேன் என்று வருத்தத்துடன் சொன்னது.

உன் நட்புக்கு நன்றி, இனி, என் முகத்தில் விழிக்காதே என்ற கோழி, மண்ணைக் கிளறி தனது இரத்தினக்கல்லைத் தேடியது. அது கிடைக்கவில்லை. தன்னால் தான் கோழியின் இரத்தினக்கல் பறிபோயிற்று என வெட்கப்பட்டு பகல் முழுவதும் மரப்பொந்துகளில் இருந்து விட்டு இரவில் மட்டுமே வெளியில் வருகிறதாம் ஆந்தை.

கோழியோ, இன்று வரை இரத்தினக்கல்லைத் தேடித் தேடி மண்ணைக் கிளறிக் கொண்டே இருக்கிறதாம்.

# பள்ளிக் கூடம் போகலாம்



பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா --நிறைய
பிள்ளைகளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா --கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சி
சின்ன பாப்பா -- உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சி
சின்ன பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் -- அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்க
சின்ன பாப்பா --ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்ன பாப்பா --நிறைய
பிள்ளைகளோட பழகலாம் வா
சின்ன பாப்பா!

# விடுகதைகள்

1. காய் காய்க்கும் ஆனால் பழுப்பதில்லை அது என்ன?

2.சீருடை இல்லாத காவலாளி, சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?

3.தீக்குளித்தாலும் திடமாக இருப்பான் அவன் யார்?

4.ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டு போகிறார் அவர் யார்?

விடைகள்

1.முருங்கைக் காய்

2.நாய்

3.செங்கல்

4.நுளம்பு

வா.சிவானுஜன், தரம் -5F யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை




மோ.நிருபன் தரம் - 10 புனித. பத்திரிசியார் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தென்னாபிரிக்காவுடனான போட்டியில் சங்கக் கார ஆட்டமிழந்து வெளியேறிய போது மழை பெய்தது, அவர் ரசிகர்களின் கண்ணீரா?**



## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532

**அவுஸ்திரேலியாவுடன் இந்தியா தோல்வியடையக் காரணம் என்ன?**



**தலைவரின் லிங்கா வெற்றியா அல்லது தோல்வியா? யாரோ ஒரு கூட்டம் நட்ட ஈடு தர சொல்லி போராடுகினமாம்?**

### அஷ்வின் - வரணி

Hi வியாசர்

***செய்வினை உண்மையா?***

அது உண்மை என்றால் அமெரிக்கா கோடி கோடியாய் கொட்டி பின்லேடனை அழித்திருக் கத்தேவையில்லையே? ஒரு பூசணிக்காயுடன் அலுவல் முடிந்திருக்குமே!

### என்.நிருஜன் - கோண்டாவில்

Hi அண்ணா

***எனக்கொரு சந்தேகம். நீங்க தத்துவம் தத்துவமா சொல்லுறீங்களே. நீங்க ரம்ப அடி பட்டிருக்கிறீங்களா?***

எல்லாப் புகழும் என் மனைவியையே சாரும் ஏனென்றால் அது அவள் கைப்பக்குவம்.

### கிருஷா - வரணி

அங்கிள்

***நீங்கள் ஏன் கையைத் தூக்கிட்டுப் போறீங்க என்னாச்சு உங்கள் கைக்கு?***

ஆரம்பத்தில் காலைத்தான் தூக்கினேன் நாய்த் தொல்லை அதிகமென்பதால் கை யைத் தூக்கிவிட்டேன். சத்தியமாக நான் அரசியல்வாதி இல்லை.

### யதுசன் - புதுக்குடியிருப்பு

வியாசர் ஐயா

***பேய் இருக்கா இல்லையா?***

குடிகாரக் கணவனைத் திருத்துவதற்காய் அவன் மனைவி ஒருநாள் இரவு பேய் வேடம் போட்டுக் கொண்டு அவன் அருகில் வந்து நான் பேய் என்றாளாம். அப்போது அவன் கூறினானாம். ஓ... அப்படியா உன் தங்கை ஒருத்தியைத்தான் நான் திருமணம் செய் திருக்கிறேன் வா அவளைக் காட்டுகிறேன் என அவள் கையைப் பிடித்தபடி. சிலர் பேயு டந்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது உண்மைதான் போல.

### அனு - வரணி

வியாசர் அண்ணா

***தென்னாபிரிக்காவுடனான போட்டியில் சங்கக்கார ஆட்டமிழந்து வெளியேறிய போது மழை பெய்தது, அவர் ரசிகர் களின் கண்ணீரா?***

கடவுள் இருக்கிறார் என்பது சில நேரங்களில் உண்மையாகிவிடுகிறது. பருத்தித்துறை இராம கிருஷ்ண மிஷன் சுவாமி சித்ரூபானந்தா அவர்களின் இறுதி ஊர்வலத்தன்று அவர் பூதவுடல் செல்லும் வழிக்கு மட்டும் நீர் தெளித் தது போல மழை பெய்து அவரின் புனிதத்தை உணர்த்தியது. அதேபோல்தான் கிரிக்கெட்டை நேசித்த உத்தம வீரனை மழை வாழ்த்தி அனுப்பியது.

### கணபதிதாசன் - கட்டைக்காடு

அங்கிள்

***நரிக்குணம் கொண்டவர் தலைக்கனம் கொண்டு பிதற்றுகின்றாரே. முடிவு என்னாகும்?***

ஓசியில் கார் கிடைத்து ஓடுபவனுக்கும் தன் சொந்த உழைப் பில் கார் வாங்கி ஓடுபவனுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கும் தானே. இது ஓசிக்கார் எப்படியும் ஓடலாம் அந்தக் கார் விக்கி, விக்கி ஓட ஆரம்பித்து விட்டது. எப்படியும் ஒரு சந் தில் முட்டும். அப்போதுதெரியும் அவருக்கு "விக்கி"யதன் அரு மையை.




### குரு - அல்வாய்

மாமா

***அவுஸ்திரேலியாவுடன் இந்தியா தோல்வியடையக் காரணம் என்ன?***

ஒன்று சிட்னி மைதானம் சுழலுக்கு சாதகமென அவுஸ் திரேலியாவால் கட்டவிழித்து விடப்பட்ட கட்டுக்கதை. இரண்டு ஓவர் பந்தா உடம்புக்கு ஆகாது என்பது போல் இந்தியா வெல்லும் என இந்தியரை விடவேறு யாரும் சொல்லவில்லையே. இறுதியில் நடப்புச் சம்பியன் நடை யைக் கட்டியது தான் மிச்சம்.

### அ.அச்சுதன் - கோண்டாவில்

Hi bro

***பரீட்சையால் பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்பு என்ன?***

பிரபல நாடக ஆசிரியர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் ஒரு கலந்துரையாடலில் கூறிய விடயம். எமது நாட்டு பரீட்சை முறை பிளாஸ்டிக் வாளியில் நீர் நிறைப்பது போல. பிளாஸ்டிக் வாளி - பிள்ளை, நீர் நிறைப்பது - ஆசிரியர், நீர் - கல்வி. பரீட்சையில் வாளி நீரை ஊற்றிவிட்டு வந்துவிடும் வாளியிடம் மிஞ்சுவது எதுவுமே இல்லை. இது ஒரு அருமையான தத்து வம்.

### குமரன் - அச்சுவேலி

அங்கிள்

***ஒரு பெண் ஒரு ஆணிடம் தன் காதலை சொன் னால் என்ன அர்த்தம்?***

நாசமறுக்க இதுக்கெல்லாம் அர்த்தம் கேட்க வெட்க மில்லையா.

### உடுவிலூர்கலா

வியா அண்ணா

***பாலியல் வன்முறை, வன்புணர்வு பற்றி?***

அண்மையில் மருதனார்மடம் ஆஞ்சநே யர் கோவிலுக்கு அருகில் இருக்கும் தோட்ட வீதியில் மாலை நேரம் சென்று கொண்டிருந் தேன். வீதியில் ஒரு பெண் மோட்டார் சைக் கிளுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார். நான் உதவலாம் என எனது மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கினேன். அந்தப் பெண் தோட்ட வெளிக்குள் ஓட ஆரம்பித்து விட்டார். எங்கோ ஓர் மூலையில் நடக்கும் சமூகப்பிரள்வுகள் சில நல்லவர்களையும் பாதிக்கிறது என எண்ணியபடி எனது மோட்டார் சைக்கிளை முறுக்கினேன்.

### கே.தயாமதி - யாழ்ப்பாணம்

வியாசர் ஐயா

***அதிகாலையில் கோவில்களில் ஒலி பெருக்கி கூட்டிவிடப்படுகிறதே?***

கோவில்கள் அமைதியைப் பேணும் இடங் களாக இருக்க வேண்டுமே தவிர பிறர் அமைதியைக் கெடுப்பதாய் இருக்கக் கூடாது. யாழ்ப்பாணத்தில் இருக்கும் வங்கி களுக்குப் போய்ப் பாருங்கள் எங்கோ ஓர் மூலையில் மிக மெதுவாக மெல்லிய இசை தவழும். அதை கேட்கவேண்டும் என ஆனந்தம் பெருகும். ஆனால் எங்கள் ஆல யங்களில் பிறர் அமைதிக்காக அன்றி தம் ஆலயங்களின் பெருமைகாட்ட கட்டப்படும் கோண்களை கட்டுப்படுத்த எந்தக் கோன் வருவான்.

### சி.சிவறீபன் புன்னாலைக்கட்டுவன்

Hi... Hi... Hi... வியாசர் செல்லம்

***தலைவரின் லிங்கா வெற்றியா அல் லது தோல்வியா? யாரோ ஒரு கூட்டம் நட்டஈடு தர சொல்லி போராடுகின மாம்?***


போட்ட முதலுக்கு மேலாய் விநியோகிஸ் தர்களிடம் விற்றுவிட்டார் தயாரிப்பாளர். கொடுத்த பணத்தை கல்லாவில் நிறைக்க விநியோகஸ்தர்களால் முடியவில்லை அத னால்தான் ரஜினி வீட்டின் வாசற் கல்லில் தவம்கிடக்கிறார்கள்.

### ஜி.கோபி - மந்திகை

Hi அண்ணா

***ஒரு நல்ல ஆசிரியரைப் பற்றி உங்கள் கருத்து என்ன?***

கல்விகற்பித்த ஆசிரியர் அத்தனை பேரின் போதனையும் எனக்கு அப்போது கசத்தது. அந்த நினைவுகள் இப்போது இனிக்கிறது. தெய்வம் என்பதற்கும் மேலானவரே அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## கருகிப்போன காட்டுப்பிரதேசம்

வயிற்றில் பிள்ளையுடன்
வாழாவெட்டியாக்கப்பட்ட
வஞ்சகா் வாழும் தேசத்தில்
வாழ்க்கை கடந்தது
ஐந்தாண்டுகள் தனிமையில்
பூத்துக் குலுங்கும்
நந்தவனச் சோலை
என்வாழ்க்கை அல்ல
கருகிப் போக
காட்டுப்பிரதேசம்
அதுதான் என்வாழ்க்கை
வாயார வாழ்த்தி
வானத்தில் நட்சத்திரம் பார்த்து
அம்மி மிதித்து
ஆன்றோர் ஆசீர்வதிக்க
ஆரத்தியெடுத்து அட்சதையிட்டு
ஆரம்பித்த வாழ்க்கை
அந்தரத்தில் வீசிய
கந்தகக் குண்டால்
கருகிப்போனது
இறுதியில்
கணவனையிழந்த பெண்களில்
நானும் ஒருத்தியாக...

எஸ்.ஆர்.
கட்டுடை

## நியதி என்ன

வாழ்க்கை எனும் நீரோட்டத்தில்
நடந்து வந்த பாதைகளை- நன்கு
திரும்பிப் பார்க்கின்றேன் - அங்கே
நிறைய முட்கள் கற்கள்
எழுதப்படாத அத்தியாயங்கள் நிறைய
வேதனைகளை கண்ணீருக்குள்
சேமித்துக்கொண்டு...
போலிக்காகச் சிரிக்கின்றேன்
விதி தன் வேலையைச் செய்கின்றது
அதற்காக-ஏன்...?
விழிகளும் கண்ணிமைக்க மறுக்கின்றது
போலியான புன்னகைகளும்
பாவத்திற்கான பார்வைகளும்
வேசம் போட்ட வார்த்தைகளும்
வஞ்சகம் நிறைந்த உள்ளங்களும்
நிறைந்த மனித உருவங்கள்- இங்கு
நிம்மதியைத் தேடி அலைகின்றது
இலவசமான புன்னகைகூட
பணத்துக்காக மட்டும்தான்

அ.சீதாராம்
பருத்தித்துறை



## அன்பினால்...

நிறைகுடமாய்
வழிகின்றது அழகு
பனிமுட்டி உடையும்
நெஞ்சின் பலவீனம்
என்னோடு
பேசுகின்றது
இதோ!
இந்தக் காற்று
என்னை
அள்ளிச் செல்லும்
நான் புதிய ஸ்வரங்களோடு
காத்திருப்பேன்
சொல்லாத வெட்கத்தோடு
காதல் சேலை மூடும்
உன் அன்பினால்
எழுதப்படுகின்ற
இந்தக் கவிதைகளைப் பார்த்து
ஒரு கவிஞன்
பொறாமைப்பட்டுக் கொண்டிருப்பான்

நெடுந்தீவு கே.யோகேஸ்

## இமயம் தொட

எபபோதுமே
உன் வார்த்தைகளுக்குள்
வெல்லம் வைத்துக்கொள்
உன்னைஎதிர்த்துவரும்
எதிரியிடம் கூட
வெல்ல வார்த்தைகளை
பொறுமையாய்
புன்னகையுடன் தவழவிடு
வந்தவன் உன்னை
வணங்கிச் செல்வான்
வார்த்தை, வாக்கு
இரண்டும் பலமானது

மாவை. நா.கஜேந்திரன்

## நீயே சொல்

என்னவளுக்காக
இதழோரம் சுவையூற
இதமாக வரைந்தேன்
பல மடல்கள்
மடல்கள் வரைந்ததால்
என் பேனாவின் மைகள்
கரைந்தனவே தவிர
என்னவளின் மனம்
கரையவேயில்லை
பேனாவின் மை முடிந்ததால்
மாற்றிவிட்டேன்
உன் நினைவாக இருக்கும்
என் இதயத்தை
என்ன செய்யலாம்
நீயே சொல்?

பா.சத்யா
அல்வாய் வடக்கு

# மௌனத்தின் தேடல்- 243



## பாலகரின் கல்வி பாதகரின் கையில்...?

இடர் மேல் இடர் தொடராகும்
இளையோர் கல்விக்கூடங்களில்
தாகத்திற்கு நா நனைக்க
வைத்த தாங்கி நீரிலும்
கிருமிநாசினி கலந்து
நஞ்சாக்கும் பாதகரின் குறி
பாலகரின் கல்வியழிப்பா?

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## கல்விச் செல்வம்

கல்விச் செல்வத்தை வளர்க்க
வசதிகளில்லையேயென்று
கவலையில் ஆழ்ந்துவிடாதே
சில பாடசலைகளிலின்றும்
மரநிழலே துணையென்று
மனவைராக்கியத்துடன் படிப்பதால்
உடல் நலத்தைப் போலென்றும்
உளவளத்தையும் காத்துக்கொள்
பிற்காலத்தில் படிப்படியாய்
கற்றதற்குரிய பலன் கிடைக்கும்

நாகராசா
நுணாவில்

## யார்?

வஞ்சமில்லா பிஞ்சு
நெஞ்சமே-நீ
சந்தோசமாய் பாடசாலையில்
கல்வி பயின்றிட
தடைபோடும் ஏழை எனும்
பட்டம், பதவி தருகின்ற
சமுதாயமே!- சற்று
சிந்தித்துப் பாருங்கள்
ஆபிரகாம் லிங்கன்
யார் என்று...

எம்.சற்குணம்
சாங்கானை

## முற்றிய தன்னம்பிக்கை

பிஞ்சுப் பாலகனாக இருப்பினும்
முற்றிய தன்னம்பிக்கையோடு
வலித்துக்கொண்ட இலக்கில் வென்றிட
சற்றும் கவனம் சிதறாமல்
கற்றிடும் கண்மணியின்
கல்வி மேம்பாட்டுக்கு உரமிடுமா?
இன்றைய நல் அரசாட்சி

சு.சிவாஜினி
சுன்னாகம்

## நாளைய தலைவன்

கடைத்தெருவோரம்
வெற்றுப்பெட்டி மீதிருந்து
கல்வி பயிலும் சிறுவனே!
தெருவோர விளக்கில்
கல்வி கற்றுத்தான்
ஜனாதிபதியானார்
ஆபிரகாம்லிங்கன்-ஆதலால்
மனம்தளராது படித்திடு நீ
நாளை நீயும் ஒரு தலைவனே...?

த.தனுஜா
அல்வாய்

## ஆசனம்

பழக்கூடையை
ஆசனமாக்கி
படிக்கின்ற சிறுவனே
படி... படி... நாளை
பஞ்சுமெத்தை ஆசனம்
உனக்காக
காத்திருக்கு

[illegible]

## ஏழையின் சிகரம்

போட்டிபோடும் உலகில்
கற்கும் கல்வியைக்கூட
விலைகேட்டு விற்கும்
சமுதாயத்தின்
நிலையை மாற்றிட
எதிர்காலம்– என்னை
அழைக்கின்றதே
முயன்றிடுவேன்
ஏழையின் கல்விச் சிகரம்
உயர்ந்திடவே

எஸ்.அகல்யா
சண்டிலிப்பாய்

## கல்வி உயர்த்தி வைக்கும்

சமுதாய பாரம்பரிய ஒழுக்க
பண்பாட்டு விழுமியங்கள்
சீர்கெட்டுப்போன
இக்கால கட்டத்தில் யாவற்றையும்
இழந்த நிலையிலுமிச்சிறுவன்
துணிவோடு பெட்டியிலமர்ந்து
கல்வியைக் கற்கின்றான் கருத்தோடு
இச்சிறுவனின் தன்னம்பிக்கை
அவனை உயர்த்தி வைக்கும்

துரை
தென்மட்டுவில்

## எதிர்காலம்

தனிமையில் இருந்து
தனியே படிக்கும் பையா!
தலைநிமிர்ந்து ஒரு காலம்
தலைவனாய் ஆவாயடா!
ஆபிரகாம்லிங்கனும் ஓர்நாள்
அமெரிக்க ஜனாதிபதியே!


கணபதிதாசன்
கட்டைக்காடு

## எடுப்பார் கைப்பிள்ளை

எடுப்பார் கைப்பிள்ளையாய்
எடுபிடி வேலை செய்து
கிடைக்கும் நேரமதில்
இருக்கையை தேடி நீயும்
எழுத்தெண்ணி படிக்கிறாயோ
எதிர்காலம் சிறந்திட
உனை நானும்
உளமார வாழ்த்துகிறேன்

உடுவிலூர் கலா

# மௌனத்தின் தேடல் -244



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.04.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசிகள் கண்ணீர் விடுகின்றன!

நண்பா! முன்பெல்லாம் பத்து வீடுதள்ளியிருக்கின்ற சொந் தங்களை கூக்குரலிட்டு அழைத்த காலங்கள் மாறி எங்கள் சட்டைப் பையி லிருந்து கூவுகின்ற கைத் தொலை பேசிகள் வரைக்கும் நாங்கள் வளர்ந்திருக்கின்றோ மேயன்றி எங்களுடைய பகுத்தறியும் அறிவு வளரமறுக்கின்றது. எங்களுடைய வாழ்க்கை முறையை இலகுபடுத்து வதற்காக விஞ்ஞானம் தந்தகைத்தொலைபேசிகள் எங்களை மீண்டும் மீண்டும் சிக்கலுக்குள் கொண்டு செலுத்திக் கொண்டிருக்கின்றன. நீ அறிவாயா? கடினப்பட்டு செய்கின்ற எந்தவொரு செயலுக்குப் பின்னாலும் நன்மைகள் ஏராளம் இருக்கின்றன. இலகுவாகச் செய்து முடிக்கவேண்டியிருப்பின் அவை குறித்த விடயத்தை செய்து முடிக்க வேண்டிய நேரத்தை மீதப்படுத்தும். மிஞ்சிய நேரத்தில் நாங்கள் செய்வதெல்லாம் வேண்டாத வேலைகள் தான்.

கால்களில் முள் குத் தக்கூடாது என்பதற்காக உரு வாக்கப்பட்ட தோல் செருப்பு க்களால் நீவேறு ஏதாவது வேலையைச் செய்வாயா? காலுக் கென்றுசெய்யப்பட்டது வேறெதுக்குமல்ல. கைத் தொலைபேசிகள் கண்ணீர் வடிக்கின்றன. அவசரத் தேவைக்காக மற்றவர்களுடன் கதைப்பதற்காகதயாரிக்கப்பட்ட கைத்தொலைபேசிகளில் பலகாரியங்கள் நடக்கின்றன. சிலகாரியங்கள் தனித்து உரிமையாளனைப் பாதிக்கின்றன. சிலகாரியங்கள் ஒட்டுமொத்த சமூகச் சீரழிவுக்கும் காரணமாகின்றன. வயது வித்தியாசமின்றி கைகளில் வைத்துக்கொண்டு சுற்றுவதும் பின்னர் தாங்களாகவே ஏதாவது வினையைத் தேடிக்கொள்வதும் பின்னர், கைத்தொலைபேசி வைத்திருந்துதான் முழுப் பிரச்சினையையும் தேடிக் கொண்டோம் என்றுஅதைத் தூக்கி எறிவதும், தொடர்கின்றது கைத்தொலைபேசிகள் கண்ணீர் விடுகின்றன.

நீஅறியாதது ஒன்றுமில்லை நண்பா! உண்மையில் பாதிக்குமேல் சமூகப் பிரச்சினைகள் கைத்தொலை பேசிக்குள் புதைந்து கிடக் கின்றன. தூக்கியெறியப்படு கின்ற பல கைத்தொலை பேசிகளுக்குள் பல பிரச்சினைகள் அழித்தொழிக்கப் படுகின்றன. கட்டுப்பாடற்ற முறையில் உன்னைவழி நடத்துகின்ற தைரியம் கைத்தொலைபேசிக்கு எப்படி வந்தது? ஒருநாளாவது நீகேட்டுப்பார்த்திருக்கின்றாயா? அதுஇல்லாமல் ஒருநாள், ஒரு மணித்தியாலம், உன்னால் இருக்கமுடியுமா? நீ ஆட்சிசெய்ய வேண்டிய கைத்தொலைபேசி உன்னை ஆட்சிசெய்கின்றது. யாருக்கும் நாம் அடிமை யில்லை. ஆனால் கைத்தொலை பேசி எங்களை ஆட்சி செய்கின்றது! என்ன நியாயம்? அதை விட மற்றவர்களின் ஆட்சியில் மக்கள் கண்ணீர் வடித்த வரலாறுஉண்டு. இங்கு ஆட்சிசெய்யும் கைத் தொலைபேசி அழுகின்றது. கவனிக்கவேண்டும்.



யாழ்.தர்ஷி

சிறுபிள்ளைகைகளில் பொம்மை ஒன்றைக் கொடுத்தால் எப்படி அடித்து அடித்து விளையாடுமோ அதேபோல சிலர் கைகளில் பொம்மைபோல அடித்து விளையாடப்படுகின்றன. சும்மா இருப்பவனின் மனம் சாத் தானின் உலைக்களம் என்று நம்மூர் பழமொழி ஒன்றி ருக்கின்றது. சும்மா இருப்பவன் கையில் கைத் தொலைபேசியும் இருந்தால்??

நண்பா! புற்றுநோய் போலபரவிக் கொண்டிருக்கின்ற கைத்தொலைபேசிக் கலாசாரம் புதிய நோய்களையும், சிந் தனைமுடக்கங்களையும் உரு வாக்கிக் கொண்டிருக்கின்றது. தவறு தொலைபேசியில் இல்லை. எங்களுடையது. விழிப்படைய வேண்டியது நீயும் நாங்களும் தான். சில வேளைகளில் உனது கைத் தொலைபேசியில் புதிய குயில் கள் கூவியழைத்து உன்னு டைய உள்ளத்தில் இறக்கை கள் பலவற்றை உருவாக்கி பறக்கவைக்கும். பறக்கும் போதுதிசைகள் தெரிவதில்லை. கவனம், காரியம் செய்வதற்கு குயில் காக்கையாரின் கூட்டிலும் முட்டையிடும். தொல்லைதரும் தொடர்புகளைதவிர்ப்பதால் உன் எதிர்காலத்தில் ஏற்பட விருக்கின்ற தொல்லைகளி லிருந்து தப்பிப்பாய். பலருக்கு கூவுவதேதொழிலாக இருக்கும் உனக்குநிறைய இலட்சியங்கள் இருக்கின்றன. உன் பெற் றோருக்குஉன்னைப் பற்றிய எதிர்பார்ப்புக்கள் ஏராளமாக இருக்கின்றன. நீ பொறுப்பு மிக்கவன். உன்னை, உன் நம்பிக்கை சுவர்களை எதுவும் தகர்த்துவிடாது.

ஆசையாக இருக்கும் அழகான கைத்தொலை பேசி ஒன்றை வைத்திருக்க வேண்டும். பலருக்கும் முன்னால் நின்று அதை அடிக்கடி எடுத்துப் பார்க்க வேண்டும். ஆனால் உன் மனதில் தோன்றுகின்ற புதிய வழிகளைமூடிவிடுகின்றது. ஒருநாள் முழுவதும் தொலைபசியின்றி நீகழித்துப்பார்! கடினமாக விருக்கும். ஆனால் கைத் தொலைபேசியின் கண்ணீருக்கு விடுமுறைகிடைக்கலாம். "பள்ளிக்கூட மதியஉணவுக்கு இருபதுரூபாபோதாது அப்பா இது என்னத்துக்கு காணும்? "நியாயமாகக் கேட்கத் தெரிந்த உனக்கு, படிக்கிற வயதிலை எனக்கெதுக்கு கைத்தொலை பேசி கேட்கலாம் தானே? சரி நீ வகுப்புமுடிந்து வரும்போது நேரம் சென்றுவிடும், உன்னு டைய பாதுகாப்புக்காக அப்பா கொடுத்தபோனில் நீ ஆபத்தை விலைக்கு வாங்கலாமா? சிலவேளை இந்தக் கேள்விகள் யாராவது கேட்டால் சிரிப்பாக இருக்கும் உனக்கு. ஆனால் நண்பாஅனுபவங்கள் தரும்பாடம் போல எதுவுமில்லை. சில அனுபவங்கள் பாடங்களை மட்டும் தருவதில்லை. வாழ்க்கையை முடிவுக்கே கொண்டுவந்துவிடும். பின்னர் அனுபவிக்க எதுவும் மிஞ்சு வதில்லை. கவனத்திலெடு.

நண்பா நாங்கள் கடந்து வந்தபாதைகளின் முட்சாரல்கள் இன்னும் குத்திக் கொண்டிருக்கின்றன. அவற்றிலிருந்து மீள்வதற்கு நானும் நீயும் அதிக சிரத்தையுடன் கடின உழைப்பு செய்யவேண்டியிருக்கின்றது. சிலவேளைகளில் நீ உனக்காகமட்டுமன்றி உன்னைச் சுற்றியிருக்கின் றவர்களு க்காகவும் சிந்திக்க வேண்டியவனாயிருக்கின்றாய். உன்னைக் கைக்குள் போடும் கைத்தொலைபேசியின் புதிய கலாசாரத்துக்கு அடிமையாகிவிடாதே!

புதியவிடயங்களைகற்றுக் கொள்ளவேண்டும், அவற்றை அறிந்துகொள்ளவேண்டும் என்ற அதிகஆர்வத்துடன் இருக்கின்ற நமதுமக்களுக்கு, மிக இலகுவில் அறியக் கூடியவிதத்தில் அனைத்து விடயங்களை உள்ளங்கைக்குள் கொண்டுவந்து விட்ட கைத்தொலைபேசிச் சீரழிவுக்குள்ளிருந்து விடுபட வேண்டிய கட்டாயத்திலி ருக்கின்றோம். திறந்து விடப்பட்டிருக்கின்ற கதவுகள் வழியேஆடுகள், மாடுகள் அனைத்தும் நம் வீட்டுக்குள் வந்துவிடுவது போல, மிகவிரைவாக உன் தொலை பேசிக்குள்ளும் அனைத்து விடயங்களும் வந்துவிடும். கவனம்!

வயல் வெளிகளிலும் தோட்டவெளிகளிலும் வெயில் சுமந்துசம்பாதித்தஅப்பாவின் காசை ரீலோட்டால் விழுங்கி விடாதே! பிள்ளைக்கு ஒருசோடி காப்புவாங்குவோம் என்று, அம்மாமுட்டைவித்துச் சேர்த்தகாசை இன்ரநெற் காட் வாங்கிஏப்பம் விட்டுவிடாதே! மணிக் கணக்காக காதுகளோடு ஒற்றிவைத்துப் பேசிப் பேசி காதுகளையும் வைத்தியசா லைக்குஅடகுவைத்துவிடாதே! கைத்தொலைபேசிகளையும் கண்ணீர் விட்டுஅழவைக்காதே! கேட்டுக் கொண்டிருக்கின்ற புதியகுரலுடன் கற்பனையில் வாழநினைக்காதே, உன் இலட்சியக் கனவுகளைத் தொலைத்துவிடாதே! நீசெய்வது கைத்தொலைபேசித் துஷ்பிரயோகம், கைத் தொலைபேசிஅழுகின்றது. நாளைஅதுவும் துஷ்பிரயோகத்துக்கு எதிராகப் போர் தொடுக்கலாம். எத்தனையோ சரியான விடயங்களைநாம் கற்றுக் கொள்ளவேண்டியவேளை யில், அநியாயத்துக்கு வரு கின்ற தவறான அழைப் புக்களை கற்றுக் கொண்டிரு க்கின்றோம். தமிழில் தவறிய அழைப்புஎன்றுசொல்வதற்குப் பதில் தவறானஅழைப்புக்கள் என்று சொல்வது சாலப் பொருத்தமானதாகும்.

நண்பா! உன்னால் கால்களை நேராகவைத்து நடக்கமுடிகின்றதல்லவா? கைகளால் சரியாக வேலை செய்யமுடிகின்றதல்லவா? உடலின் பாகங்கள் ஒவ் வொன்றாலும் ஒழுங்காகச் செயற்படமுடிகின்றதல்லவா? அவ்வாறிருக்கும் போது உன்னால் சரியாகவும் சிந்திக்கமுடியும். கைத்தொலைபேசியின் பாவனையின் சரி யானநோக்கத்தைபுரிந்துகொள்! கைத்தொலைபேசிகளின் கண்ணீரைத் துடைத்துவிடு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மனவெளி

**இவ்வாரம் "அம்மான்ரை கடைசி ஆசை" என்ற தலைப்பில், குடிப் பிரச்சினையுடன் வாழும் ஒரு குடும்பத்தின் உண்மைச் சம்பவத்தைத் தழுவிய சம்பவ விபரிப்பு ஒன்று வெளியாகின்றது. அடுத்த வாரம், குறித்த சம்பவத்தின் பின்னணி, தாக்கங்கள் என்பன தொடர்பில் துறைசார் நிபுணர் ஒருவரின் நேர்காணல் வெளிவரும்.**

### அம்மான்ரை கடைசி ஆசை!

"அம்மான்ரை கடைசி ஆசை இதுதான்,

"மகள் நீ பெரிய பிள்ளையாகி விட்டாய்! நான் செத்தால் என்ரை பிள்ளையளை நீதான் கவனமாகப் பார்க்க வேணும்,"

"அதுகள் என்னைப் போல அந்தரிச்ச வாழ்க்கை வாழக்கூடாது"

"அதுதான் பிள்ளை எனக்கு வேணும்"கலைச் செல்வியின் காதுகளில் தாயின் இறுதிக்குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. கண்களில், அம்மாவின் கடைசி நேர ஏக்கப்பார்வை இன்னும் நிலைத்து நின்றுகொண்டிருந்தது. வடிந்து கொண்டிருந்த கண்ணீர் அவள் உள்ளத்தைச் சுட்டுக் கொண்டு சென்றது. சற்று நேரம் மனம் இளைப்பாற எண்ணியது. கைகள் சோர்ந்து தைத்துக்கொண்டிருந்த துணி காலடியில் நழுவியது. அவளால் அதைஉணரமுடியவில்லை.உணர்ச்சிகள் செத்திருந்தன. அந்தச் சிறுபெண்ணின் ஆழ்மனதில் தன்னுடைய அம்மாவின் கடைசி ஆசை குமுறிக் குமுறி அலைகளை எழுப்பிக் கொண்டிருந்தது.

"ஏண்டி, கலைச்செல்வி! என்ன கனவு கண்டுகொண்டிருக்கிறியே? நீ தைச்ச துணியைக் குடுத்தால் தானே மற்றதுகள் தைக்கிற பக்கங்களை தைக்குங்கள், காலுக்குள்ளை போட்டுட்டு இருக்கிறாய். . .." ஓங்கி ஒலித்த மேற்பார்வையாளரின் குரல் செல்வியை கலங்க வைத்தது. அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அவள் மனதில் "இவர்களுக்கு நாங்கள் எல்லாம் ஒவ்வொரு இயந்திரம் தானே",

"இயந்திரம் கண்ணீர் விடாது, சிரிக்காது, இளைப்பாறாது. . ."

கலைச்செல்வியின் கைகள் வேகமாக தையல் மெஷினுடன் ஒன்றிணைந்தது. நினைவுகள் எல்லாம் தன் வீட்டை நோக்கி ஓடத் தொடங்கியது.

எட்டாம் தரத்திலிருந்து ஒன்பதாம் தரத்துக்கு காலடி எடுத்து வைத்த கலைச்செல்வியின் படிப்பின் மேலிருந்த ஆர்வத்தைக் கண்ட வகுப்பாசிரியர், அவளுடைய தாயிடம் அவளின் கெட்டித்தனங்களைப் பற்றி விபரித்தார். உள்ளம் குளிர்ந்த கமலாவும் தன் மகளை எப்படியாவது படிக்கவைத்து பெரிய உத்தியோகம் பார்க்க வைக்க வேண்டுமென்று நினைத்திருந்தாள். நான்கு பிள்ளைகள் தாய், தந்தை எனறுநடுத்தரக்குடும்பமாக இருந்த அவர்கள் முல்லை மாவட்டத்தில் வசித்து வந்தனர். தந்தை கனகரத்தினம், தன்னால் முடிந்த சிறு சிறுவேலைகளுக்குச்சென்று குடும்பத்தின் கஷ்ட நிலையிலிருந்து அவர்களைக் காத்து வந்தார். யுத்தத்தில் அகப்பட்டிருந்த போதும் தன் பிள்ளைகளை எப்படியோ காயங்கள் எதுவுமின்றிக் காப்பாற்றி விட்டார்.

"அப்பா எங்களோடை நல்ல அன்பாகத்தான் இருந்தவர்,

"இப்பரண்டு வருசத்துக்கு முதல் அமமான்ரை அண்ணாக்கள், அம்மாவின்ரை பேரிலை இருந்த காணியைக் கேக்க, அம்மா குடுக்கேல்லை எண்டு, செய்வினை செய்துதான் எங்கடை குடும்பம் இப்பிடிச் சிதறிப் போனது." கலைச் செல்வியின் திடமான மனது சொல்லியது.



நடந்த பிரச்சினைகள் எல்லாத்துக்கும் காரணம் அதுதானென்று அவள் மனம் உறுதியாகச் சொல்லியது.

ஒரு வருடத்துக்கு முன்னர் நடநது முடிந்த சம்பவம்படம்போல கலைச்செல்வியின் மனத் திரையில் ஓடத்தொடங்கியது. . .

கொஞ்ச நாட்களாகவே அப்பாவின் போக்கு நன்றாக இருக்கவில்லை. "அடிக்கடி கள்ளுக்கோப்பிரேசனுக்குக் கிட்ட காணத்தொடங்கினம். "நான் வகுப்புக்கு போயிட்டு வரேக்குள்ளை ஒரு நாள் விழுந்தும் கிடந்தார்."

"அம்மாட்டை வந்து சொன்னாலும் அம்மா அழுது போட்டு ஒரே யோசிச்சுக் கொண்டிருந்தா." ஆரம்பத்திலை அப்பா கொஞ்சமாக் குடிச்சிட்டு மிச்சக்காசைக் கொண்டு வந்து அம்மாட்டைக்குடுத்திட்டு பேசாமல் படுத்திடுவார்.நாளாக, நாளாக, அப்பா வீட்டுக்கு காசே தாறதில்லை. முழுக்காசுக்கும் குடிக்கத் தொடங்கினார். அது மட்டுமில்லாமல், அம்மா காசு கேட்டா அவாக்கு அடிக்கவும்தொடங்கினார்."

ஒரு ஞாயிற்றுக்கிழமை,

"அப்பா நிறையக் [illegible] வீட்டை வராமல் ரோட்டிலையே படுத்திட்டார். நானும் தம்பியும் இரவிரவா தேடிப்பாத்தம், காணவேயில்லை.. அன்றைய நாளை என்னால் மறக்கவே முடியாது. இருட்டிப் போச்சு, பயமாக்கிடந்தது. ஒருத்தரும் உதவிக்கும் வரேல்லை. வீட்டையும் அம்மாவும் தங்கச்சியாக்களும் தனிய, தம்பியோடை நான் ரோட்டு ரோட்டா தேடினன். ஒரு காண்டைப்பத்தைக்குள்ளை அப்பா உடுப்பெல்லாம் கழண்டு போய், சத்தியெல்லாம் எடுத்து, அதிலையே ரொய்லெட்டும் இருந்து. . . சொல்லவே முடியாது. நானும் தம்பியும் கனநேரம் கஷ்டப்பட்டு அவரை இழுத்து வெளி ரோட்டுக்கு கொண்டு வந்திட்டம். பிறகு,தெரிஞ்ச ஒரு அண்ணை அதாலை போக அவரோடை சேர்ந்து தூக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தம்."

இன்னுமொரு நாள்,

"அம்மாவுக்கு அடிச்சுப் போட்டு அம்மாவையும்எங்களையும்வீட்டை விட்டு துரத்திப் போட்டார். நாங்கள் எல்லாரும் வெளியிலை இருந்த மண்கும்பிக்கு மேலை ஏறி இரவிரவா படுத்திருந்தனாங்கள். அம்மா தொடர்ந்து அழுது கொண்டேயிருந்தவா. தம்பியும் அண்டு முழுக்க நித்திரை கொள்ளவே இல்லை. எனக்கு அவனைப்பாக்கவும் அழுகையா இருந்திச்சு. அம்மா அப்பாவுக்காக கௌரி விரதம்பிடிக்கிறவா, அண்டைக்கு அவா விரதம் இருந்தும் கூட அப்பா அடிச்சுப் போட்டார்."

இப்பிடியே தொடர்ந்து கொண் [illegible] இப்பிடிப் போய் முடியும் எண்டு ஒருத்தரும் நினைச்சுக் கூடப் பாக்கேல்லை. ஒரு நாள் கோயில் திருவிழாவெண்டு பக்கத்துக் கோயில்லை பாட்டுக் கோஷ்டி போட்டவங்கள்,நாங்கள் எல்லாரும் பாக்கப் போயிட்டம்,அப்பாவும் அம்மாவும் தான் வீட்டை நிண்டவை. நாங்கள் நிகழ்ச்சி எல்லாம் முடிஞ்சு வீட்டை வாறம். எனக்கு அதை சொல்லவே நெஞ்சு திக் திக் எண்டு கொணடிருக்கு. . . எங்கடை சின்ன ஓலை வீட்டின்ரை ஒருபக்கம் நெருப்பிலை எரிஞ்சு போய் இருந்தது. நாங்கள் பயந்து போய் பெரிய சத்தமாக் கத்தினம். பக்கத்திலை இருந்தாக்கள் எல் லோரும் ஓடிவந்தினம். வீட்டுக்குள்ளை எட்டிப்பாத்திட்டு வேகமா வந்து தம்பி, தங்கச்சியாக்களை எல்லாம் இன்னொரு அன்ரியோடை விட்டுட்டு, வீட்டுக்குள்ளை போய் எரிஞ்சு போயிருந்த எங்கடை அம்மாவை தூக்கிக் கொண்டு வந்தினம். "அம்மா. . ." எண்டு பெரிய சத்தமாக் கத்தினன்.

அம்மா ஏனம்மா இப்பிடிச் செய்தனீங்கள்?, ஐயோ! ஐயோ! ஏனம்மா என்னம்மா நடந்தது? நான் கத்திக் கொண்டிருக்கும் போதே, எல்லாரும் என்னைத் தள்ளிவிட்டுட்டு அம்மாவை வாகனம் ஒன்றிலை ஏத்திச்சினம். "உயிர் இருக்கு" எண்டு ஆக்கள் சொன்னது எனக்குக் கேட்டது. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் வைச்சிருந்து இரண்டு நாளிலை அம்மா செத்துப் போனா. அவ கடைசியா என்னோடை தான் கதைச்சவா. "பிள்ளை நீ பெரியாளா வளந்திட்டாய் அந்த நம்பிக்கையிலை தான் நான் இப்பிடிச் செய்தனான், என்னாலை இனி இருக்க ஏலாது பிள்ளை. தம்பி தங்கச்சியாக்களை நல்லாப் பாத்துக்கொள்ளு. "நீதான் இனி அதுகளுக்கு எல்லாமே. நான் அனுப விச்ச நரகவேதனையைச் சொல் லவே ஏலாது பிள்ளை" என்று சொல்லி அழுதுகொண்டு தான் அம்மா கடை---சியிலை எங்களை விட்டுட்டுப் போயிட்டா.

அடுத்த பத்து நாட்களும் அம்மா இல்லாமல் நாங்கள் சரியாத் திண்டாடிப்போயிட்டம். சாப்பாட்டுக்குப் பட்டபாடு. எல்லாத்தையும் பாத்துக் கொண்டிருந்த தம்பி, ஒரு நாள் வெளியை போனான். பின்னேரம் கையிலை காசும் சாப்பாடும் வாங்கிக் கொண்டு வந்தான். எப்பிடி வந்தது என்று நான் கேட்டுக் கேட்டுப் பாத்தும் அவன் பதில் சொல்லவே இல்லை.கடைசியிலைபொலிஸ் வந்து பிடிச்சுக் கொண்டு போன போதுதான் அவன் களவெடுத்த விசயம் தெரிய வந்தது. "அக்கா எனக்குப் பசி தாங்கேல்லையடி அதுதான் இப்பிடிச் செய்தனான்" என்று எனது சகோதரம் அழுததை என்னால் மறக்கவே முடியாது. தம்பி இப்ப சீர்திருத்தப்பள்ளிக் கூடத்திலையிருந்திட்டு வீட்டை வந்திருக்கின்றான்.

எல்லாத்தையும்பாத்துக்கொண டிருக்க என்னால் முடிய வில்லை. நான் ஏதாவது ஒரு வேலைக்கு போகவேணும் எண்டு முடிவெடுத்து என்ரை படிப்பைப் பத்தாம் வகுப்போடை நிப்பாட்டிப் போட்டு, கொழும்பிலை இந்தத் தைக்கிற கொம்பனிக்கு வேலைக்கு வந்திட்டன். அம்மான்ரை கடைசி ஆசைப்படி நான் என்ரை சகோதரங்களை வடிவாப்படிக்க வைக்கவேணும். எங்கடை அப்பான்ரை குடி எங்கடை குடும்பத்தையே சிதறிச்சு விட்டது. வாற கிழமை லீவு தருவினம் நான் வீட்டை போக வேணும். காத்துக் கொண்டிருக்கின்றாள் கலைச்செல்வி.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசாங்கம் எது?



தெளிவானதொரு இலக்குடன் பயணத்தை ஆரம்பித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம், இப்போது எந்த வழியில் செல்வது என்று தெரியாமல் தடுமாறி நிற்பதாக தோன்றுகிறது.

ஜனவரி 8ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர், இலங்கை அரசியலில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. கீரியும் பாம்புமாக இருந்தவர்கள், ஒன்றிணைந்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைத்தனர்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்டிருந்தபோதிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, வாலை சுருட்டிக்கொண்டு போய் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துகொண்டது.

நாடாளுமன்றத்தின் மொத்த ஆசனங்களில், ஆறில் ஒரு பங்கு ஆசனங்களை மட்டுமே கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 26 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவிகளை பெற்றிருக்கின்றனர். தேசிய ஒற்றுமை அரசாங்கம் என்று இதனை கூறுகின்றனர்.

ஆனாலும், அரசாங்கத்திலும் இருந்துகொண்டே எதிர்க்கட்சியாகவும் இருக்கப்போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறுகிறது.

இவை எல்லாவற்றையும் இலங்கை அரசியலில் இதுவரை நிகழ்ந்திராத அற்புதங்கள் என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனநாயக ஆட்சி முறை நிலவும் உலகின் ஏனைய நாடுகளில் கூட, இத்தகைய முரண்பாடான நடைமுறைகள் இருந்திருக்குமா என்பது சந்தேகமே.

இலங்கையில் இதற்கு முன்னரும் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1960 இல் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபோது, தமிழரசுக் கட்சியும் அதில் இடம்பெற்றிருந்தது. ஆனால், இப்போது அமைக்கப்பட்டிருப்பது தேசிய அரசாங்கம் அல்ல.

தேசிய அரசாங்கம் என்றால், நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகள் அனைத்தும் இடம்பெறவேண்டும். இப்போதைய அரசாங்கத்தில் அத்தகைய நிலை இல்லை. எதிர்க் கட்சியும் ஆளும் கட்சியும் இணைந்து அமைத்த ஒரு விதமான கூட்டணி அரசாங்கமே இது.

இந்த தேசிய ஒற்றுமை அரசாங்கத்துக்கு வெளியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), தேசிய சுதந்திர முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, மேலும் இடதுசாரிக் கட்சிகள் என்பன இன்னமும் இருக்கின்றன.

எனவே, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கமாக இதனை எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும், தேசிய ஒற்றுமை அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முக்கியமான சறுக்கலாகவே பார்க்கப்படுகிறது.

கடும் அரசியல் அழுத்தங்கள் காரணமாக அவரால், இலங்கையின் அரசியல் பாரம்பரியங்களை மீற முடியாத நிலை ஏற்பட்டது. தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவது தேர்தல் வாக்குறுதியாக இருந்தாலும், இத்தகையதொரு அரசாங்கத்தை அமைக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது துரதிர்ஷ்டமானது என்றே கூறவேண்டும்.

சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்களையும் அரசாங்கத்தில் இணைத்துக்கொண்டதன் மூலம், அதுவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசுவாசிகளான பலரையும் உள்வாங்கியதன் மூலம், சுத்தமான கைகள் என்ற அரசாங்கத்தின் இமேஜ் உடைந்துவிட்டது.

முன்னைய ஆட்சியில் ஊழல் மோசடி செய்தவர்கள் என்று குற்றஞ்சாட்டியவர்களையும் கூட, தனது அமைச்சரவையிலேயே சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ஆட்சியில் மோசமான அமைச்சர்கள் என்று பெயர் எடுத்தவர்களை கூட, இப்போது தன்னுடன் வைத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

நல்லாட்சியை அமைப்பதாக கொடுத்த வாக்குறுதி ஒரு புறம், அரசியலமைப்பில் - ஆட்சி முறையில் மாற்றங்களை கொண்டுவருவதாக அளித்த வாக்குறுதி மறுபுறம். இந்த இரண்டையும் ஒருசேர நிறைவேற்றுவது என்பது கடினமான காரியம். இதுவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வந்திருக்கின்ற சோதனை.

இந்த தேசிய ஒற்றுமை அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மட்டுமன்றி, ஐ.தே.க. வுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கூட ஒரு அவசியமான தேவையாகவே இருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கியமான தனது தேர்தல் வாக்குறுதிகளை குறிப்பாக, 100 நாட்களுக்குள் நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஏனென்றால், அந்த விடயத்தில் தாம் தோல்வியடைந்தால், மக்களின் எதிர்பார்ப்பு பொய்யாகிவிடும். எனவே, எப்படியாவது 100 நாட்களுக்குள் அரசியலமைப்பு மாற்றம் குறித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கிறார்.

ஆனால், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைத்தல் உள்ளிட்ட அரசியலமைப்புத் திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு, அவரே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவே இருந்தாலும், சிக்கலாக உள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொறுத்தவரை யில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவே இருந்தாலும், அதன் பெரும் பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னைய ஆட்சிக்கு இன்னமும் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விசுவாச மானவர்களாகவே இருக் கின்றனர்.

அவர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுக்கின்ற முடிவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

அவரது முடிவுகளை நிறைவேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தயாராக இருந்தால், அவர் இந்தளவுக்கு வளைந்து கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்னமும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் நிழல் தான் ஆட்சி செய்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த இரகசியம். மகிந்த ராஜபக்ஷவின் நிழலிலிருந்து; சுதந்திரக் கட்சியை வெளியே கொண்டுவருவதற்காகவும் ஜனாதிபதி தேர்தலின்போது, தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவுமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல விடயங்களில் சமரசம் செய்துகொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்.

அரசியலமைப்புத் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவை.

அதற்கு 128 உறுப்பினர்களை கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு முக்கியம். அதற்காகவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியை தேசிய ஒற்றுமை அரசாங்கத்துக்குள் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அமைச்சர் பதவிகளை கொடுத்து அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு அவர்களின் ஆதரவை பெற முற்பட்டுள்ளார்.

அதேவேளை, அரசியலமைப்புத் திருத்த வாக் குறுதியை நிறை வேற்று வதற்காக அவர், நல்லாட்சி என்ற விடயத்தில் சமரசம் செய்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நல்லாட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முக்கியமானதொரு வாக்குறுதி.

முன்னைய அரசாங்கத்தில் இருந்தவர்கள் எவ்வாறு ஆட்சி செய்தனர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அது நல்லாட்சியாக இல்லாததாலேயே, மோசமான ஆட்சியாக இருந்ததாலேயே, நல்லாட்சியை அமைப்போம் என்ற வாக்குறுதி அளிக்க வேண்டிய நிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏற்பட்டது.

முன்னைய மோசமான ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தவர்களை கொண்டு நல்லாட்சியை எப்படி வழங்கப்போகிறார் என்ற கேள்வி துளிர்த்திருக்கிறது. இந்தச் சந்தேகம் எல்லா மட்டங்களிலுமே வியாபித்திருக்கிறது. அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய வாக்குறுதிக்காக அவர் நல்லாட்சி பற்றிய வாக்குறுதி விடயத்தில் சமரசம் செய்துகொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ என்ற மிகப்பெரிய அச்சுறுத்தலை நிரந்தரமாகவே இல்லாமல் செய்யவேண்டுமானால், அரசியலமைப்புத் திருத்தம் உள்ளிட்ட பல விடயங்களை நிறைவேற்றவேண்டும். அதற்காகவே, அவசரப்பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரையும் அமைச்சர வைக்குள் கொண்டுவர ஒப்புதல் கொடுக்கவேண்டிய நிலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பொறுத்த வரையில் ஐ.தே.க. தேர்தல் வாக்குறுதியின் படி நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டால், தமக்கு ஆபத்தாகிவிடும் என்று பார்க்கிறது. இப்போது தேர்தலை எதிர்கொள்வதற்கு சுதந்திரக் கட்சி தயாராக இல்லை.

அதைவிட, நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் இருந்து பிரதமருக்கு செல்வதையும் சுதந்திரக் கட்சி விரும்பவில்லை.

எனவே, எப்படியாவது அரசாங்கத்துக்குள் நுழைந்து அதன் பிரதான நோக்கங்களை திசைதிருப்பி விட முனைந்திருக்கிறது சுதந்திரக் கட்சி.

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள தேசிய ஒற்றுமை அரசாங்கமானது தற்போதைய ஆட்சியில் எல்லா செயற்பாடுகளுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் இருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்ட இலக்கு, முடிவுக் கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அரசியலமைப்புத் திருத்தங்கள் உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டு அடுத்த தேர்தலுக்கு செல்வதே புத்திசாலித்தனமானது என்பது அரசாங்கத்துக்கு தெரியும்.

ஆனாலும், சூழ்நிலைக் கைதியாக மாறிவிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், அவ்வாறு எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைக்க முடியுமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால், இதுவரையில் வெளியிலிருந்து நாடாளு மன்றக் கலைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த சுதந்திரக் கட்சி யினர், இப்போது அரசாங் கத்துக் குள்ளேயே வந்துவிட்டனர்.

அமைச்சர் பதவிகளை விட்டுக்கொடுப்பதன் மூலம் அவர்களின் ஆதரவை பெறமுடியும் என்பது தற்போதைய அரசாங்கத்தின் கணிப்பாக இருந்தாலும், அது எந்தளவுக்கு சரியானது என்பதை அரசியலமைப்புத் திருத்த யோசனைகள் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வரும்போதே தெரிந்துகொள்ள முடியும்.

**கே. சஞ்சயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலமாகிய நினைவுகள்

## சிறுகதை

இரவு நேரம் பன்னிரெண்டு மணிக்கு மேலாகி விட்டிருந்தது.

தலைக்குள் வலிப்பது போலவும் தூக்கம் வரமறுத்து, இதயத்தைத் துக்கம் அமுக்கிக் கொண்டிருப்பதுமான வேதனையிலும் அவன் இருந்தான். உடலையும்மீறி மனச் சோர்வானது அவன் இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டு நின்றதனால் எதனையும் நிதானமாகச் சிந்திக்க முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்தான். சற்றுநேரத்துக்கு முன்பு நடந்து விட்ட அகால அவல நிகழ்வானது அவனுள்ளே அச்சங்களையும் ஆழமான மனப் போராட்டங்களையும் ஏற்படுத்தியிருந்தது. பாயை விரித்து அதில் படுப்பதற்கு ஆயத்தமான போதிலும்,தூக்கம் அவனது கண்களைத் தழுவாமல் தூரத்தே நின்று வேடிக்கை பார்ப்பது போல இருந்தது. தரப்பாள் வீட்டுக்குள் தட்டுமுட்டுச் சாமான்களுக்கு அருகாக துயில் கொள்ளும் பந்த பாச உறவுகள் அவன் கண்களில் படுகின்றன.

பதுங்கு குழியற்ற நிலையில் இந்த இடத்திலும் ஒரு ஷெல் வந்து விழுந்தால்....? அவனுக்கு அதை நினைக்க உடம்பு குளிர்ந்தே போய் விட்டது. தன் மனைவியைக் கட்டிப் பிடித்தபடி படுத்திருந்த தன் ஐந்து வயது மகளைப் பார்க்க அவனுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

இந்தக் குஞ்சுகள் எல்லாம் என்ன பாவம் செய்ததுகளோ...?

அன்று மாலை 5.30 மணியளவில் நடந்து முடிந்து விட்ட, அந்த அவல நிகழ்வை மனதுக்குள் நினைத்துப் பார்க்க அவனுக்கு பயமாக இருந்தது. மாத்தளன் சந்தியை அண்டிய கப்பல் றோட்டில், ஒரு குடிசையில், நடக்க இயலாதவராக இருந்த அவனது மாமனார் மற்றும் அவரது மைத்துனர், மைத்துனரின் உறவுக்காரப் பெண் மூவரும் கருகிக்கிடந்த கோலம்... அதை அவன் தன் மனத்திரையிலிருந்து அகற்ற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

கைவேலியில் ஒரு குடும்பமாக அனைவரும் இருந்த போது, காலை வேளைகளில் நித்திய கருமங்களைச் செய்வதற்கு அவனது மாமனார் படும்பாடு பெரும் பாடாகவேயிருக்கும். கால்களை நிலையாக நிலத்தில் ஊன்றி நடக்க முடியாதவராக... இருபக்கத்திலும் இருவர் தாங்கிப் பிடித்த நிலையிலேயே அவர் செயற்பட வேண்டியவராக இருந்தார்.

உறவினரின் வீடானது கிணறு, மலசலகூட வசதிகளோடு அமைந்திருந்தாலும் வீட்டினுள்ளும் வளவினுள்ளும் இடப்பற்றாக்குறை காரணமாக மனைவி, பிள்ளைகள் யாவரும் மாத்தளன் கடற்கரையை அண்டிய பகுதியில் தரப்பாள் வீடடித்து வசித்து வந்தனர். நூறு மீற்றர் வித்தியாசத்தில் வீடுகள் இருந்ததால் பிள்ளைகள் அடிக்கடி சென்று அவரது தேவைகளைக் கவனித்து வந்தனர்.


இந்நிலையில், முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞர் மடத்தினில் ஷெல்கள் விழுந்து வெடித்து மக்கள் பலியாகிக் கொண்டிருப்பது அதிகரித்த வண்ணமிருக்க மாமாவை எங்கு கொண்டு செல்வது...? எப்படிக் காப்பாற்றுவது என்பதில் குடும்பத்தவர்கள் எல்லோருமே குழப்பத்தில் இருந்தார்கள்.

இயக்கத்திட்ட பாஸ் எடுத்து கப்பலால புல்மோட்டைக்குக் கொண்டு போவோம்.

அவனது மனைவி தன் கருத்தைச் சொன்ன போது எல்லோரும் அதை ஆமோதித்து பாஸ் எடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கினர். மூன்று நான்கு நாட்களாக அலைக்கழிந்தும் காரியம் ஒப்பேறாததால் அவன் கடும் சினத்துக்குள்ளானான்.

இவங்கள் என்ன காரணத்துக்காக பாஸ் தரமாட்டம் என்கிறார்கள். இப்ப வயசான காலத்தில ஏலாமல் இருக்கிறவருக்கு பாஸ் இல்லையெண்டால் ...? அப்ப ஆருக்கு பாஸ் குடுக்கப் போறாங்களாம்?

நீங்கள் கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு சும்மா இருங்கோ?



பயத்தில் அவன் மனைவி அதட்டினாள்.

நீ ஏன் பயப்படுகிறாய் ...? நான் என்ன கொலையா களவா செய்து போட்டு நிக்கிறன்? இதில பயப்படுகிறதுக்கு என்ன இருக்கு?

அவன் வெளிப்படையாக சற்று உரத்துக் கூறியதைக்கண்டு அவன் குடும்பத்தவர்கள் பயந்தே போய்விட்டார்கள்.

மேலும் சில நாட்கள் பாஸ் எடுக்க ஓடியாடித் திரிந்தும் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு கதைத்தும் பலனில்லாது போகவே அவரவர் வாய்க்கு வந்தபடி திட்டித்தீர்த்து விட்டு நடக்கிறது நடக்கட்டும் என அமைதியாக இருந்து விட்டனர்.

இதன் பின்பு இரண்டொரு நாட்களாக ஷெல்கள் வந்து விழுவது ஏனோ நடைபெறவில்லை. ஆமி பண்ட் அடிச்சு தன்னைப் பலப்படுத்துகின்றான் போல. அதுதான் ஓய்வாயிருக்கு.

இவையள் விட்டுட்டு ஓடி வந்திட்டினம் போலக்கிடக்கு. அதுதான் சத்தம் சாவடியைக் காணேல்லை.சன[illegible] விமர்சனங் கள் பலதும்பத்துமாக கிளம்பத் தொடங்கின.

அன்று சங்கக்கடையில் கொடுக்கப்பட்ட ரேசன் சாமான்களை வாங்கிக் கொண்டு அவன் வீடு திரும்பும் போது மதியத்துக்கு மேலாகிவிட்டது. தண்ணீர்த்தாகம் வேறு வாட்டிக் கொண்டிருந்தது அவனுக்கு. சங்கக்கடையில் கொடுக்கப்பட்ட அற்பசொற்ப சாமான் களை ஒரு உரைப்பையினுள் திணித்து அதைத் தலையிலே சுமந்து வந்த அவன் றோட்டு அருகோரம் மாமனார் தங்கியிருந்த குடிசை வீட்டினுள் சென்றான்.

கிடுகால் வேயப்பட்டிருந்த குளிர்ச்சி நிலவிய அந்தக் குடிசையினுள் ஒரு கட்டிலில் மாமா படுத்திருந்தார்.

மாமா

கண்விழித்துப் பார்த்த அவர் மிகவும் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

எங்க இந்த வெயிலத்துக்குள்ளால...? துலையாலயே வாறியள்...?

சங்கக்கடையில நிவாரணச் சாமான் எடுத்து கொண்டு வாறான்..

உது எத்தனை நாளைக்குக் காணப்போகுது. தொழில் துறையளும் இல்லை. அவன் ஆமி வாறதைப் பார்த்தால் எல்லோரையும் புடிச்சிடுவாங்கள் போலக் கிடக்குது. புடிச்ச எல்லோரையும் சுட்டு விட்டாங்கள் எண்டால் உபத்திரவமில்லை.

அவர் சலித்தபடி விரக்தியாகக் கூறிக்கொள்கிறார்.

சாப்பாடு வந்திட்டுதே? சாப்பிட்டியளே...?

அவன் அவரை விரக்தி மனநிலையில் இருந்து திசை திருப்புவதற்காக பேச்சைத் திசை மாற்றினான்.

ஒமோம் இப்பதான் அவள் சின்னவள் கொண்டுவந்து தந்து சாப்பிட்டனான் . நீங்கள் சாப்பிட்டியளே...?

இல்லை மாமா இனிப் போய்த்தான் சாப்பிட வேணும் நான் போட்டுவாறன் வெளிக்கு ஏதும் போகப்போறியளே...? புடிச்சுக் கொண்டு போய்விடுகிறதே.வேண்டாம் நான் போயிட்டு வந்திட்டன்.

[illegible] திரும்பவும் கட்டிலில் படுத்துக் கொண்டார். அவன் அவர் அணிந்திருந்த சாரத்தை ஒழுங்காய் சரிசெய்து தலையணையை முதுகுப்பக்கம் அணையாக வைத்து விட்டு தலைமாட்டில் இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து தண்ணீர் குடிக்கத் தொடங்கினார்.

இவள் ராகினியை பின்னேரம் ஒருக்கா வரச்சொல்லி விடுங்கோ?

சரி மாமா

தரப்பாள் வீட்டினுள் மாலை ஐந்து மணிக்குத் தொடங்கும் வானொலிச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்த அவனுக்கு சிரிப்பு வந்தது.

என்னப்பா! உங்கட பாட்டுக்கு நீங்களே சிரிக்கிறியள்? அவனது மனைவி அவன் அருகில் வந்து நின்று கேட்டாள். பயப்படாதை! எனக்கின்னும் லூசாக்கேல்லை. நாட்டு நடப்புக்களையும் நம்முடைய போராட்டத்தையும் நினைக்கச் சிரிப்பு வருகுது... கூறி விட்டு அவன் மீண்டும் சிரித்தான்.

இஞ்சருங்கோ! நாட்டு நடப்புக்கள் இப்ப மோசமாயிருக்கு கண்டபடி கதைச்சு... அவள் அவனை எச்சரித்து விட்டு வெளியே சென்றாள்.'

திடீரென அதிர்வொலியொன்றைக் கேட்டு வெளியே போன அவனது மனைவி வீட்டுக்குள் ஓடி வர அவன் செய்தி கேட்பதை நிறுத்தினான். என்னப்பா பிறகு துவங்கியிட்டாங்கள் போலக் கிடக்குது. வெளியே சனங்கள் அசையவில்லை. மரணங்களைக் கண்டு கண்டு மனங்கள் மரத்துப் போனதாலோ என்னவோ விறைச்ச கம்புகளாய் வெளியே உலாவிக் கொண்டிருந்தார்கள்.

இயக்கத்தின்ர எரிபொருள் குதமொன்று நெருப்புப் புடிச்சு எரியுதாம். பக்கத்துத் தரப்பாள் வீட்டிலிருந்து ஒலித்த குரல் கேட்டு அவனும் அவன் மனைவியும் வெளியே வந்து பார்த்தார்கள். வானமங்கும் ஒரே புகைமண்டலமாக இருந்தது. றோட்டில் சனங்கள் குழுக்களாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். மாத்தளன் சந்திப்பக்கமாக இருந்து எழும் புகைக் கூட்டத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தவனின் முகம் சட்டென இறுகியதை அவன் மனைவி கவனிக்கவில்லை.

மாத்தளன் சந்தியில் இயக்கத்தின்ர பேஸ் எதுவுமே இல்லையே. அதுவும் ஆமி வாற திசையை நோக்கி அவங்கள் எரிபொருள் ஒன்றையும் வைச்சிருக்கமாட்டார்களே.. அப்படியானால் எரியிறது என்ன?

அவனுள் ஆயிரம் கேள்விகள் நெருப்புப் பொறிகளாய் வெடித்துச் சிதற வேகமாக நடந்து சென்று கப்பல் றோட்டில் ஏறி மாத்தளன் சந்தியை நோக்கி ஓடத்தொடங்கினான்.

எங்கையப்பா ஓடுறியள்..? ஆமி திரும்பவும் செல் குத்தப் போறான்.. மனைவியின் குரல் அவனைத் துரத்திய போதும் அவன் ஓடிக்கொண்டிருந்தான்.

சில விநாடிகளின் பின்... ஓடிய அதே வேகத்தில் குளறியபடி திரும்பி ஓடி வந்தான் அவன்.

ஐயோ எடி புள்ள மாமா இருந்த கொட்டில் எரிஞ்சு சாம்பலாய்க் கிடக்கடி.. கூறி விட்டு அவன் திரும்பவும் எரிந்து கொண்டிருக்கும் இடம் நோக்கி ஓடத் தொடங்கினான். அவனுக்குப் பின்பாக அவனது குடும்பத்தவர்கள் ஒவ்வொருவரும் குளறியபடி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

மாமா இருந்த குடிசைக் கொட்டில் முற்றாக எரிந்து போய் விட்டிருந்தது. குந்திய வடிவத்தில் இரண்டு கைகளையும் மேலே தூக்கிய நிலையில் கட்டிலோடு எரிந்து சுடு சாம்பல்களுக்கு நடுவில் கருகிப் போய்க் கிடந்தார் மாமா. அவருக்குப் பக்கத்தில் ஒரு கால் மட்டும் தப்பிய நிலையில் மற்றைய பாகங்கள் எல்லாம் கருகிப் போய் மாமாவின் மைத்துனர் கிடந்தார். அவர்கள் இருவருக்கும் நடுவில் பெண்ணொருவர் அடையாளம் தெரியாத படிக்கு முகம்குப்புற அவலமாய்க் கிடந்தார்.

இனபந்துகளின் கூக்குரல்களும் கதறல்களும் போரினுள் வாழ் மக்களுக்கு சாதாரணமாக இருந்ததால் அங்கு நின்றிருந்த எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. உதவிக்கு வந்த சில ஆட்களோடு கருகிய உடல்களைக் கயிற்றால் கட்டி வெளியே இழுத்து எடுத்து பாய்களில் போட்டு பழந்துணிகளால் மூடினார்கள். பின்னர் கன்ரர் வாகன மொன்றில் ஏற்றிக் கொண்டு போய் குழிவெட்டிப் புதைத்து விட்டு திரும்பி வருகையில் இரவு பன்னிரெண்டு மணிக்கு மேலாகி விட்டிருந்தது.

என்னப்பா இருந்த இரையில யோசித்துக் கொண்டிருக்கிறியள்...? படுக்கையில் இருந்து திரும்பிய போது தற்செயலாக அவன் இருந்த நிலை கண்டு மனைவி வினாவினாள். ஒண்டுமில்லை... நித்திரை வருகுதில்லை. அவன் ஒரு ஒப்புதலுக்குக் கூறி விட்டு கண்களை மூடிக் கொண்டான். உபத்திரவங்களில் இருந்து விடுபட நினைத்தவர், நெருப்பில் உபத்திரவப்பட்டே போய்ச் சேர்ந்திட்டாரே...? அவன் உள்ளம் வேதனையில் வெம்பித் தகித்துக் கொள்கிறது. அவன் ஆமி வாறதைப் பார்த்தால் எல்லோரையும் புடிச்சிடுவா ங்கள் போலக் கிடக்குது. புடி ச்சு எல்லோரையும் சுட்டு விட்டாங்கள் எண்டால் உப்பத்திரவமில்லை.

அன்று மதியம் சங்கக் கடையால் வந்து அவருக்கு அருகில் இருந்த போது அவர் கூறிய அந்தக் கடைசி வார்த்தைகள் மீண்டும் .... மீண்டும்... ஒலித்துக் கொண்டிருந்தன அவனது மனதுக்குள்.

அலெக்ஸ்
பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதித்த பிறகே திருமணம்???



## சவாலை எதிர்கொள்ள நீங்கள் தயாரா?

சாதித்த பிறகே திருமணம் என்பது இப்போதைய இளைஞர்களின் தாரக மந்திரமாகி வருகிறது. இப்படி கூறியே பலர் முப்பது, முப்பத்தைந்து வயது வரை திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

படிப்பு, நல்ல வேலை, பதவி உயர்வு, நல்ல சம்பளம் என்பதையே வாழ்வின் குறிக்கோளாக வைத்து ஓடிக் கொண்டிருக்கிறோம். இலக்கை அடைந்து திரும்பிப் பார்க்கையில் நம்கையில் அனைத்தும் இருக்கும் இளமையைத் தவிர!

15 வயதிற்குள்ளாகவே, இளமைப்பருவத்தில் அடியெடுத்து வைத்து விடுகிறோம். ஆனால் 30, 35 வயதுவரை வாழ்க்கை வசதிக்காக உடல் தேவையை பூர்த்தி செய்யாமல் இயற்கைக்கு எதிராக வாழ முற்படுகிறோம்.

நம் நாட்டில் செக்ஸ் என்பது கெட்ட வார்த்தையாக பார்க்கப்படுகிறது. திருமணத்திற்கு முன்பு ஆணும், பெண்ணும் இணைவது கலாசார சீர்கேடு என சுழற்றும் சமூக சாட்டைக்கு பயந்து நமது உடலியக்க தேவைகளை உள்ளுக்குள் புதைத்துக் கொண்டு வாழ்கிறோம். தாமதமான திருமணம் உடல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் கூட பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. தாமதமாக திருமணம் செயது கொள்ளும் பெண்களுக்கு குழந்தை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகிறது. கருத்தரிக்க தாமதம். அப்படியே கருத்தரித்தாலும் சுகப்பிரசவம் கேள்விக்குறி என்ற நிலை.

காலதாமதமாக திருமணமானவர்களுக்கே அதிகமாக சிசேரியன் பிரசவம் நடக்கிறது. பாட்டி காலத்திலும் அதற்கு முன்பும் வாழ்ந்தவர்கள் அறுவைச் சிகிச்சையை அறிந்ததில்லை. அவர்கள் ஆரோக்கியமான வயதில் திருமணம் செய்து கர்ப்பமடைந்தனர். எளிதாக குழந்தை பெற்றுக் கொண்டனர. அதிகமாக சுகப்பிரசவங்களே நடந்தன.

இன்று, இயந்திரங்கள் வேலைகளைச் செய்வதால் இளைய தலைமுறையினர் உடலுழைப்பை உணர வாய்ப்பே இல்லாமல் போய் விட்டது. படிப்பு, வேலை, சொநத காலில் நின்ற பிறகே இல்லறம் என்றெல்லாம் கூறி திருமணத்தை தாமதமாக செய்து கொள்கிறார்கள்.

வயது முதிர்வடையும் போது உடல் வளைந்து கொடுக்கும் தன்மையை இழக்கிறது. இடுப் பெலும்பு வளைந்து கொடுக்கும் வயதைத்தாண்டி திருமணம் செய்துகொள்ளும்போது அநேக பெண்களுக்கு சிசேரியன் அவசியமாகி விடுகிறது.

ஆண்கள், தாமதமாக திருமணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தால் தவறான பழக்கம் உடையவர்களாகிறார்கள். அதனால் திருமண சமயத்தில் வீரியம் குறைந்து தந்தையாகும் தகுதியை பலர் இழக்கின்றனர்.

இயற்கை இச்சைகளை தீர்ப்பதற்காக பல்வேறு முறைகளை கையாள்வதுடன் இணையத்தள தேடல் என மாற்று வழிகளில் இன்றைய இளைஞர்கள் பயணப்படும் பின்னணியில், தள்ளிப்போடப்படும் அவர்கள் திருமணம் இருக்கிறது. இதனால் தற்காலிக உணர்வுத் தேவைகளை முறைகேடாக அணுகப் போய், அதனால் எயிட்ஸ் அதிகரிப்பு, கள்ளக்காதல் போன்ற கலாசார சீரழிவும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

அதற்காக இன்றைய காலத்தில் மீண்டும் 15 வயதிற்குள் பால்ய விவாகம் செய்வது சாத்தியமில்லை. ஆனால் இளம் பருவத்தில் திருமணம் செய்து வைக்கும் வழக்கத்திற்கு மாற முயற்சிக்கலாம். இன்றைய இளைய தலைமுறை கல்வியில் அதிக அக்கறை காட்டிவருகிறார்கள். நல்ல படிப்பு, அதற்கேற்ற வேலை, கை நிறைய சம்பளம் என்று ஒரு இலட்சியத்தை மனதில் பதித்துக் கொண்டு அதை சாதித் தும் விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் படிப்புக்கேற்ற வேலை கிடைத்ததும் அதற்கு மேலும் தள்ளிப் போடாமல் தாமதமின்றி திருமணம் செய்து கொள்வது அவசியம்.

இளம்வயதில் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளின் பெற்றோர் நலல ஆரோக்கியமாக இருபபார்கள். அதனால் பிறக்கப் போகும் தங்கள் பேரன், பேர்த்திகளை அவர்கள் தங்கள் பொறுப்பில் பார்த்துக் கொள்வார்கள்.

இதனால் தலையாய பிரச்சினையான குழந்தை வளர்ப்பது கூட தம்பதிகளுக்கு சாதாரண விடயமாகி விடுகிறது. இந்த யதார்த்தம் புரிந்தால் இளம் வயதில் இல்லறமே நல்லறம் என்பது ஆணியடித்த மாதிரி மனதில் பதிவாகி விடும். ஆகவே படிப்பை முடித்ததும் கையில் வேலை அப்பவே கல்யாணம் என்று வாழ்க் கையில செட்டிலாகப் பாருங்க!

# என் ப்ரெண்ட போல யாரு மச்சான்


ஒரு நல்ல நண்பன் இருந்தாலும் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர் ஆங்கிலப் பழமொழி. அன்பாக இரு. அனைத்து மதங்களின் போதனை இது. அன்புடன் இருப்பது என்பது பொறுப்புடன் கூடிய ஒரு முடிவு. இன்றைய நட்புகளை எடை போட்டால் பெரு மூச்சுதான் பெரிதாய் வரும். உல்லாசத்துக்காக ஒன்று சேர்ந்தவையே நட்பாக இருக்கின்றன என்ற ஒருவரின் விமர்சனம் இன்றைய நட்புலகத்துக்கு வெகுவாகப் பொருந்தும்.

இன்று பெரும்பாலானவர்களின் அன்பு பாரபட்சம் பார்த்தே ஏற்படுகிறது. தேவையானபோது தொடர்பு கொள்வதும், தேவைக் காக பழகுவதும், கூடிப் பொழுது போக்குவதுமே நட்பென்று புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. நிஜத்தில் அது நட்புமல்ல, அன்புமல்ல, வெறும் சுய நலமே!

"பிறரைப் பார்த்து நீ புன்னகைப் பது கூட ஒரு அறச் செயல்" என்று நபிகள் நாயகம் சொல்கிறார். ஆனால் வாய்விட்டுச் சிரித்தாலோ, அனைவரிடமும் சிரித்துப் பழகினாலோ சமூக வழக்கில் தப்பாய்ப் பார்க்கும் கண்ணோட்டம் பரவி இருக்கிறது. அப்படி இருக்கும் போது நாமே வலிய வந்து எல்லோரிடமும் சிரித்துப் பழகி தொடர்ந்து அன்புறவில் ஈடுபடுவது சாத்தியமற்ற ஒன்றுதான். இருந்தாலும் நாம் எத்தனை பேருடன் நட்புறவுடன் இருக்கிறோமோ, அதுவே நாம் அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்ததற்கான அடையாளம்.

என்னை நேசிப்பவரை நான் நேசிப்பேன், எனக்கு உதவி செய்தவருக்கு நான் உதவி செய்வேன் என்பதுவே பலரின் எழுதப்படாத அன்பு இலக்கணம். பழிக்குப் பழி என்பதற்கும், இதற்கும் வித்தியாசமே இல்லை.

"மற்ற எல்லோருமே வெளியே செல்லும்போது உள்ளே வருபவன் தான் உண்மையான நண்பன்" என்று அறிஞர் டாக்டர் பில் மெக்கிராவ் சொல்வார். ஆமாம், உங்களிடம் எதை எதையோ எதிர்பார்த்துப் பழகியவர்கள் எல்லாம் உங்களிடம் ஏதுமில்லை என்று அறிந்து விலகிச் செல்லும் போது, உங்களுடன் கரம் கோர்க்க, உங்களின் துயர் போக்க வருபவனே உண்மையான நண்பன் ஆவான. இதைத் தான் "இடுக்கண் களைவதே நட்பு" எனறு வள்ளுவர் இலக்கணப்படுத்துகிறார்.



நீங்கள் நட்பு நிறைந்தவரா? என்பதை சோதிக்க உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய சில கேள்விகள்

என்னிடம் எதுவுமே சரியில்லை என்கிறபோதும் அணுகிப் பேசும் நண்பனை பெற்றிருக்கிறேனா?

ஒத்துப்போகாத விடயங்களின் போது அவனுக்கு தனித்தன்மை இருப்பதை ஆமோதிக்கிறேனா?

வருத்தத்தில் இருக்கும் நண்பனின் சூழலை சமாளிக்க எனக்குத் தெரிந்திருக்கிறதா?

நண்பனின் சில பழக்கங்கள் பிடிக்காதபோது அதைப் பற்றி அவனிடம் வெளிப்படையாக பேசுகிறேனா?

தேவையென்றால் நண்பனிடம் தயக்கமின்றி உதவி கேட்கிறேனா? உதவிக்கு நன்றி கூறுகிறேனா?

நண்பனின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் நடக்கிறேனா?

நண்பன் ஒரு புதிய நணபனைச் சந்திக்கும்போது, நம் நட்புக்கு இடையூறு வந்துவிட்டது என்று எண்ணுகிறேனா?

கடைசி இரு கேள்விகளைத் தவிர மற்ற கேள்விகளுக்கு ஆம் என்பதில் வராவிட்டால் நீங்கள் உண்மையான நண்பனை அடையவோ, உண்மையான நண்பனாக மாறவோ இன்னும் நிறைய பயணிக்க வேண்டும.

உங்கள் நட்புறவை பரிசீலிக்க விரும்பினால் உங்கள் வாழ்வின் முக்கியமான 3 உறவுகளை பட்டியலிடுங்கள. அவர்கள் ஏன் உங்களுக்கு முக்கியமானவர்கள்? அவர்களுக்கு அந்த விசேட இடத்தைப் பெற்றுத் தந்த குணங்கள் என்ன? அவர்களின் கஷ்டங்களைப் போக்க நான் என்ன செய்ய தயாராக இருக்கிறேன்? என்று பட்டியலிடுங்கள். அவர்களின் சிறப்பு குணங்கள் உங்களுக்கு ஏற்படவும், அதே குணத்துடன் பிறருடன் நேசமாகப் பழகவும் முயற்சி செய்யுங்கள்.

ஒருவரோடு ஒருவருக்கு உள்ள உறவில் மட்டுமே நாம் முழுமையாக நாமாக இருக்கிறோம். நாமிலிருந்து பிரிந்த நான் அழிந்து விடும். அப்படியென்றால் நட்பு எப்படி இருக்க வேண்டும் என்று கேட்கிறீர்களா? முகம் மலர பேசுவதல்ல, அகம் மலர பழகுவதே நட்பு என்கிறார் வள்ளுவர். ஒருவனுக்கு எப்படிப் பட்ட நண்பன் தேவை என் பதை ஆங்கிலக் கவிதை ஒன்று இப்படி வரையறுக்கிறது.

தன் மனத்தை அப்படியே வெளிப்படுத்த முடிந்தவன் எபபோது வாயை மூட வேண்டும் என்று அறிந்தவன்

உணவையும், நல்ல நகைச் சுவைகளையும், சூரிய அஸ்த மனத்தையும் பகிர்ந்து கொள்பவன்.

உங்களுடன் பெரியவனாகவோ, சிறியவனாகவோ நடிக்காமல் தோழமையுடன் இருப்பவன்

நீங்கள் நீங்களாகவே இருக்க அனுமதிப்பவன் எவனோ அப்படிப்பட்ட நண்பனே உங்களுக்குத் தேவை நட்பு பேணுங்கள் நல்லவையெல்லாம் கூடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய நேரத்துக்கு உணவு உண்ணுங்கள்



காலை உணவு உடலுக்கும்,மூளைக்கும் சிறந்த ஊட்டச்சத்தாகும். காலை உணவு சாப்பிடாவிட்டால் மூளை சுறுசுறுப்பை இழப்பதால் நீங்களும் சோர்வடைந்து விடுவீர்கள்.மேலும் இடைவேளை நேரத்தில் தேவையில்லாமல் எதையாவது சாப்பிடத் தூண்டும். பிறகு மதியசாப்பாடு சாப்பிட வேண்டிய நேரத்தில் பசியின்மையும், சலிப்பும் ஏற்படும். இதனால் மதிய சாப்பாடும் தடைப்படலாம். சிலர் காலை சாப்பாட்டை குறைப்பதன் மூலம் உடல் எடையை கட்டுப்படுத்தலாம் என்று நினைப்பதுண்டு. தவறாமல் காலை உணவை சாப்பிட்டாலே உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கும் என்பதுதான் உண்மை. காலையில் பணிகள் செய்யத் தொடங்குவதால் உடலுக்கு புரதம் மற்றும் நார்ச்சத்து அவசியம். எனவே கொழுப்பு குறைந்த மற்றும் புரதம் நிறைந்த உணவுகளை உண்ணலாம். முட்டை, பீன்ஸ், பால் பொருட்களை சாப்பிடலாம். முளைகட்டிய தானியம், கொட்டை வகைகள், காய்கறி மற்றும் பழங்களும் காலையில் சாப்பிட ஏற்றது.

**மதியம்:**

மதிய உணவு சரியாக 12.30 மணியில் இருந்து 1.30 மணிக்குள்ளாக சாப்பிடுவது அவசியம். நமக்கு பெரும்பாலான வியாதிகள் வரக்காரணமே காலம் தவறி சாப்பிடுவது மற்றும் கண்டதையும் சாப்பிட்டு வயிற்றைக் கெடுத்துக் கொள்வதால் தான்.

எனவே சாப்பாட்டு நேரத்தை ஒழுங்காக கடைப்பிடித்தால் சில வியாதிகளை கட்டுப்படுத்த முடியும். காலை உணவுக்குப் பின் சிலர் நொறுக்குத் தீனி, டீ, ஜூஸ் என்று கண்டதையும் சாப்பிடுகிறார்கள். இது மதிய உணவை தள்ளிப் போடச் செய்யும். மதிய உணவும் உடல் நலத்துக்கு மிகவும் உகந்தது. ஏனெனில் நாம் பகல் முழுவதும் உழைப்பதால் உடலுக்கு சக்தி தேவை. அதற்கு மதிய உணவுதான் சரியானது.

எனவே எக்காரணத்தைக் கொண்டும் மதிய உணவை தவற விடாதீர்கள். மதிய உணவுக்குப் பிறகு சிறிது பழ ஜூஸ குடிக்கலாம். எலுமிச்சை, அப்பிள், திராட்சை ஜூஸ் போன்றவை நல்லது. மதிய உணவு தரமானதாக இருக்க வேண்டும்.தரமற்ற உணவுகள் செரிமானம் ஆகாமல் பாதிப்பை ஏற்படுத்தும். உடல் எடை கூடவும் வாய்ப்புள்ளது.

**இரவு:**

இரவு உணவு நல்ல தூக்கத்திற்கு வழி வகுக்கும். பெற்றோருடன் ஒன்றாக அமர்ந்து இரவு உணவை சாப்பிடுவது சிறந்த பலன்களை தருவதாக ஒரு ஆய்வு கூறுகிறது. மாதத்தில் அதிக நாட்கள் பெற்றோருடன் அமர்ந்து சாப்பிட்ட பருமனான குழந்தைகளின் எடை 15 சதவீதம் குறைந்திருந்தது. இதற்கு பெற்றோரின் கண்டிப்பும், கண்காணிப்பும் ஒரு காரணம். மற்றொரு ஆய்வு, "பெற்றோருடன் ஒன்றாக இரவு சாப்பாடு சாப்பிடும் பழக்கமுள்ள டீன்ஏஜ் குழந்தைகள் மது, போதை போன்ற தவறான பழக்கத்தின் பக்கம் செல்வதில்லை" என்று கூறுகிறது. உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் வழக்கத்தைவிட ஒரு மணி நேரம் முன்பாக இரவு உணவைச் சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும். இரவு பெரும்பாலும் ஓய்வுதான் என்பதால் அளவோடு உணவு சாப்பிட்டால் போதுமானது.

## காலத்தால் அழியாத கானங்கள் ...

**பாடியவர்: T.M. சௌந்தர்ராஜன்**
**உணர்வு:- தெய்வீகம்**




புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே- எங்கள்
புருஷோத்தமன் புகழ் பாடுங்களே
வண்டாடும் கங்கை மலர்த் தோட்டங்களே
எங்கள் மதுசூதனன் புகழ் பாடுங்களே
(புல்லாங்குழல்)

பன்னீர் மலர் சொரியும் மேகங்களே-எங்கள்
பரந்தாமன் மெய்யழகைப் பாடுங்களே
தென்கோடி தென்றல் தரும் ராகங்களே- எங்கள்
ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி புகழ் பாடுங்களே- எங்கள்
ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி புகழ் பாடுங்களே
(புல்லாங்குழல்)

குருவாயூர் தன்னில் அவன் தவழ்கின்றவன்- ஒரு
கொடியோடு மதுராவை ஆள்கின்றவன்
திருவேங்கடத்தில் அவன் அருள்கின்றவன்- அந்த
ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன்- அந்த
ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன்
(புல்லாங்குழல்)

பாஞ்சாலி புகழ் காக்கத் தன் கை கொடுத்தான் -அந்த
பாரதப் போர் முடிக்க சங்கை எடுத்தான்
பாண்டவர்க்கு உரிமையுள்ள பங்கைக் கொடுத்தான் - நாம்
படிப்பதற்கு கீதையென்னும் பாடம் கொடுத்தான் -நாம்
படிப்பதற்கு கீதையென்னும் பாடம் கொடுத்தான்
(புல்லாங்குழல்)

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்:**
**ரி.தர்ஷியா**
**(வயாவிளான்)**

அன்பு வாசகர்களே!

வலம்புரி- சங்குநாதம் பகுதிக்கு தங்களிடமிருந்த சிறுகதை, சிறுவர்கதை, சிறுவர் பாட்டு, கட்டுரை, கவிதை உள்ளடங்கலான தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**ஆக்கங்களை: ஆசிரியர்,**
**வலம்புரி-சங்குநாதம்,**
**இல.3, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## ஈழத்து கவிதைகள்

## விஞ்ஞான ஆசிரியர்

மழையோடுதான்
விடிகிறது காலைப்பொழுது
நான் குளிக்குமுன்னமே தான்
குளித்த பூமரங்கள்
பள்ளிக்கு வந்திருக்கும்
சிறுமிகள்
பெரிய வாத்தியார்
மாமரம்
புற்கள்
சின்ன வகுப்புப் பிள்ளைகள்
என் வாசல் ஒரு பள்ளிக்கூடமாக
உதவி செய்த காலைமழை
இன்னும் வாழ வேண்டும்
நாளையும் வர வேண்டும்
என் வாசலில் மரங்களின் கல்வி
ஓங்கி
கனிய வேண்டும்
பூமரத்தின் முகங்களெல்லாம்
புன்னகைகள்
அவைகளுக்கு
பிடித்த பாடம் நடக்கிறது
குளிர்
என் போர்வையை
அவைகளுக்கு
நான் தரத் தேவையில்லை
பாடம் ஏறாது
வெயில் வருகிறது
நிலத்தை உலர்த்துதல் பற்றி
இருட்டை விரட்டியடித்து
தலையை எப்படி நிமிர்த்துதல்
என்று
பிள்ளைகளுக்குச்
சொல்லிக்கொடுக்க
வெயில் வருகிறது
வெயில் விஞ்ஞான ஆசிரியர்.

***ஒரு கூடைக்***
***கற்பனையின் துளிர்***

பேருந்தின் தலை வயிறு வால்
முழுக்க
இரை சமியாமல் - ஒரு வாந்தி
எடுத்தால் நல்லதென்று
நினைக்கின்ற நாலு சக்கரத்துக்
கழுதை
ஒரு பழைய எருமை
எரிபொருளாய் வைக்கோல்
தின்கிறதோ என்று
நான் கற்பனையின் துளிர்
நோண்ட
போகிறதா இல்லை போவதைப்
போல் போவதைப் போல்
சமாதி ஆகிறதா
ஓரிடத்தில் நின்று
சிறுநீர் கழித்ததைப் போல்
ஒரு பையன்
இரு சிறுமி
தாயோடு
இன்னுமொரு
கிழவியென
ஐவர் இறங்கிவிட
இரு வணிகர்
இவர்கள்
இருவரது கரங்களிலும்
இரு பொதிகள் என
திரும்ப
சாப்பிட்ட மாடு உறுமியது
நான் நோண்டிக் குவித்த
கற்பனையின் துளிர்கள்
ஒரு கூடையாகி
வெறும் கையாய் பேருந்தில்
ஏறி இருந்த நான்
என் இடம் வந்து
இடத்தில்
என்னை வரவேற்கும்
மரம் வந்து
அதிலேயாரோ கூர் ஆயுதத்தால்
எழுதிவைத்த
சமகாலத்து
ஊர்க் காதல் பட்சிகளின்
நாமங்கள் புலப்பட
உள்ளம் குளிர்ந்தது
மாதிரித்தான் இருந்தது
இறங்கும்போது பெரிய சுமை
நான் காதலிக்கும் கவிதைப்
பெண்ணுக்குக் கொடுக்கலாம்
வெள்ளைக் காகிதங்களில்
அவள் சுமந்து திரிவாள்
கை சோராமல்
பெரிய பலசாலியாக அவள்
இருப்பதனால்.

**சோலைக்கிளி**

# நுளம்பு விரட்டிகளால் ஏற்படும் ஒவ்வாமைகள்



இந்த நுளம்புத் தொல்லை தாங்க முடியலைடா நாராயணா!' இப்படிச் சொல்லாத ஆள் யார்? பெரிய பெரிய பிரச்சினைகளை கூட எளிதாகச் சமாளிக்கிற நமக்கு, இந்த நுளம்பு தொல்லையில் இருந்து தப்பிக்கத் தான் வழி தெரிவதில்லை. நுளம்புச்சுருள், மின்சார நுளம்புவிரட்டி தொடங்கி தடவிக் கொள்ளும் க்ரீம் வரை பல கவசங்களைப் பயன்படுத்தியும் அவற்றிடம் தோற்றுக்கொண்டேதான் இருக்கிறோம்! மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா என வரிசை கட்டுகின்றன நுளம்புகளின் மூலம் பரவும் நோய்கள். நுளம்பு விரட்டிகளால் நமக்கு இந்த நோய்களில் இருந்து பாதுகாப்பு தானே? இப்படிக் கேட்பவர்களுக்கும் அதிர்ச்சி காத்திருக்கிறது. நுளம்பு விரட்டி மருந்துகளால் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய் தாக்குதலுக்கு ஆளாகிறோம் என அதிர்ச்சி அளிக்கின்றனர் நுரையீரல் நோய சிகிச்சை நிபுணர்கள். அவர்கள்கூறுவது என்ன?

'நுளம்புகளை விரட்ட பெரும்பாலான மக்கள் நுளம்பு சுருளை பயன்படுத்துகிறார்கள். சுருள் அலெத்ரின், ஈஸ் பயோத்ரின் போன்ற செயற்கையான வேதிப் பொருட்களால் செய்யப்படுகிறது. இந்த சுருளை மணிக்கணக்காக பூட்டிய அறைக்குள் எரியவிடும் போது தலைவலி, கண் எரிச்சல் போன்றவை ஏற்படும்.

இது ஒரு எச்சரிக்கை மணி. இந்த நிலையிலே நுளம்புச்சுருள் கொளுத்துவதை தவிர்த்து விடுவது நல்லது.

தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் மூக்கிலும் கண்களிலும் நீர் ஒழுகுதல், மூச்சிரைப்பு போன்றவை ஏற்படும். தொண்டையில் வலி, அலர்ஜி, எரிச்சல், நோய்த் தொற்று ஏற்படும். வறட்டு இருமல் அதிகமாக வரும். 'சைனசிடிஸ்' ஏற்பட்டு மூக்கு அடைத்துக்கொள்ளும். சில நேரம் மூக்கின் உள்ளே தொற்றுக்கிருமிகள் அதிகமாகி சீழ் கூட பிடிக்கலாம். ஆரம்ப அறிகுறிகளின் போதே அலர்ஜி உள்ளவர்கள் சுருள் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு மருத்துவரைப் பார்த்து உரிய சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ருளில் இருந்து வரும் புகையால் நுரையீரலும் பாதிப்படைகிறது. புகை நுரையீரலை அழற்சி அடையச் செய்து ஆஸ்துமா நோயை ஏற்படுத்துகிறது. இதனால் சிலருக்கு 'ஆஸ்த் மாடிக் அட்டாக்' கூட ஏற்படும். நுளம்புச்சுருள் புகையை சுவாசிப்பது என்பது 100 சிகரெட் குடிப்பதற்குச் சமமான விளைவுகளை ஏற்படுத்தும். கதவை கொஞ்சமாக திறந்து வைக்க வேண்டும். அறையில் காற்றோட் டம் இல்லையென்றால், நுளம்பு விரட்டித் திரவங்களும் தும்மல், கண் எரிச்சல், மூச்சுவிடுவதில் சிரமம் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். நுளம்பை விரட்டும் க்ரீம்களை தடவிக் கொள்வது கூட சிலருக்கு தோலில் ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடும்.

பைப்புகள் மூலம் அடிக்கப்படும் நுளம்பு மருந்துகளால் ஏற்படும் புகைமண்டலமே சிலருக்கு மூச்சுத்திணறலை உண்டாக்கும். சைனஸ் உள்ளவர்களுக்கு இடைவிடாத தும்மல் ஏற்படும். இப்படி புகை போடும் போது துணியால் மூக்கையும் வாயையும் மறைத்து கட்டிக்கொள்ள வேண்டும். நுளம்புளை விரட்ட சிலர் ஸ்பிரே அடிக்கிறார்கள். இது மூச்சுத்திணறல், தலைசுற்றல் ஆகிய பின்விளைவுகளை கொண்டுவரும்.

அதனால் நுளம்பை விரட்ட நல்ல தரமான துணிகளில் தயாரிக்கப்பட்ட நுளம்புவலைகளை பயன்படுத்தலாம் விலை மலிவான நுளம்பு வலைகளை பயன்படுத்தினால் போதிய காற்றோட்டம் இல்லாமல் மூச்சுவிடுவதில் பிரச்சினை ஏற்பட்டு தூக்கம் பாதிக்கும். மட்டமான நிறமூட்டிகளை பயன்படுத்தி தயாரிக்கும் நுளம்புவலைகளை பயன்படுத்தினால் அதில் இருந்து வரும் ஒருவித துர்நாற்றம் தலைசுற்றல், வாந்தி, மயக்கத்தை ஏற்படுத்தும்..." என எச்சரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# ஒரு நாள் கூத்து





'அட்டகத்தி' தினேஷ் மற்றும் 'அமரகாவியம்' மியா ஜார்ஜ் நடிப்பில் 'ஒரு நாள் கூத்து' என்ற புதிய படம் உருவாக உள்ளது.

புதுமுக இயக்குநர் நெல்சன் இயக்கும் இப்படத்திற்கு 'பண்ணையாரும் பத்மினியும்' படத்திற்கு இசையமைத்த ஜஸ்டின் இசையமைக்க இருக்கிறார்.

'அமரகாவியம்' படத்திற்கு பிறகு 'இன்று நேற்று நாளை' படத்தில் விஷ்ணுவுக்கு ஜோடியாக நடித்து வரும் மியா ஜார்ஜ் தற்போது இந்த புதிய படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார்.

மார்ச் 30 படம் சென்னையில் தொடங்குகிறது. கிராமத்து கதையான இதில் லட்சுமி என்ற கிராமத்துப் பெண்ணாக மியா நடிக்கிறார். முக்கால் வாசி படப்பிடிப்பு திண்டுக்கல்லில் நடைபெற இருக்கிறதாம்.




# கறுப்பு தினம் என்று கருத்து தெரிவித்த ரஜினி !

கோச்சடையான் பட வெளியீட்டின் போது ரஜினிகாந்த் டுவிட்டரில் இணைந்தார். முதல் டுவிட்டாக வீடியோ ஒன்றை வெளியிட்டார்.

அதிகப்படியாக டுவிட்டரில் எந்தவித கருத்தும் அவர் தெரிவிக்கவில்லை. தொடர்ந்து டிசம்பர் 12இல் தன்னுடைய பிறந்த நாளுக்கு வாழ்த்துகள் சொன்ன பிரதமர் மோடி, கலைஞர் கருணாநிதி மற்றும் பலருக்கும் நன்றிகளை டுவிட்டரில் தெரிவித்தார்.அதே நாளில் 'லிங்கா' வெளியானது குறிப்பிடத்தக்கது.

லிங்கா பிரச்சினையின் போது கூட எந்தவித கருத்துகளையும் டுவிட்டரில் தெரிவித்ததில்லை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு தற்பொழுது டுவிட்டரில் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் மறைவிற்கு இரங்கல் செய்தியை டுவிட் செய்துள்ளார்.



தனக்கு பிடித்தமான தலைவராக லீ குவான் யூவைத்தான் எப்போதுமே எந்த பேட்டியிலும் சொல்கிறவர் ரஜினி. தன்னுடைய டுவிட்டரில், " அவர் மறைவு எனக்கு கறுப்பு தினம். சிங்கப்பூர் மக்கள் அடையும் வருத்தத்தினை நான் உணர்கிறேன்.

சிங்கப்பூருக்கே மிகப்பெரிய இழப்பு இவரின் மறைவு" என்று தன்னுடைய இரங்கல் செய்தியை வெளியிட்டிருக்கிறார் ரஜினிகாந்த். இதுவரை ரஜினிகாந்த் 12 டுவிட்களை பதிவு செய்துள்ளார்.

16 லட்சம் பேர் இவரை பின் தோடர்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது - கமல் புலம்பல்



உலக நாயகன் கமல்ஹாசன் படம் பார்த்து தான் பலரும் புரியாமல் புலம்புவார்கள். தற்போதே அவரே ஒரு விஷயத்திற்காக புலம்பியுள்ளார். உத்தம் வில்லன் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் அவருடைய வீட்டிலேயே நடந்தது.

இதில் பேசிய கமல் 'பிரச்சினைகள் எப்போதும் என்னை மட்டுமே குறி வைக்கின்றன, தசாவதாரம் என்னுடைய கதை என்று ஒருவர் கூறினார், மும்பை எக்ஸ்பிரஸ் தலைப்பு வைக்ககூடாது என்றார்கள். மேலும், சண்டியர் என்று தலைப்பும் வைக்க கூடாது என்று கூறி, படத்தின் தலைப்பை மாற்ற வைத்தார்கள்.

ஆனால், அதே டைட்டிலில் ஒரு படம் தற்போது வெளிவந்துள்ளது. சிலர் இது நல்ல வண்டி, யார் வேண்டுமானாலும் ஏறிக் கொண்டு பயணம் செய்யலாம் என்று என்னை நினைத்து விடுகிறார்கள் போல' என கமல் பேசியுள்ளார்.

# அஜித்துடன் நடிக்க மறுக்கும் நடிகைகள், ஏன்?



தமிழ் சினிமாவில் அனைத்து கதாநாயகிகளுக்கும் அஜித்துடன் ஒரு படத்திலாவது நடித்து விட வேண்டும் என்பது தான் விருப்பமாக இருக்கும். ஆனால், சமீபத்தில் சில நடிகைகள் சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கும் படத்தில் முதலில் ஓகே சொல்லிவிட்டு பிறகு நடிக்க மறுக்கிறார்களாம்.

ஏன்? எதற்காக? என்று விசாரித்தால், அந்த கதாபாத்திரம் அஜித்தின் தங்கச்சியாக வரவேண்டுமாம். எல்லோரும் முதலில் ஏதோ இரண்டாவது நாயகி என வந்துள்ளனர். ஆனால், இதை கேட்டு அஜித்துக்கு, தங்கச்சியாக எப்படி நடிப்பது? ஹீரோயின் சான்ஸ் இருந்தால் கூறுங்கள் என்று சொல்லிவிட்டு கிளம்பிவிடுகிறார்களாம்.

# தமிழ் புத்தாண்டில் களம் இறங்கும் தல-தளபதி

அஜித், விஜய் படங்கள் கடைசியாக ஜில்லா, வீரம் ஒரே நாளில் வந்தது. இந்நிலையில் மீண்டும் இருவரும் ஒரே நாளில் களம் இறங்கவுள்ளனர்.

ஆனால், இந்தமுறை திரையரங்கில் இல்லை, சமூக வலைத்தளத்தில். ஆம், புலி படத்தின் பர்ஸ்ட் லுக் ஏப்ரல் 14ஆம் திகதி சித்திரை முதல் நாள் தான் வரவிருக்கின்றது.

அன்றைய தினம் தான் அஜித்-சிவா படத்தின் பூஜை போடப்படுகிறது. மேலும், இப்படத்தின் பர்ஸ்ட் லுக் வந்தாலும் ஆச்சரியம் இல்லை என கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அப்புறம் என்ன? தல-தளபதி ரசிகர்களுக்கு தமிழ் புத்தாண்டில் முதல் நாளே கொண்டாட்டம் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளை மைத்திரி அரசும் கண்டுகொள்ளவில்லை

உள்நாட்டுப்போர் ஆரம்பித்த காலம் தொட்டு பல இன்னல்களை தமது வாழ்நாளில் அனுபவித்துக்கொண்டு ஊரிழந்து, உறவிழந்து நிர்க்கதியாகியுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்களுக்கு போரின் கொடூரக்கரங்களிலிருந்து விடுதலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய இலங்கை அரசு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் நடவடிக்கைகளை முற்றுப்புள்ளி வைக்காது தொடர்ந்துகொண்டு செல்கிறதே தவிர புண்பட்ட இதயங்களை ஆற்றுவதற்கு முற்படத்தவறிவிட்டது.

உரிமையக் கேட்டால் மறுப்பு, உண்மையைக் கூறினால் எதிர்ப்பு, இது இலங்கையில் இன்னும் தமிழர்களை மையப்படுத்திய மத்திய அரசின் நடவடிக்கையாகத் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இது தமிழர்களின் துரதிஷ்டவசமானதா அல்லது இது தான் தமிழரின் விதியா அல்லது சதியா? இவை நீங்குமா, நீக்கப்படுமா என்று கேள்விகளை எழுப்பினால் பதில் கிடைக்குமா என்ற கேள்வி மட்டும்தான் மிஞ்சி நிற்கும். இந்தக்கேள்விகளுக்கான பதிலைத் தரவல்லவர்கள் ஊமையாகிப்போனதால் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் இறுதியில் ஏமாற்றத்தை மட்டுமே தரும் என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதப்போராட்டம் என்ற போர்வையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் சிங்களவர்களையும் பாதித்தது என்பது உண்மையென்றாலும் தமிழர்களை அழிக்கும் போராட்டம் ஒன்றே முன்னெடுக்கப்பட்டது என்பதை வெளிப்படையாக ஏற்றுத்தான் ஆக வேண்டும். காரணம் நடந்த உண்மைகள் இன்றும் தடயங்கள் இன்றி அழிக்கப்படவில்லை. அவை அழிக்கப்படும் நிலையைக் கடந்துவிட்டதை இலங்கையும் சரி சர்வதேச நாடுகளும் சரி உணர்ந்துவிட்டன. இனி உண்மையை மறைக்க முடியாது, வேண்டுமென்றால் உண்மையைத் திரிவுபடுத்த முற்படலாம்.

இறுதிப்போரில் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர்வது அவையூடாக இனியொரு முறை இலங்கையில் இன அழிப்பு என்பது இடம் பெறுவதைத் தடுக்க உதவியாகயிருக்கும். இதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்வது அவசியம். குறிப்பாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தமிழர்கள் ஆட்சிமாற்றத்திற்கு எத்தகைய பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் எதை எதிர்பார்த்து மகிந்த ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டிய பாரிய பொறுப்பில் உள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் நடந்த அட்டூழியங்களை இந்த உலகத்தில் வியாபித்துள்ள தமிழர்கள் என்றும் மறக்கவும் மாட்டார்கள். மன்னித்து விடவும் மாட்டார்கள் அந்தளவுக்கு மகிந்தவின் ஆட்சிக்காலம் தமிழ்ர்களுக்கு ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது. இறுதிப்போரில் கொத்துக்குண்டுகளைப் பயன்படுத்தி பச்சிளம் பாலகர்கள் உட்பட பல ஆயிரக்கணக்கான மக்களை கொன்றொழித்துவிட்டு உயிரிழந்தவர்கள் அனைவரும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்றுகூறி தப்பிக்கமுற்பட்டதையும் யாரும் மறந்துவிடமாட்டார்கள்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிவிட்டேன் என்ற ஆணவத்தில் மகிந்தவும் அவரது சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆடிய ஆட்டமும் அடக்கப்பட்டு அவர்களுடன் இருந்தவர்களே, எதிராக செயற்படுமளவிற்கு நிலைமை மாறியது. அதற்கும் தமிழர்களே காரணம் என்பதை மைத்திரி அரசு அறிந்திருந்தும் அதை ஏற்றுக் கொண்டாலும்கூட தமிழர்களை இரண்டாம் தரப்பிரஜைகளாகவும் அவர்களின் உரிமைகளை மறுக்கும் நடவடிக் கைகளை முன்னெடுப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றது.

வடக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் மந்தகதியில் இடம் பெற்றுவரும் அதேவேளை சிங்களவர்களை குடியேற்றும் நடவடிக்கை துரிதகரியில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மகிந்த ஆட்சியில் இராணுவத்தின் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்ததை கடந்தகாலச் சம்பவங்கள் கட்டியம் கட்டிநிற்கின்ற அதேவேளை இராணுவத்தை வடக்கிலிருந்து அகற்றுவதில் மகிந்தவின் நிலைப்பாட்டிலிருந்து தான் வேறுபடவில்லை என்பதை மைத்திரியும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார் என்று கூறுவ்திில் தவறிருக்க முடியாது.

100 வேலைத்திட்டத்தின் கீழ் தமிழர்களின் அபிலாஷைகளை மைத்திரி அரசு உள்ளடக்கத்தவறியது மட்டுமல்லாது, காணி விடுவிப்புக்கோரிக்கைகளையும் புறந்தள்ளும் நடவடிக்கையினையும் இராணுவத்தின் பிடியினையும் இறுக்கி வருகிறது. இராணுவத்தினை வடக்கிலிருந்து முற்றாக அகற்றி இராணுவ முகாம்கள் அமைக்கப் பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை விடுவித்து மக்களின் மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்துங்கள் என்ற கோரிக்கை இன்னும் வடக்கில் ஓயவில்லை. மாறாக அந்தக்கோரிக்கை நீண்டுகொண்டே செல்கிறது.

இருப்பினும் காணிவிடுவிப்பு நடவடிக்கையில் மெத்தனப்போக்கையும் மக்களின் கோரிக்கையினை உதாசீனப்படு த்துவதிலும் மைத்திரி அரசு, மகிந்த அரசிலிருந்து வேறுபடவில்லை. காணிகளை விடுவப்பதில் இன்றுவரை மைத்திரி அரசும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையினை ஏற்படுத்தவில்லை. இனிமேலும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இல்லை.

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினால் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களுக்கு சொந்தமான 6 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணிகளை விடுவிக்குமாறு எத்தனையோ போராட்டங்களை மக்கள் முன்னெடுத்தபோதும், மத்திய அரசு அதனைப் பொருட்படுத்தவில்லை. மகிந்த ஆட்சியிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மைத்திரி அரசு ஆட்சிப்பீடம் ஏறிய பிற்பாடு 3000 ஏக்கர் காணியை வலி.வடக்கில் முதற்கட்டமாக விடுவிப்பதாக அறிவித்தது. பின்னர் அந்த எண்ணிக்கை சடுதியாக குறைவடைந்து ஆயிரம் ஏக்கர் காணியை விடுக்கவுள்ளதாக அறிவித்தது. இருப்பினும் இறுதியில் சுமார் 400 ஏக்கர் காணியே முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் படைகளின்வசம் தமிழ் மக்களின் காணிகள் பல ஆயிரம் ஏக்கர் உள்ளது. இந்தக்காணிகளை விடுவித்து மக்களை அக்காணிகளில் மீள்குடியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றும் உள்ளது இருப்பினும் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் கூட காணிவிடுவிப்பு, மக்களின் மீள்குடியேற்றம் என்பன கேள்விக்குறியாகவேயுள்ளது. காணிகோரும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வடக்கில் அதிகரித்து வருகிறதே தவிர குறைந்தபாடில்லை.

கொடிய யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்துள்ளதாக சர்வதேச நாடுகளிடம் பாராட்டுக்களை பெற்றுக் கொள்வதற்காக பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்துவரும் மத்திய அரசாங்கம் மக்களிடம் உண்மையாக நடக்கத்தவறிவிட்டது. தேர்தலின் போது ஒருகதை. தேர்தல் வெற்றிக்குப் பின்னர் ஒருகதை கூறி நாடகமாடிக்கொண்டு இருக்கின்றது.

மாற்றத்தை விரும்பி மைத்திரிக்கு வாக்களித்த வடபகுதிமக்களின் வாழ்க்கையில் மத்திய அரசு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக மகிந்தவைப் போன்று வஞ்சகத்தோடு நடந்துகொள்கின்றதா என்ற எண்ணத்தையே தோற்றிவித்துக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் முன்னேற்றம் கண்டுள்ளதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் புகழாரம் சூட்டினாலும் தமிழ் மக்கள் அடிப்படை உரிமைகளை இழந்தவர்களாகவே வாழ்ந்து வருக்கின்றனர். இதனை அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் உணர்ந்திருந்தும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வராமை சர்வதேச நாடுகள்மீது தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை காலப்போக்கில் இழக்கச் செய்துவிடும்.

போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டபோது சர்வதேச நாடுகள் மனித உரிமை விவகாரத்தை ஆயுதமாக மாற்றி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து வந்தன. இதனை யாரும் மறுக்கமுடியாது. முள்ளிவாய்க்காலில இறுதிவரை மீறப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும் என்ற தமிழரின் நம்பிக்கையை சர்வதேச நாடுகள் கட்டியெழுப்புவது அவசியமாதொன்று. அது காலத்தின் கட்டாயமாவுள்ளது.

மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கை அரசுடன் சர்வதேச நாடுகள் சமரசம் செய்துகொள்வதையோ பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதையோ ஈழத்திலும் சரி தமிழகத்திலும் சரி ஏன் புலம்பெயர்ந்தும், இந்த உலகம் பூராகவும் வியாபித்திருக்கும் தமிழர்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஈழத்தில் நடந்த தமிழின அழிப்புக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் என்பதே அனைவரினது அபிலாஷைகளாகும். இதனை சர்வதேச நாடுகள் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்குள்ளது.

சர்வதேச நாடுகள், ஈழத்தில் எஞ்சியுள்ள தமிழர்கள் மீண்டுமொருமுறை இன அழிப்புக்குள்ளாகுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதே வேள்ளை இன ரீதியான அடக்கு முறைக் குள்ளாக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கைகளை துரிதகதியில் முன்னெடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு மீள் குடியேறிய மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுக்க இலங்கை அரசுக்கு அழுத்தம்கொடுக்கவேண்டும். மீள்குடியேற்றம் செய்ய தடையாகவுள்ள படைத்தரப்பை வடக்கிலிருந்து வெளியேற்றி தமிழ்மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தவேண்டும். அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்திக் கொடுப்பதோடு சிங்கள மக்களுக்குள்ள சுதந்திரம், ஜனநாகம் என்பனவற்றை பூரணமாகப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

## இது யாரோடது ?



நானும் என் நண்பனும் பாரில் ஓடர் செய்துவிட்டு காத்திதோம்.

அப்போது அருகில் ஒருவர் போனில் பேசிக்கொண்டு இருந்தார்.

ஸ்பீக் கர் ஒனில் இருந்ததால் மறுமுனையில் பேசிய அவர் மனைவியின் குரல் தெளிவாக கேட்டது,

"ஏங்கநான் இப்பு சொப்பிங்மால் உள்ளே இருக்கேன். நான் சொன்னேனே..

டிஜிட்டல் கமரா.. இங்க இருக்குங்க...

இருபதாயிரம்தான் விலை. வாங்கிகட்டுமா.. .?"

"வாங்கிக்க...!"

"அப்புறம்... நான் கேட்டேனே ஒரு வைர நெக்லஸ்... அதுவும் இங்க இருக்குங்க...

விலைதான் ஒன்றரை இலட்சம் சொல்றான்..."

"ஒன்றரை இலட்சம்தானே... உனக்கு பிடிச்சிருந்தா வாங்கிக்க...!"

"அப்புறம் ஒரு புடைவை பார்த் தேன் ரொம்ப காஸ்ட்லியா சொல்றான்"

"ரேட்ட பாக்காத உனக்கு புடிச்சி இருந்தா வாங்கிடு"

"ஏங்க... அப்புறம் நாம பார்த்தமே ஒரு கார்.. இப்ப ஓபர் போட்டிருக்காங்க ...

விலை பதினெட்டு இலட்சம் சொல்றான்...

உங்க செக் இருக்கு குடுத்துறவா..?"

"ஓகேமா இதெல்லாம் கேக்கலாமா உனக்கு புடிச்சி -ருந்தா போதும்"

"ஓகேங்க... சீக்கிரம் வீட்டுக்கு வாங்கன்னு ..."

என்று கொஞ்சலாய்ச் சொல்லிவிட்டு மறுமுனையல்போனை வைத்தாள்மனைவி.

இவரும் போனைச் சிரித்தபடியே வைத்துவிட்டு திரும்பினார்.

ஒரே நாளில் இவ்வளவு பர்ச்சேஸா...

நாங்கள் மிரண்டு போய்ப் பார்த்துகொண்டிருக்க,

எங்களை பார்த்து சிரித்தபடியே கேட்டாரே ஒரு கேள்வி.

யாரோட மொபைல்ங்க இது..?".



## போடாங்...!!

இரண்டு ஆங்கிலேயர்கள் காய்கறிச்சந்தைக்குச் சென்றார்கள். அங்கு குடை மிளகாய் பார்த்தனர். இது என்ன பழம்?,

அப்பிள் பழம் போல் இருக்கின்றதே என்று வியாபாரியிடம் கேட்டனர்!. அவர் பேசும் தமிழ் இவர்களுக்கு புரியவில்லை.

இவர்கள் பேசும் ஆங்கிலம் அவருக்கு விளங்கவில்லை.

சரி இரண்டு பழங்கள் வாங்கி சாப்பிடலாம் என்றெண்ணி வாங்கினார்கள்.

முதலில் ஒருவன் சாப்பிட்டான். மிளகாய் காரமாக இருந்ததால் அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

கண்ணீரைப் பார்த்த நண்பன் கேட்டான், "ஏன் அழுகிறாய்".?

"இல்லை 10 வருடத்திற்கு முன் என் மாமாவை தூக்கில் போட்டார்கள். அவரை நினைத்தால் அழுகை வந்தது" என்றான்.

பிறகு "இந்தா நீயும்சாப்பிடு" என்று இன்னொரு மிளகாயை நண்பனிடம் கொடுத்தான்.

நண்பனும் ஆர்வத்துடன் சாப்பிட்டான். காரத்தால் அவனுக்கும் கண்ணீர்வந்தது.

அடப்பாவி, உண்மையை மறைத்து விட்டானே என்று கோபம் கோபமாய் வந்தது.

அவன் கண்களில் கண்ணீரைக்கண்டதும், முன்னவன் கேட்டான், "நீ ஏன் அழுகின்றாய்?"


இவன் பதில் சொன்னான். "இல்லை 10 வருடத்திற்கு முன் உன் மாமாவை தூக்கில் போட்ட போது ஏன் உன்னையும் சேர்த்து போடவில்லை என்று நினைத்தேன்" என்றான்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 325


சரவணன் வெருமாள்




கார்த்திக் குமார்




சுலக்சினி ரவீந்திரன்





ரகு ரகுவரன்




மதிப்பெண்ணுக்காகவே தவிர மற்றவர்களை மதிப்பதற்காக அல்ல...

வதனா சீலன்



யது யதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கிரிக்கெட்டும் ரசிகர்களும்




**தோல்வியடையும் போது ஆறுதல் அளிக்காத ரசிகர்களுக்கு வெற்றியை கொண்டாடும் உரிமை இல்லை**




**வெற்றியையும் தோல்வியையும் சகஜமாக எடுத்துக்கொள்ளும் மனநிலை ரசிகர்களுக்கு இருக்க வேண்டும்**




உலகமெங்கும் அனைவராலும் தற்பொழுது பேசப்பட்டு வரும் ஒன்று 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் ஆகும்.

பரபரப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்போட்டி தற்பொழுது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. கிண்ணம் யாருக்கு என்பதே தற்பொழுது விடயம். கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்து ஆகும். ஆனால் அதன் உயிர் மூச்சு இந்தியா என்று சொல்லும் அளவிற்கு தற்பொழுது நிலைமையாகியுள்ளது.

இந்திய அணி கிரிக்கெட் விளையாடுகின்றது என்றால் இந்தியரசிகர்களின் ஆரவாரத்திற்கு அளவே இருக்காது.

எந்தவொரு வேலையாக இருந்தாலும் சரி அதனை விட்டுவிட்டு கிரிக்கெட்டில் மோகம் கொண்டு மூழ்கி இருப்பதே அவர்களது வாழ்க்கையாகி விட்டது.

நடப்புச்சம்பியனாக இருந்த இந்திய அணி உலகக் கிண் ணம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முத்தரப்புத் தொடரில் படுதோல்வியை சந்தித்ததன் காரணமாக உலகக்கோப்பை போட்டியின் லீக் சுற்றை தாண்டுவதே இந்திய அணிக்கு பெரிய சவாலாக ஆரம்பத்தில் கருதப்பட்டது.

உலகக்கிண்ணத்தின் முதலாவது போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய அணி கண்ட வெற்றி இந்திய ரசிகர்களும் ஒரு பெரிய உத்வேகத்தை அளித்தது. பரமஎதிரியான பாகிஸ்தானை வீழ்த்திய தோடு அடுத்து பலம் பொருந்திய தென்னாபிரிக்க அணியை வெற்றி கண்டவுடன் இந்திய அணி ஒரு பலம் பொருந்திய அணியாக அனைவராலும் பார்க்கப்பட்டது. தொடர்ந்து கத்துக்குட்டிகளை துவம்சம் செய்த இந்தியா காலிறுதியில் வங்கதேசத்தையும் வீழ்த்தி தோல்வி என்ற படலமே இல்லாமல் இலகுவாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்திய அணியின் இத்தொடர் வெற்றி மூலம் இந்திய அணிக்குத்தான் உலகக்கிண்ணம் என இந்திய ரசிகர்கள் முடிவு செய்துவிட்டனர்.

கோப்பையை திருப்பித் தரமாட்டோம் என்றெல்லாம் விளம்பரங்கள் வெளிவந்தன. கிண்ணத்துடன் தான் தாயகம் திரும்புவோம் என்றெல்லாம் வீரர்கள் அறிக்கைவேறு விட்டனர்.

அரையிறுதியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு இந்தியா இலகுவாக சென்று விடும் என இந்திய ரசிகர்கள் அசைக்க முடியாத நம்பிக்கையை இந்திய அணி மீது வைத்திருந்தனர்.

ஆனால் பலம்பொருந்திய அவுஸ்திரேலிய அணி சிட்னியில் நடந்த அரையிறுதிப் போட்டியில் இந்தியாவை சட்னி ஆக்கி வீட்டுக்கு அனுப்பி வைத்தது.

இந்தியாவின் தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ரசிகர்கள் வீதியில் இந்திய வீரர்களின் படத்தை எரித்தனர். இந்திய வீரர்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக திட்டித் தீர்த்திருந்தனர்.

இந்திய வீரர்களின் வீட்டுக்கு பாதுகாப்புக்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டதோடு வீரர்கள் விமான நிலையம் வந்திறங்கும் நேரமும் இரகசியம் பேணப்பட்டது.

உலகக் கோப்பை போட்டியில் வங்கதேசம் காலிறுதியில் இந்தியாவிடம் தோற்று வெளியேறியது. இலங்கை தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது. அதேபோல் அரையிறுதியில் நியூசிலாந்திடம் தென்னாபிரிக்கா தோல்வி அடைந்தது. அதற்காக அந்த வீரர்களுக்கு எதிராக அந்த நாடுகளில் போராட்டங்கள் நடைபெறவில்லை. வீரர்களின் வீட்டுக்கு பாதுகாப்பு போடப்படவில்லை. வீரர்களின் படங்களும் எரிக்கப்படவில்லை. வங்கதேச ரசிகர்கள் தங்கள் வீரர்கள் திறமையான முறையில் விளையாடியதற்காக வீரர்கள் பக்கம் நின்றார்கள்.

அதேபோல் தோல்விகண்டு தாயகம் திரும்பிய தென்னாபிரிக்க வீரர்களை அந்நாட்டு ரசிகர்கள் விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றனர். அடுத்த உலகக் கோப்பையை வென்று நாட்டுக்கு பெருமை சேர்க்க வேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டனர்.

உலகக்கோப்பையில் லீக் ஆட்டத்தில் தொடர் தோல்வியை சந்தித்து வரும் தென்னாபிரிக்க வீரர்களுக்கு இந்த ஆறுதல் இதமளித்தது. வீரர்கள் மன நிறைவுடன் வீட்டுக்குச் சென்றனர்.

## ஆனால் இந்தியாவில் என்ன நடக்கிறது?

விளையாட்டில் வெற்றி, தோல்வி சகஜம். வெற்றி பெற்றால் கொண்டாடுவதும் வீரர்களை கடவுள் அளவிற்கு தூக்கிப் பிடிப்பதும் தோல்வி அடைந்தால் அடுத்த நாளே காலுக்குள் போட்டு மிதிப்பதும் இந்தியாவில் மட்டும்தான் நடக்கிறது. இந்நிலை மாற வேண்டும் என்பதே கிரிக்கெட் ஆர்வ லர்களின் விருப்பம். தோல்வியை இயல்பாக எடுத்துக் கொள்ளும் பக்குவமான மனநிலை இருக்க வேண்டும்.

தோல்வியடையும் போது ஆறுதல் அளிக்காத ரசிகர்களுக்கு வெற்றியை கொண்டாடவும் உரிமை இல்லை என்ற தார்மீக உண்மையை இந்திய ரசிகர்கள் உணர வேண்டும்.

க.மதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org